Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU




முரசு – 03 | திருவள்ளுவர் ஆண்டு 2044 ஆடி 10 வெள்ளிக்கிழமை (26.07.2013) பக்கங்கள் 20 | ஓசை – 299
















# இராஜதந்திர அணுகுமுறையில் புதுடில்லி மாற்றம் செய்யாது

## இந்தியப் பிரதமர் தெரிவிப்பு



(புதுடில்லி)

இலங்கையுடனான உறவிலும் இராஜதந்திர அணுகுமுறையிலும் இந்திய அரசு சுமுகமான அணுகுமுறைமையே தொடர்ந்தும் பின்பற்றும் என்று இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கைத் தமிழர் விவகாரத்தில் இந்திய மத்திய அரசாங்கம் எடுத்துள்ள நிலைப்பாட்டில் எவ்விதமான மாற்றமும் செய்யப்படமாட்டாது என்றும் பிரதமர் மன்மோகன்சிங் தெரிவித்துள்ளார். தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு எழுதிய பதில் கடிதத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இலங்கைத் தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு அளிக்க வேண்டும் என்பதில் இந்தியா உறுதியாக இருப்பதாகவும் அவர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசின் 13 ஆவது சட்ட திருத்தம் பற்றியும் அவர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். இலங்கைத் தமிழர்கள் சுய கௌரவத்துடன் வாழ அரசு நடவடிக்கை எடுக்கும் என்றும் தெரிவித்துள்ளார். மேலும், ஒன்றுபட்ட இலங்கையில் தமிழர்களுக்கு சம உரிமை, அதிகாரம் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பிரதமர் மன்மோகன்சிங் தெரிவித்துள்ளார்.

## தொழிற்கட்சி யாழில் மனுத்தாக்கல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணசபை தேர்தலுக்கான வேட்புமனுத்தாக்கல் நேற்று ஆரம்பமானது.

நேற்றுக்காலை 9.00 மணியிலிருந்து வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்ளும் அலுவலகம் யாழ். செயலகத்தில் திறக்கப்பட்டு வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

இலங்கை தொழிற்கட்சி தனது வேட்புமனுவை தாக்கல் செய்துள்ளது. 19 பேரை வேட்பாளர்களாக நியமித்து

19 ஆம் பக்கம் பார்க்க

# வேட்பாளர் தெரிவில் முறைகேடு

# தேர்தல் ஆணையாளரிடம் முறையிட முடிவு

## கூட்டமைப்பில் இன்னும் ஓயாத இழுபறி

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண தேர்தலுக்கான வேட்பாளர் தெரிவின் போது முறைகேடுகள் நிகழ்ந்ததாகக் கூறி தேர்தல் ஆணையாளரிடம் முறையீடு செய்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பலர் தீர்மானம் எடுத்துள்ளதாகத் தெரிவித்தனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு கூட்டமைப்பினரால் ஒதுக்கீடு செய்யப்பட்ட இரு ஆசனங்களின் பங்கீடு தொடர்பாக இப்போது அக்கட்சிக்குள் முரண்பாடு முற்றிவிட்டதாகவும் இதனால் அக்கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் மற்றும் அக்கட்சியின் வவுனியா நகரசபை உறுப்பினர் ஒருவரும் தமது கடும் ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளனர். மேற்படி விடயம் தொடர்பாக இவர்கள் வேட்பாளர் தெரிவு குறித்து தேர்தல் ஆணையாளரிடம் முறையிடவிருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்சிகளுக்கு இடையேயான பங்கீடு முடிவுக்கு வந்துவிட்ட போதும் தமக்கான வேட்பாளர்களை தெரிவு செய்வதில் தொடர்ந்தும் உட்கட்சி இழுபறி தொடர்கின்றது.

அவ்வகையில் தனக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கான ஆசனம் வழங்கப்படவில்லை என்பதன் பின்னணியில் தமிழரசுக்கட்சி முக்கியஸ்தர் பொ.கனகசபாபதி தமது அங்கத்துவம் மற்றும் தற்போது வகித்து வரும் பிரதேச சபை அங்கத்தவர் பதவி

19 ஆம் பக்கம் பார்க்க

## வேலியே பயிரை மேய்கிறதா?

## சட்டத்தை மீறிய யாழ். சட்டத்தரணி



(நமது நீதிமன்ற நிருபர்)

யாழ். சட்டத்தரணி குமாரவடிவேல் குருபரன் போக்குவரத்து விதிகளை மீறிய குற்றச்சாட்டில் நேற்று யாழ் நீதவான் முன் நிறுத்தப்பட்டபோது பத்து ஆயிரம் ரூபா சரீரப் பிணை நிபந்தனையில் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டார் என அறியப்படுகிறது.

சட்டத்தரணி குருபரன் போக்குவரத்து விதிகளை மீறி கைத்தொலைபேசியைப் பாவித்துக்கொண்டு மோட்டார் சைக்கிளை ஓட்டிச்சென்றதாகவும், பொலிஸார் மறித்தபோது தப்பிச்செல்ல முயன்றதாகவும், பொலிஸார் துரத்திச்சென்று அவ்ரைக் கைது செய்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தீவிர தமிழ்த் தேசிய பிரசாரகரான இவர், முழுநேர விரிவுரையாளராக யாழ்.

19 ஆம் பக்கம் பார்க்க

# முல்லை மக்களின் வாழ்வாதாரம்; மீண்டும் கட்டியெழுப்ப முயற்சி

## அமைச்சர் தலைமையில் ஆராய்வு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய கிராமங்களில் மீளக்குடியேறியுள்ள மக்களது வாழ்வாதாரம், அடிப்படை வசதிகள் உள்ளிட்ட ஏனைய விடயங்கள் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா துறைசார்ந்தோரிடம் கேட்டறிந்து கொண்டார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் நேற்று முன்தினம் மேற்படி விடயம் தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது, முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தின் கீழான கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் மற்றும் கருநாட்டுக்கேணி

19 ஆம் பக்கம் பார்க்க

# நல்லிணக்க முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதா?

## அறிக்கை தயாரிக்கிறது பிரித்தானிய தூதரகம்

(லண்டன்)

யுத்தத்துக்குப் பின்னரான இலங்கையின் நிலைவரம் குறித்தும் இனநல்லிணக்கம் குறித்தும் கொழும்பிலுள்ள பிரித்தானிய தூதரகம் நிலைவர அறிக்கையொன்றை தயாரித்து வருகிறது. பிரிட்டிஷ் பிரதமருக்கு அனுப்பிவைப்பதற்காகவே இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

பிரித்தானியாவின் பொதுநலவாய மற்றும் வெளிநாட்டுத்துறை சிரேஷ்ட அமைச்சர் பார்னோஸ் சவீதா வர்சி இதனைத் தெரிவித்துள்ளார். இலங்கையில் எதிர்வரும் நவம்பரில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் மாநாட்டுக்கான பொதுநலவாய கொள்கைகள் பின்பற்றப்படுகின்றதா என்பதை அறிவதற்காகவே

19 ஆம் பக்கம் பார்க்க

# இருபது பாடசாலைகளுக்கு புதிய ஆய்வுகூடம் நிர்மாணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் ஆய்வு கூட வசதியற்ற 20 பாடசாலைகளுக்கு மகிந்தோதய ஆய்வு கூடம் அமைக்கும் திட்டத்தின் மூலம் ஆய்வுகூடங்கள் அமைக்கப்பட்டு வருவதாக யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

இதற்கென கல்வியமைச்சினால் 80 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவித்த அவர், இதனை விட யாழ். மாவட்டத்தில் 162 பாடசாலைகளில் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்திப் பணிகளுக்கென தலா ஐந்து இலட்சம் ரூபா வீதம் கல்வியமைச்சினால் ஒதுக்கீடு செய்யப்

19 ஆம் பக்கம் பார்க்க

# கிராமிய அமைப்புக்களை பலப்படுத்தும் திட்டம்

## ஏழு இலட்சம் நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமாகிய டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய முருகேசு சந்திரகுமார், நாடாளுமன்ற

19 ஆம் பக்கம் பார்க்க

# யாழ்.நூலகத்துக்கு அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

உலக வங்கியின் நிதியுதவியின் கீழ் யாழ்.நூல் நிலைய கேட்போர் கூடத்திற்கு டிஜிற்றல் புரஜைக்டர் ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டிருப்பதாக யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்துள்ளார்.



அண்மையில் உலக வங்கியால் யாழ்நூல் நிலையததிற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட இந்த புரஜக்டர் யாழ்.நூல் நிலைய கேட்போர் கூடத்தில் பொருத்தப்பட்டிருப்பதுடன் இந்தக் கேட்போர் கூடத்தில் நடைபெறும் நிகழ்வுகளை மேலும் மெருகூட்டும் விதத்தில் இந்த டிஜிற்றல் உபகரணம் அமைந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு இரண்டு பக்கத்தில் திரைகளைப் பொருத்தி விடயத்தைப் பார்வையிட முடியும் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)


# யாழ்.மாவட்டத்தில் பழங்கள் உற்பத்தி இவ்வாண்டில் பாரிய வளர்ச்சி

யாழ்.மாவட்டத்தில் விவசாய உற்பத்திகளின் வளர்ச்சியில் பழங்களின் உற்பத்தி பாரிய வளர்ச்சி கண்டுள்ளது.

மாவட்ட செயலகத்தின் புள்ளி விபரங்களின் படி இவ்வாண்டு 157 ஹெக்டயர் நிலப் பரப்பில் பப்பாசிச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் 4396 மெற்றிக்தொன் உற்பத்தி கிடைத்துள்ளது. இவ் உற்பத்தி கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் அதிகரித்திருபதைக் காணக் கூடியதாகவுள்ளது.

தேசிய உற்பத்தியில் மாவட்டத்தின். பங்களிப்பு 5.20 வீதமாக



இருக்கின்றது. இதேபோல திராட்சைப் பயிற்செய்கையும் பாரியளவில் வளர்ச்சி கண்டுள்ளது. இவ்வாண்டு 130 ஹெக்டயர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 3900 மெற்றிக்தொன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில கூடுதலான உற்பத்தி மேற்கொள்ளப் பட்டுள்ளது.

அவ்வாறே வாழைப்பயிற் செய்கையினை போக்கும் அதிகரித்துள்ளது. 1076 ஹெக்டயர் நிலப்பரப்பில் இம்முறை வாழை பயிரிடப்பட்டுள்ளதுடன் இதன் உற்பத்தி 27976 மெற்றிக்தொன்னாகவும் அதிகரித்துள்ளது.

இவற்றின் உற்பத்தி அதிகரிப்பானது தேசிய உற்பத்தியில் பெரும் பங்களிப்புச் செய்வதாக யாழ்மாவட்ட செயலகத்தின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. (இ)

# விண்ணப்பம் கோரல்

யாழ்.மத்திய கல்லூரியின் தரம் ஒன்றுக்கான விண்ணப்பங்கள் தற்போது கோரப்பட்டுள்ளன.

2014 ஆம் ஆண்டுக்காக தரம் ஒன்றில் இணையும் மாணவர்களுக்கான விண்ணப படிவங்கள் தற்போது வழங்கப்பட்டு வரும் இதே வேளை ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னதாக பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பங்களை பாடசாலை அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு மத்திய கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். (இ)


# ஏல விற்பனை

அலுவலகப் பாவனைக்குட்படுத்தப்பட்ட பொருட்கள் எதிர் வரும் 27.07.2013 சனிக்கிழமை காலை 10 மணிக்கு 33, கலட்டி அம்மன் கோயில் வீதி, யாழ்ப்பாணம் [ கலட்டி அம்மன் கோயில் அண்மையில்] என்னும் விலாசத்தில், கீழ்வரும் பொருட்களுக்கான ஏல விற்பனை நடைபெறும்

**விற்பனைப் பொருட்கள்–**

1) கட்டில்
2) வாங்கு
3) மேசை
4) பின்னல் கதிரை
5) இரும்பு அலுமாரி (6“3”-6“8”)
6) கோப்பு அலுமாரி
7) குளிர்சாதனப் பெட்டி
8) சலவை இயந்திரம்
9) கணனி
10) பந்தலுக்கு பயன்படுத்தப்படும் கல்வனைஸ் குழாய் (பாகிஸ்தான்)
11) ஏனைய தளபாட பொருட்கள்
12) தகரப்பந்தலுக்கான உபகலரணம் (தகரம் தவிர்த்து)

*(பொருட்களை 26.07.2013 வெள்ளிக்கிழமை மாலை 2 மணி முதல் 5 மணிவரை பார்வையிடலாம் ).*

நுழைவுச் சீட்டு 100 ரூபாய் (திருப்பித்தரமாட்டாது) C/2957


# 2 இலட்சத்து 93 ஆயிரத்து 744 பேருக்கு வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை




யாழ்.போதனா வைத்தியசாலையில் 2012 ஆம் ஆண்டு 2 இலட்சத்து 93 ஆயிரத்து 744 பேர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

யாழ்.மாவட்ட பிரதேச அபிவிருத்தி தொடர்பான ஊடகவியலாளர் மாநாட்டில் குடாநாட்டின் அபிவிருத்தி தொடர்பாக மாவட்டத்தின் அபிவிருத்தி புள்ளிவிவரங்களை தெரிவிக்கையிலேயே இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைவாக வெளிநோயளர் பிரிவில் 2009 ஆண்டு 2 இலட்சத்து 39 ஆயிரத்து 677 பேரும் 2010 ஆம் ஆண்டு 2 இலட்சத்து 68 ஆயிரத்து 922 பேரும், 2011 இல் 2 இலட்சத்து 82 ஆயிரத்து 946 பேரும், 2012 ஆம் ஆண்டு 2 இலட்சத்து 93 ஆயிரத்து 744 பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இதேபோல 2009 ஆம் ஆண்டு 92 ஆயிரத்து 546 பேரும் 2010 ஆம் ஆண்டு ஒரு இலட்சத்து 15 ஆயிரத்து 842 பேரும், 2012 ஆண்டு ஒரு இலட் சத்து 23 ஆயிரத்து 604 பேரும், விடுதியில் அனுமதிக் கப்பட்டு சிகிச்சை பெற்றுள் ளனர்.

சிகிச்சை நிலைய வரைவுகளாக 2009 ஆண்டு 4 இலட்சத்து 56 934 பேரும், 2010 ஆண்டு 4 இலட்சத்து 76 ஆயிரத்து 616 பேரும், 2011 ஆம் ஆண்டு 5 இலட்சத்து 31 ஆயிரத்து 350 பேரும் 2012 ஆம் ஆண்டு 6 இலட்சத்து 37 ஆயிரத்து 361 பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

மகப்பேறுகள் 2009 ஆம் ஆண்டு 5 ஆயிரத்து 358, 2010 ஆண்டு 6 ஆயிரத்து 969,2011 ஆம் ஆண்டு 7 ஆயிரத்து 69,2012 ஆம் ஆண்டு 6 ஆயிரத்து 888 பேருக்கும் நடைபெற்றுள்ளன. (84)

# மின்சாரம் இல்லாததால் தொழிலாளர் முடக்கம்

வரணிப்பிரதேசத்தில் பகலில் மின்சாரம் இல்லாததால் தொழிலாளர் வீட்டில் முடங்கியுள்ளனர்.

வரணிப் பிரதேசத்தில் கடந்த சில நாட்களாக பகல் நேர மின்சார நிறுத்தத்தால் அரைக்கும் ஆலை கள்,கராச், போன்ற மின்சாரத்தில் இயங்கும் நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பணிபுரிந்த தொழிலாளர்கள் வேறு தொழில்கள் செய்ய முடியாத நிலையில் வீடுகளில் தங்கியுள்ளனர்.

அதேவேளை அன்றாடம் உழைத்துக் குடும்பத்தைக் காப்பாற்றும் இவர்கள் எப்போது திருத்த வேலைகள் முடிவுற்று பகல் நேர மின் விநியோகம் நடைபெறும் என ஏக்கத்துடன் காத்திருக்கின்றனர். (150)

# முப்பெரும் விழா

(குருநகர்)

சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம் புனர்வாழ்வு, கல்வி அபிவிருத்தி நிலையத்துடன் இணைந்து நடாத்தும் முப்பெரும் விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு கோலாகலமாக யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் ஆரம்பமாகும்.

காலை, மாலை அரங்குகளாக இந்த நிகழ்வு இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (68


# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2446 திகதி 24-07-2013

ஆங்கில எழுத்து: W

வெற்றி எண்கள்: 19 25 30 52

போனஸ் இல: 32

ஜக்பொட் பரிசு ரூ.17,385,575/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 239009 | 20/- | 4,780,180/- |
| 2 இல | 17149 | 100/- | 1,714,900/- |
| 3 இல | 351 | 1,000/- | 351,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 9525 | 40/- | 381,000/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 654 | 1,000/- | 654,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 18 | 10,000/- | 180,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 17,385,575/- | - |
| 1 இல + போனஸ் இல | 11466 | 100/- | 1,146,600/- |
| 2 இல + போனஸ் இல | 549 | 500/- | 274,500/- |
| 3 இல + போனஸ் இல | 03 | 100,000/- | 300,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 443 | 200/- | 88,600/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 13 | 1,500/- | 19,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 279181 | | 10,890,280/- |

பச்சை நிற டிக்கட்டுகள் 2013 ஜுலை 27 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 18,037,775/-

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

C/2956


# யாழ்.சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியில் அழகு சிறுவர் பூங்கா அமைப்பு





பாடசாலையன் முன்னாள் ஆசிரியர்களான அமரர் சண்முகம் அழகம்மா தம்பதிகளின் ஞாபகார்த்தமாக அவர்களின் பிள்ளைகளால் “அழகு சிறுவர் பூங்கா” நிர்மாணித்து அன்பளிப்பு செய்யப்பட்டது.

இதன் திறப்பு விழா கடந்த 11 ஆம் திகதி நடைபெற்றது இதன் போது கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.சிவானந்தராசா, முன்னாள் ஆசிரியர் க.தம்பாப்பிள்ளை. மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் ச.சிவனேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டார்கள் இவர்களுடன் அதிபர், பிரதி அதிபர், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டார்கள். (54)

# ஊடகவியலாளர்களின் பணிகள் சமூகம் சார்ந்ததாக அமையவேண்டும்

## தகவல் திணைக்களப் பணிப்பாளர் ஆரியரத்ன அத்துகல



(யாழ்ப்பாணம்)

செய்திக்கு அப்பால் ஊடகவியலாளர்களுக்கு சமூகப் பொறுப்பொன்றுள்ளது. நாம் எடுக்கும் தீர்மானம் சிறந்ததாக இருக்கவேண்டும் என்று அரசாங்க தகவல் திணைக்களப் பணிப்பாளர் பேராசிரியர் ஆரியரத்ன அத்துகல தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். பொதுநூலக கேட்போர் கூடத்தில் அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற கிளிநொச்சி யாழ்ப்பாண ஊடகவியலாளர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.


அரச தகவல் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் மொகமட் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலம் எம்மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்தியிருந்தது. அதனை நினைக்கவும் மீண்டும் அழைக்கவும் முடியாது. வேற்றுமையில் ஒன்றுமை காணும் சமுதாயமாக எமது சமுதாயம் மிளிரவேண்டும்.

மொழிக்கு எல்லை வகுக்காது மானிடத்தைத் தேடிப்புறப்படுவோம். அதுதான் தூய்மையானது. எம்மிடத்தே புரிந்துணர்வை ஏற்படுத்தும் பொதுத் தன்மை இருக்கிறது.

இதற்கு ஊடகவியலாளர்களாகிய நீங்கள் அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டும். பிரதேச ஊடகவியலாளர் என்ற சொற்பதம் உங்களுக்குப் பொருந்தாது அதற்கு மேலாக தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் உங்களது அர்ப்பணிப்பான சேவை மேன்மையடைய வேண்டும் என்றும் தெரிவித்தார்.(பா,இ)

# ஒளிராத மின்விளக்குகளால் இருளில் மூழ்கியுள்ள வீதி



(அச்சுவேலி)

அச்சுவேலி - தம்பாலைச் சந்தியில் பொருத்தப்பட்டுள்ள வீதி மின்விளக்குகள் கடந்த சில மாதங்களாக ஒளிராது காணப்படுவதால் சந்திப் பகுதி முழுவதும் இருளில் மூழ்கிக் காணப்படுவதாகப் பலதரப்பினராலும் தெரிவிக்கப்படுகின்றது.

பிரதான போக்குவரத்து வீதியாகக் காணப்படும் இச் சந்திப் பகுதியானது இருளில் மூழ்கிக் காணப்படுவதால் துவிச்சக்கர வண்டிகளில் பயணிப்போரும் ஏனைய வாகன சாரதிகளும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கின்றனர். இது பற்றி ஏற்கனவே பத்திரிகைகளில் சுட்டிக்காட்டியும் இதற்கான நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை.

எனவே உரிய தரப்பினர் இப்பகுதியில் வீதி விளக்குகள் ஒளிர்வதற்கு ஆவண செய்து இருளில் மூழ்கிக்கிடக்கும் இச் சந்திப்பகுதிக்கு ஒளியேற்றுமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (85)

# ஆன்மீகவாதி ஸ்ரீ ரவிகுமார் ஜி இலங்கைக்கு சுற்றுப் பயணம்

(வலிகாமம்)

ஏழாம் அறிவுப் புகழ் ஸ்ரீ ரவிக்குமார் ஜி, இந்து ஸ்வயம் சேவா சங்கத்தின் ஏற்பாட்டில் இலங்கையில் ஆன்மீகச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு இன்று இலங்கை வரவுள்ளார்.

இந்து ஸ்வயம் சேவா சங்கத்தின் சர்வதேச இணைப்பாளரான இவர், இன்று வெள்ளிக்கிழமை முதல் ஓகஸ்ட் 11 ஆம் திகதி வரை இந்தச் சுற்றுப் பயணத்தை இலங்கையில் மேற்கொள்ளவுள்ளார்.

இன்று மாலை வருகைதரும் சுவாமி ஜி மாலைவேளை புத்தளத்திற்கும், நாளை காலை கெக்கிராவைக்கும், மாலை மன்னாருக்கும் 28 ஆம் திகதி வவுனியா, யாழ்ப்பாணத்திற்கும், 29 ஆம் திகதி முல்லைத்தீவிற்கும், 30 ஆம் திகதி பொலநறுவைக்கும், 31 ஆம் திகதி மட்டக்களப்பிற்கும் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

மேலும் ஓகஸ்ட் முதலாம் திகதி அம்பாறைக்கும், 2 ஆம் திகதி பதுளைக்கும், 3 ஆம் திகதி நுவரெலியா, ஹற்றனுக்கும், 4 ஆம் திகதி கண்டி, மாத்தளைக்கும், 5 ஆம் திகதி குருநாகலுக்கும், 6 ஆம் திகதி கேகாலைக்கும், 7 ஆம் திகதி இரத்தினபுரிக்கும், 8 ஆம் திகதி காலிக்கும், 9 ஆம் திகதி களுத்துறைக்கும், 10 ஆம் திகதி நீர்கொழும்புக்கும், 11 ஆம் திகதி கொழும்புக்கும் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

சுற்றுப் பயணங்களின் போது ஸ்ரீ ரவிகுமார் ஜி குருபூசையும், ஆன்மீக உரையும் இடம்பெறும். மக்கள் ஆன்மீகம் தொடர்பான சந்தேகங்களை அவரிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள முடியும். 11 ஆம் திகதி மாலை மும்பை பயணமாகவுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (06)

# நாடக ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நிகழ்வு

நாடகமும் அரங்கியலும் பாடத்தினை கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நிகழ்வு எதிர்வரும் 31 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது. இக்கலந்துரையாடல் நிகழ்வில் தற்பொழுது லண்டனில் வசித்து வருபவரும் தமிழ் அவைக்காற்றுக் கலைக்கழகத்தின் ஸ்தாபகரும் 1970களில் இலங்கைத்தமிழ் அரங்கின் முக்கிய நெறியாளர்களில் ஒருவரும் மொழிபெயர்ப்பு நாடகத்துறை முன்னோடிகளில் ஒருவருமாகிய பாலேந்திரா நாடகமும் அரங்கியலும் பாடத்தினை கற்பிக்கின்ற ஆசிரியர்களை சந்தித்து தற்பொழுது நாடகத்துறையின் செயற்பாடுகள் பற்றிக் கலந்துரையாடவுள்ளார். இக்கலந்துரையாடல் நிகழ்வு யாழ்ப்பாணம் மத்தியகல்லூரியின் றொமைன்குக் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இக்கலந்துரையாடல் நிகழ்வில் நாடகமும் அரங்கியலும் பாடத்தினைக் கற்பிக்கின்ற ஆசிரியர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டுக்குழுவினர் அறிவித்துள்ளனர்.

# தொழில் வழங்குநர் சம்மேளத்தினால் வர்த்தக நிறுவனங்களுக்கான செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழில் வழங்குநர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் சிறிய மற்றும் மத்தியளவு வர்த்தக நடவடிக்கைகளுக்கு தொழிற்றுறை உறவுகள் முறையில் சிறந்த செயற்பாடுகளை பின்பற்றுவது தொடர்பாக வர்த்தக நிறுவனங்களுக்கு விளக்கமளிக்கும் செயலமர்வு நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிமுதல் பிற்பகல் 3.30 மணிவரை ஞானம்ஸ் ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

ஒருநாள் செயலமர்வாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வில், சிறிய மற்றும் மத்தியளவு நிறுவனங்களுக்கான ஊழியர் சேமலாப நிதியம் (EPF) மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் (ETF) தொடர்பான நடைமுறை விடயங்கள், வழிகாடடல்கள் மற்றும் ஆலோசனை வழங்கல் போன்றன இடம்பெறவுள்ளன.

அத்துடன், மாற்றுத்திறன் கொண்ட நபர் ஒருவரை தொழிலுக்கு அமர்த்துவது தொடர்பான குறுகிய செயலமர்வொன்றையும் முன்னெடுக்க இலங்கை தொழில் வழங்குநர் சம்மேளனம் தீர்மானித்துள்ளது. யாழ்ப்பாண பிராந்தியத்தைப் பொறுத்தமட்டில் தற்போது சுமார் 7800 மாற்றுத்திறன் வாய்ந்தவர்கள் காணப்படுவதாகவும், இதில் பெரும்பான்மையானோர் தொழில் வாய்ப்பு எதுவுமின்றி காணப்படுவதாகவும் ஆய்வொன்றின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. இந்த மாற்றுத்திறன் வாய்ந்தவர்களில் 20 வீதமானவர்களின் அவல நிலைமைக்கு இந்த பிராந்தியத்தில் நிலவிய யுத்த சூழ்நிலை காரணமாக அமைந்திருந்தது.

2000 ஆம் ஆண்டு முதல் இயங்கிவரும் இச் சம்மேளனத்தின் மாற்றுத்திறனாளிகளுக்கான வலையமைப்பின் மூலம் முன்னெடுக்கப்பட்டிருந்த வெவ்வேறு சொற்றிட்டங்களின் மூலமாக இது வரையில் 400 இற்கும் அதிகமான மாற்றுத்திறன் வாய்ந்தவர்களுக்கு தொழில் வாய்ப்பை பெற்றுக் கொடுத்துள்ளது. இந்த செயலமர்வில், மாற்றுத்திறனாளிகள் சமூகத்தின் மூலம் வர்த்தக நடவடிக்கைகளுக்குக் கிடைக்கக் கூடிய சிறந்த அனுகூலங்கள் குறித்த விடயங்கள் பரிமாறப்பட்டுள்ளன. இந்த பயிலுநர்களுக்கு நாளைய செயலமர்வில் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்படடுளளது.

# இளங்கலைஞர் மன்றத்தின் மாதாந்த கலையரங்கு


(யாழ்ப்பாணம்)

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் மாதாந்த கலையரங்கு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மன்ற கலாமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் மாலை 5.00 மணிக்கு நடைபெறும் இசையரங்க நிகழ்வில் பி.எஸ்.பிரசாத் பாட்டு, ஏ.ஜெயராமன் - வயலின், எஸ்.விமலசங்கர் - மிருதங்கம், ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து 5.30 மணிக்கு இடம்பெறும் இசையரங்க நிகழ்வில் செல்வி சோ.ஷம்சத்வனி - பாட்டு, ஏ.ஜெயராமன் - வயலின், க.கண்ணதாசன் - மிருதங்கம், என்.நந்தகுமார் - முகர்சிங் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

மாலை 6.30 மணிக்கு முல்லைத்தீவு முள்ளியவளை அண்ணாவியார் என்.எஸ்.மணியத்தின் நெறியாள்கை ஒப்பனையில் ‘முல்லைமோடி’ கோவலன் கண்ணகி நாட்டுக்கூத்து இடம்பெறவுள்ளது. ஆர்வலர்களைக் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.



ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் தீர்த்த உற்சவம் அண்மையில் இடம்பெற்றபோது... (40)

பிறர் செய்த உபகாரம் உன் கையில் அதிகமாக தங்கிவிடாமல் பார்த்துக்கொள். - எமர்சன்.


தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net


## மற்றவர்களையும் சிந்திக்கும் பழக்கம்!

அவன் நாலெழுத்துப் படித்தவன் என்று யாரைச் சொல்கிறோம்? தமிழில் அ,ஆ,இ,ஈ என்று படித்தவர்களையா அல்லது ஆங்கில மோகத்தில் ஏ,பி,சி,டி என்று படித்தவர்களைச் சொல்கிறோமா? உண்மையில் நாலெழுத்துப் படித்தவர்கள் என்று நாம் சொல்வது மனிதன் என்ற நான்கு எழுத்துக்களைப் படித்தவர்களைத்தான்.

நம்மைச் சுற்றியுள்ள இந்த பிரபஞ்சம் இன்னும் நாம் அறியவொண்ணாத எத்தனையோ ரகசியங்களைத் தன்னுள் கொண்டிருப்பது. அறிவியலும், பொறியியலும், அருளியலும், பொருளியலும் அங்கே நிறைந்திருக்கிறது. ஏடுகளுக்கு அப்பாலும் சென்று நாம் எவ்வளவோ தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது.

தமக்குள்ளாகவே சுருங்கிக்கொள்ளும் தமிழ்சமூகம் பல்கலைக்கழகம் ஒன்று கிளிநொச்சியிலும் அமைவதற்கு மேற்கொண்ட சாதனை முயற்சிகளை உணராமல், அதற்குக்கூட விரோத உணர்வுகளை வெளியிடத் தயங்குவதில்லை. நண்பர் ஒருவர் அழகாகச் சொன்னார்: யாழ்ப்பாணத்திற்கு பல்கலைக்கழகம் வந்தபோது கூட இந்தத் தமிழ்ப்பெருங்குடி மக்கள் மூன்று நாள் உண்ணாவிரதமிருந்து எதிர்ப்பைத் தெரிவித்தார்கள். பிறகு அதையே கட்டிப்பிடித்துக் கொண்டார்கள். யாழ்ப்பாணத்திற்கு முதல்முறையாக ரயில் வந்தபோது கல்லெறிந்து எதிர்த்தவர்கள் இவர்கள். பிறகு கோணர்சீற் பிடிக்க ஓடுப்பட்டார்கள். 87-ல் மாகாணசபை முறை வந்தபோதும் எதிர்த்துக் குழப்பியடித்தவர்கள் இப்போது மாகாணசபையைப் பிடிக்கத் தங்களுக்குள்ளேயே அடிபடுகிறார்கள்...

கிளிநொச்சியில் பல்கலைக்கழகம் அமைய, மக்கள்மீதும் சமூகத்தின்பாலும் அக்கறையோடு, மிகுந்த பிரயாசைகளுடனும் ராஜதந்திரத்துடனும் முயற்சியெடுத்து சாதித்தவர்களை அலட்சியப்படுத்தும் இவர்கள் நாளை அதற்கு உரிமைகோர முண்டியடிப்பார்கள். இந்தத் தமிழ்ப் பிரமுகர்களின் இவ்வாறான தீர்க்கதரிசனமற்ற – கஷ்டப்படும் மக்களின் தேவையறியாத – சுயலாப வெற்றுச் சவடால் அரசியலே நம் தோல்விகளுக்குக் காரணம்.

விடுதலையோ தீர்வோ அரசியலோ கல்வியோ எதுவாக இருந்தாலும் ஈடுபாட்டுடன் செய்யப்படுவதே வெல்லும் என்பதைக் குறிக்க பல உதாரணங்களைச் சொல்லமுடியும்.

காட்டுப் பகுதி ஒன்றில் பொலிஸ் அதிகாரிகளுக்கான துப்பாக்கி சுடும் போட்டி நடந்து கொண்டிருந்தது. அவர்களில் ஒருவர் கூடச் சரியாகச் சுடவில்லை. இதைக் கவனித்துக் கொண்டிருந்த மேலதிகாரி, அந்த வழியாக வந்த பழைய வேட்டைக்காரர் ஒருவரை அழைத்து சுடுமாறு வேண்டினார். அவரும் துப்பாக்கியை வாங்கி, கொஞ்சம் கூட யோசிக்காமல் பட படவென்று இலக்கினைச் சரியாக சுட்டார்.

பயிற்சி பெற்ற பொலிஸ் அதிகாரிகளுக்கு ஆச்சரியம். "அவருக்கு இலக்கைச் சுடுவது மட்டும் தான் நோக்கம். அதை அக்கறையோடு செய்தார். ஆனால் நீங்கள் ஒவ்வொருவரும் எப்படியாவது போட்டியில் வெற்றி பெற்று விட வேண்டும், வென்றால் பதவி உயர்வு என்ற பலனை எண்ணி, சுடுவதில் கோட்டை விட்டு விட்டீர்கள்" என்றார் மேலதிகாரி.

படிப்பதையும் நாம் இவ்வாறு பொருளாதாரப் பயன் ஒன்றையே கருதி தலையைப் புத்தகங்களுக்குள் கவிழ்த்துச் செய்து கொண்டிருப்பதால்தான் சமூக உணர்வற்ற, சகமனிதர்களது அவதிகளை தேவைகளை நேயஉணர்வுடன் பார்க்கத் தெரியாத தன்முனைப்புக்காரர்களாக நம் இளையோர் வளர்கிறார்கள். இது காலவரையான தமிழ்த் தலைவர்களிடமிருந்து சமூகத்திற்கும் தொற்றியதுதான் இது. தேர்தல் வெற்றிகள் என்ற சொந்த லாபத்தையே பெரிதாக எண்ணி மக்களுக்கான தீர்வு வாய்ப்புகளைத் தெரிந்தே கோட்டைவிட்டு வந்தவர்கள் இந்தத் தலைவர்கள். கல்வி என்பது உனக்கு எவ்வளவு தெரியும் என்பதல்ல; தெரிந்ததையும் தெரியாததையும் வேறுபடுத்தும் திறமையே அது. மற்றவர்களுக்காகவும் சிந்திப்பதற்கான மனப்பழக்கத்தை உனக்கு ஏற்படுத்தித் தருவதே அது!

- ஆசிரியர்

# காணிகளுக்கான ஆவணங்களை வழங்கி வீட்டுத்திட்டத்தில் இணைத்துக்கொள்ளுங்கள்

## மாந்தை கிழக்கு மக்கள் கோரிக்கை

(மாந்தை)

முல்லைத்தீவு மாவட்டம் மாந்தைப் பிரதேசத்தில் காணி ஆவணங்கள் இல்லாததால் இந்திய வீட்டுத் திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்படாத பல குடும்பங்கள் தமக்கு காணிகளுக்கான ஆவணங்களை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

போர் காரணமாக இடம்பெயர்ந்த மாந்தை கிழக்கு மக்கள் தற்போது அவை சொந்த இடங்களில் மீள்குடியமர்ந்துள்ளனர். அம்பாள்புரத்தில் 1970 ஆம் ஆண்டுக்கு முன்னர் மத்தியதர வகுப்பினருக்கு காணிகள் வழங்கப்பட்டன. ஆனால் இந்தக் காணிகளின் உரிமையாளர்கள் இங்கு இல்லாததால் காணியில்லாத வேறு குடும்பங்கள் அந்தக் காணிகளில் வீடுகள் அமைத்து, கிணறுவெட்டி தென்னை போன்ற பயன்தரும் மரங்களைப் பயிரிட்டு வாழ்ந்து வந்தன. நாற்பது வருடங்களுக்கும் மேலாகச் சந்ததி சந்ததியாக வாழ்ந்து வந்த இந்தக் குடும்பங்களின் வீடுகள் போர் காரணமாக அழிந்துவிட்டன. இவர்கள் தற்பொழுது இதே காணிகளில் தற்காலிக குடிசைகளை அமைத்து வாழ்ந்து வருகின்றனர்.

இந்தக் கிராமத்தில் வசிக்கும் அநேகமான குடும்பங்கள் இந்திய வீட்டுத் திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்பட்ட போதிலும் இவர்களுக்கான காணி அனுமதிப் பத்திரம் இல்லாததால் அதனைப் பெற்றுக் கொள்ள முடியாது போயுள்ளது. மேலும் இவர்கள் தற்போது வசிக்கின்ற காணிகள் ஏற்கனவே வேறு நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதால் தம்மால் உடனடியாக இதற்கு ஒன்றுமே செய்ய முடியாதிருப்பதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இதனால் செய்வதறியாத நிலையில் இந்தக் குடும்பங்கள் உள்ளனர்.

# கல்வியியற் கல்லூரிகளில் 3400 பேர் இணைக்கப்படுவர்

(கொழும்பு)

2012 ஆண்டிற்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த 3400 பேரை கல்வியியற் கல்லூரிகளில் உள்வாங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இம்மாத இறுதிக்குள் இந்த மாணவர்களை 18 கல்வியியற் கல்லூரிகளில் சேர்த்துக் கொள்ளவுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

ஆங்கிலம் மற்றும் தகவல் தொழில்நுட்ப பாடங்களுக்காக கல்வியியற் கல்லூரிகளில் மாணவர்களை சேர்த்துக்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு மேலும் சில வாரங்கள் தாமதம் ஏற்படலாம் என அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்பொருட்டு நடத்தப்பட்ட பரீட்சைகளின் முடிவுகள் இதுவரை வெளியிடப்படாமையே காலதாமதம் ஏற்படுவதற்கான காரணம் என அமைச்சு தெரிவித்துள்ளது.

# தமிழக மீனவர்களின் விளக்கமறியல் நீடிப்பு

(மன்னார்)

அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டவேளை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

8 தமிழக மீனவர்களையும் எதிர்வரும் ஆகஸ்ட் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 8 மீனவர்கள் கடந்த யூன் 15 ஆம் திகதி கச்சதீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த போது, கடற்படையினரால் கைது செய்யப்பட்டு அநுராதபுரம் சிறையில் அடைக்கப்பட்டனர்.

நேற்று மூன்றாவது முறையாக அவர்கள் மன்னார் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். அவர்களை அடுத்த மாதம் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

# தொழில் வாய்ப்பை ஏற்படுத்த ஒட்டுசுட்டானில் தொழிற்சந்தை

(நெடுங்கேணி)

முல்லைத்தீவு மாவட்டத்தில் இளைஞர்களின் தொழில் வாய்ப்பினை இலகுபடுத்தும் வகையில் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் தொழிற்சந்தை திறக்கப்பட்டுள்ளது.

ஜேர்மன் அபிவிருத்திக் கூட்டுறவு அமைப்பின் உதவியுடன் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சினால் இந்த தொழிற்சந்தை கடந்த 20 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது. மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் திறந்து வைத்த இந்ததொழிற்சந்தையில் இங்கு மாவட்டம் சார்ந்த அனைத்துப் பிரதேச செயலர் பிரிவுகளிலிருந்தும் சிறு கைத்தொழில் பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டன. இங்கு முக்கியமாக பிராந்திய மட்டத்திலான தொழில்களுக்கான பயிற்சிகள் தொடர்பான தகவல்கள் கிடைப்பதுடன் வேறு தொழில்களுடன் தொடர்புடைய வாய்ப்புக்களைக் கண்டறியும் சந்தர்ப்பங்களும் கிடைக்கின்றன. சிறுதொழில் முயற்சிகளில் ஈடுபடுவோர் அல்லது அவற்றை ஆரம்பிக்கவுள்ளோர் இதற்கான வழிகாட்டல் ஆலோசனைகளையும் இங்கு பெற்றுக் கொள்ள முடியும். இந்தத் தொழிற்சந்தையின் ஒரு பகுதியாக புத்தாக்கத் தன்மை கொண்ட தெரிவு செய்யப்பட்ட உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திகளைக் காட்சிப்படுத்துவதுடன் தமக்கான வாய்ப்புக்களை விரிவாக்க முயல்வதும் இன்னுமொரு சிறப்பு அம்சமாகும். ஆர்வமுள்ள இளைஞர்கள் இந்தத் தொழிற்சந்தையில் பங்குபற்றுவதுடன் தமக்கான வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

# சவுதியிலிருந்து வெளியேற அனுமதிப்பத்திரம் அவசியம்

(கொழும்பு)

சட்டத்திற்கு முரணாக சவுதி அரேபியாவில் தொழில் நிமிர்த்தம் தங்கியுள்ளவர்கள் உடனடியாக அங்கிருந்து வெளியேறுவதற்கு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டுமென வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் குறிப்பிட்டுள்ளது.

சவுதியில் வழங்கப்பட்டுள்ள பொது மன்னிப்புக் கால நிறைவிற்குள் அங்கிருந்து வெளியேறாதவர்கள் 30 இலட்சம் ரூபாவை அபராதமாக செலுத்த வேண்டுமெனவும், இரண்டாண்டு சிறைத்தண்டனை விதிக்கப்படும் எனவும் பணியகத்தின் ஊடகப் பேச்சாளர் பிரதி இணைப்பதிகாரி மங்கள ரன்தெனிய கூறினார்.

தற்போது சுமார் 10,000 பேர் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாது சட்டவிரோதமாக சவுதியில் தங்கியிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் நவம்பர் 3ஆம் திகதி வரை பொது மன்னிப்புக் காலம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

# இது மன்னிப்புக் கோரும் காலம்...

*ரெலோ தலைவர் சிறீசபாரத்தினம் மற்றும் சக தோழர்கள் புலிகளால் சகோதரப் படுகொலை செய்யப்பட்ட 25ஆவது வருட நினைவஞ்சலிக் கூட்டத்தில் முன்னாள் புலிகள் இயக்கப் போராளி வாசுதேவன் ஆற்றிய உரையிலிருந்து.*

மகாத்மா காந்தியடிகள் கூறிய ஒரு வாசகம்: “கண்ணுக்கு கண் என்பது உலகை குருடாக்கிவிடும்”. “மன்னிப்பு இல்லையேல் எதிர்காலம் இல்லை” என்று நிற வெறிக்கெதிராக குரலெழுப்பிய Desmond Tutu ஆணித்தர மாக கூறுகிறார்.


மன்னிப்பு என்பது மறப்பதற்காக அல்ல! மாறாக மன்னிப்பு இல்லாவிட்டால் மனித எதிர்காலம் இல்லாது போய்விடும் என்று கூறுகிறார். இன்று நான் உங்கள் முன்நின்று உரையாற்றுவது எனது கடந்த காலத்தவறிற்கு பிராயச்சித்தம் தேட அல்ல. நாம் விட்ட தவறுகளை நீங்கள் இன்று மன்னித்தபோதும் நாம் இறக்கும் வரை அது நம்முடன் கூடவே பயணித்து அது எம்மை சித்திரவதை செய்யும். ஆனால் இன்று நீங்கள் என்னை இங்கு பேச அழைத்ததன் மூலம் அந்த சித்திரவதையில் இருந்து ஒரு சிறிய ஆசுவாசத்தை பெற உதவியிருக்கிறீர்கள். அதற்கு நான் உங்களிற்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவிக்கிறேன்.

தொடர்ந்து பிரசாரம் செய்வதால் பொய் உண்மையாகாது யாவரும் கவனிக்கவில்லை எனில் உண்மை பொய் ஆகாது. பொது மக்கள் துணையின்றியும் உண்மை நிலைத்து நிற்கும். அது தன்னிலையுடையது - இது மகாத்மா காந்தியவர்கள் கூறிய இன்னுமொரு வாசகம். 1986 சித்திரை மாதம் 29ஆம் திகதி எமது தேசிய விடுதலைப் போராட்டம் தனது சாவு மணியை அடிக்க தொடங்கிய நாள்! நானும் எனது சகாக்களும் ஏன் எதற்கு என்று கூட கேள்வி கேட்க திராணியற்று மனித அவலம் ஒன்றிற்கு துணை போன நாள்!

பருத்தித்தித்துறை இராணுவ முகாமை தாக்க பல படையணிகளுடன் பயிற்சி பெற்ற நாம் திடீரென்று புலிகளின் யாழ். தளபதி கிட்டுவால் ஒரு அவசர கூட்டத்திற்கு அழைக்கப்படுகிறோம். நாம் ரெலோ மீது தாக்குதல் நடத்தப் போகிறோம் என்று கூறியவுடன் எமக்கு எதுவுமே புரியவில்லை. எமது போராளிகளை அவர்கள் கைப்பற்றி வைத்திருக்கிறார்கள் அவர்களை மீட்க நாம் கல்வியங்காட்டை சுற்றிவளைக்கப் போகிறோம் என்ற விளக்கத்துடன் பாரிய சகோதரப் படுகொலைக்கான திட்டமிடல் தொடங்குகிறது.

அதீத விசுவாசம் கொண்டவர்கள் தலைமை கூறியதை விட மோசமான மனித வதைகளை செய்தனர்! தலைமைக்கு பணிந்தவர்கள் தலைமை கூறியதை அப்படியே செய்தார்கள். மனிதாபிமானமுள்ளவர்கள் விறைத்துப் போய் செய்வதறியாது திகைத்து நின்றனர். சரணடைந்தவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்! தூங்கியவர்கள், தூங்க முடியாது வருத்தத்தில் படுத்திருந்தவர்கள், தப்பியோடியவர்கள் வெள்ளைக்கொடி பிடித்தவர்கள், பிடிக்காதவர்கள் என்று ஒருவரைக் கூட மிச்சம் வைக்காது வேட்டையாடல் நடைபெற்றது.

தமிழ் பேசும் மக்களின் விடுதலைக்காக தம்மை அர்ப்பணிக்க தயாராக இருந்த நூற்றுக்கணக்கான போராளிகள் தெருநாயை சுடுவது போல் வேட்டையாடப்பட்டார்கள். ஆனால் மக்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். 3 நாட்களாக கல்வியங்காட்டு சந்தியில் காவல் கடமையில் இருந்த எனக்கு கோப்பி முதல் 3 நேர உணவும் தந்து



உபசரித்தார்கள்.

நரபலி எடுத்துக் களைத்த அனைவரும் மீண்டும் முகாம் திரும்புகிறோம். மனச்சாட்சி உறுத்தியவர்கள் ஒரு சிலர் ஒளிவில் சிகரட் புகைக்க ஒதுங்கி பேசா மடந்தைகளாக அப்படியே மௌனித்து போனோம்! பயம் ஒரு புறம்! போராட்டம் சூன்யமாகி விட்டதே என்ற ஆதங்கம் ஒரு புறம்!

**புலம்பெயர் மக்கள் இன்று ஆத்திரம் கொண்டவர்களாகவும் பழிக்குப் பழி என்ற சிந்தனையை மட்டுமே தம்முள் வைத்தபடி இனவாத அரசியலை வளர்த்து வருகிறார்கள். தமிழ் மற்றும் சிங்கள இனவாதிகளிற்கு இவர்கள் இன்னமும் தீனி போட்ட வண்ணமுள்ளனர். கண்ணுக்கு கண் என்பது உலகை குருடாக்கிவிடும் என்பதை பற்றியெல்லாம் இவர்களிற்கு கவலை இல்லை! நான் குருடானாலும் பரவாயில்லை என் எதிரியை குருடாக்க வேண்டும் என்ற ஆவேசம் தான் அவர்களிடம் மிஞ்சி நிற்கிறது.**

கொல்லப்பட்டவர்கள் எம்மவர்கள் என்ற மனச்சாட்சியின் உறுத்தல் ஒரு புறம்! அன்று முதல் நாம் ஒரு நடைப்பிணமாகவே மாறி விட்டோம். ஆனால் அந்த வேதனை ஆறுவதற்கு முன்பே ஆயுதங்களை கட்டி தாக்குதலுக்கு தயாராகச் சொல்லி மீண்டும் ஒரு கட்டளை மே 6ஆம் திகதி அதிகாலை வருகிறது! தலையிடி காய்ச்சல் என்று சாக்கு கூறிய இரண்டு போராளிகள் தும்புக்கட்டையால் நையப்புடைக்கப்பட்டதை பார்த்ததும் எல்ப் ட்ரக்கில் முண்டியடித்தபடி கோழைகளாக அடுத்த கொலைக்களத்திற்கு புறப்பட்டோம்.

அன்று கோண்டாவில் சுற்றிவளைப்பில் எனக்கு கோண்டாவில் பஸ் டிப்போவிற்கு அருகில் காவல் கடமை! ஒருவயது முதிர்ந்தவர், என்னுடன் பேசினார். நான் கொஞ்சம் விரக்தியாக பேசியதாலோ என்னவோ துணிந்து ஒரு விடயத்தை கூறினார். “தம்பி துவக்கெடுத்தவனுக்கு துவக்காலை தான் சாவு! இது எல்லாம் ஒரு பெரிய அழிவிலைதான் முடியும்! மேலை ஒருத்தன் பாத்துக் கொண்டிருக்கிறான் எண்டதை மறந்திடாதை” என்று கூறிவிட்டு போய்விட்டார்.

சில மணித்துளிகளுக்குள் ரெலோ இயக்க தலைவரும் சுட்டுக் கொல்லப்பட்டு விட்டார் என்று வோக்கியில் செய்தி வந்தது. 1987 மே மாதம் ஒரு புகையிலைத் தோட்டத்தில் மறைந்து நிராயுதபாணியாக இருந்த சிறீ சபாரத்தினம் அவர்கள் கையை உயர்த்தியபடி கிட்டு பேசுவோம் பேசித் தீர்ப்போம் என்று கூறியபடி வெளியில் வந்து கிட்டுவின் மெய்ப்பாதுகாவல் கடமையிலிருந்த சாந்த மணியின் அருகில் சென்று அவரின் துப்பாக்கியை பறிக்க முற்பட்டதாகவும் உடனடியாக கிட்டு அவரை சுட்டுக்கொன்றதாகவும் வோக்கி டோக்கி அலறியது! இந்தியாவுடன் சேர்ந்து புலிகளை அழிக்க சதி செய்த ரெலோ புலிகளால் அழிக்கப்பட்டது என்று செய்தி எங்கும் அலறியது.

எல்லாம் முடிந்து விட்டது. ரெலோ இயக்கம் மக்களிடம் களவெடுத்த பொருட்கள் என்று பல கண்காட்சிகள் யாழ் நகரில் காட்டப்பட்டது. அண்மையில் நான் யாழ்ப்பாணம் சென்ற போது கூட எனது நண்பர் கூறினார் ரெலொ களவெடுத்த படியால்தான் புலியள் அவையை அழிச்சவை என்று! பாவம் அந்த அப்பாவி மக்களிற்கு இன்றும் தெரியாது கண்காட்சியில் காட்டப்பட்ட பொருட்களில் முக்கால்வாசிக்கு மேற்பட்ட பொருட்கள் எமது இயக்கத்தால் கொள்ளையடிக்கப்பட்டவை என்று...

சரியாக 22ஆண்டுகள் கழித்து 2009 மே மாதம் தொலைக்கட்சி ரேடியோ ஏன் உலகம் எல்லாமே அலறியது வெள்ளைக்கொடியுடன் பேசச் சென்றவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டார்கள் என்று!

அன்று கோண்டாவிலில் அந்த பெரியவர் என்ன சொன்னாரோ அது நடந்தேறி விட்டது! வெள்ளைக் கொடி, சரணடைவு, நிராயுதபாணியாக கொலை என்று நாம் மீளவும் இன்று அங்கலாய்க்கிறோம்... ஆத்திரப்படுகிறோம்... அவமானப்படுகிறோம். ஆனால் அன்றும் இது நடைபெற்றது. யாரும் ஆத்திரப்படவில்லை, அவமானப்படவில்லை, ஐநாவிடம் சென்று நியாயமும் கேட்கவில்லை!

25 ஆண்டுகள் சென்று விட்டது இன்று கூட இதைப்பற்றி ஒரு சுயவிமர்சனத்தை செய்யவோ குறைந்த பட்சம் ஒரு பொது மன்னிப்பு கேட்க கூட தயாராக இல்லை. கேட்க ஆயத்தப்படுவோரையும் துரோகியாக்கி, மன்னிப்பையும் காட்டிக்கொடுப்பு என்று ஏளனம் செய்கிறார்கள்.

இன்று நானும் ஒரு துரோகி! காரணம் நான் பழசை கிளறுகிறேனாம். “நாம் செய்ததெல்லாவற்றையும் கூட்டி அப்படியே மறைத்து விட வேண்டும்! அதை சும்மா கிளறுவதால் என்ன பயன்? செய்தவர்கள் இன்று இல்லை! ஆனால் உவன் மகிந்தனை விடக்கூடாது.” இவர்கள் எல்லாம் இன்றும் மறக்கும் ஒரு விடயம் எவன் ஒருவன் தனது கடந்தகாலத்தை மறக்கிறானோ அவன் மீண்டும் அதையே செய்ய முயல்வான் என்பதே!

எம் தமிழ் தலைமைகள் எல்லாம் அன்று முதல் இன்று வரை தமது அதிகாரங்களை தக்க வைப்பதிலேயே குறியாக இருந்தார்களே ஒழிய மக்கள் நலன் மீது எந்த வித அக்கறையும் இருக்கவில்லை. இவ்வளவு அவலம் வந்து முடிந்த பின்னரும் ஒரு மீளாய்வுக்கு தயார் இல்லை!

அவசர அவசரமாக கட்சி கட்டுவதிலும் தேர்தலில் நிற்பதிலும் குறியாக இருக்கின்றனர். ஜனநாயகப் பண்புகள் அற்ற அமைப்புகளை கட்டியெழுப்புவதுடன் ஆயுதங்களை விட பலமான ஊடகங்களை இன்று கைகளில் வைத்துக் கொண்டு அராஜகம் செய்து வருகின்றனர். உண்மைகள் மக்களிடம் போனால் செல்வாக்கு போய்விடும் என்ற பயத்தில் சுயநலம் கொண்ட மிருகங்களாக மாறி நடந்து முடிந்த போரில் குற்றுயுரும் குலை உயிருமாக தப்பியவர்களின் நியாயமான கோபங்கள் ஆதங்கங்கள் பேன்றவற்றை இன்று உயிருடன் குழிதோண்டிப் புதைக்கின்றனர். அந்த மக்களின் பட்டினிச்சாவில் இன்று தம் வெட்கங்கெட்ட அரசியலை செய்கின்றனர்.

50 வருடகாலமாக எதைப் பேசினோமோ அதையே இன்றும் பேசுகிறோம். உலக மாற்றம் பற்றிய எந்த சிந்தனையும் இன்றி அடுத்தவனை குறை கூறுவதிலும் எமது தவறுகளுக்கு நியாயம் கதைத்தபடி அடுத்தவன் தவறுகளுக்கு தண்டனை பெற்றுக்கொடுப்பதிலேயே நாம் கண்ணும் கருத்துமாக நிற்கிறோம்.

காலாகாலமாக வேரூன்றி பெரு விருட்சமாக வடக்கில் வாழ்ந்து வந்த முஸ்லிம் சகோதரர்களை ஒரு இரவிற்குள் விரட்டியடித்து விட்டு சிங்களவன் எங்கடை காணியைப் பறிக்கிறான் என்று நீலிக்கண்ணீர் வடிக்கிறோம். அந்த சமூகத்திடம் குறைந்த பட்சம் மன்னிப்புத்தான் கேட்க வேண்டாம் அது சரியென்று வியாக்கியானம் கொடுத்து அவர்களை இன்னமும் அவமானப்படுத்துகிறீர்கள். இலங்கை ஒரு பல கலாச்சாரங்களை, பல இனங்களை, பல மதங்களை கொண்ட ஒரு நாடு என்பதை மறந்து எனது சாதி உயர்ந்து நிற்க வேண்டும் என்ற சுயநலமும் மற்றவனை வீழ்த்த வேண்டும் என்ற ஆவேசமும் தான் எங்களை நோக்கிய சிங்கள பேரினவாதத்தை வளர்த்தது என்பதை நாம் என்று உணரப்போகிறோம்?

# நல்லிணக்கத்தை ஏற்படுத்த தீவிரவாத அமைப்புகளுக்கு தடை

## கூறுகிறார் பேராசிரியர் குணரத்ன


(கொழும்பு)

இலங்கையில் நல்லிணக்கம் ஏற்படுவதற்கு பொதுபலசேனா போன்ற தீவிரவாத அமைப்புககளை கட்டுப்படுத்த வேண்டுமென அரசியல் வன்முறைகள் மற்றும் பயங்கரவாதம் தொடர்பான சிரேஷ்ட ஆய்வாளர் பேராசிரியர் றொகான் குணரத்ன தெரிவித்துள்ளார்.

மதங்கள் மூலமாக நல்லிணக்கம் என்ற தொனிப் பொருளில் கொழும்பு -07, லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவகத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய பேராசிரியர் ரொஹான் குணரத்ன 30 வருட கால யுத்தம் தற்போது நிறைவுக்கு வந்துள்ள நிலையிலும் அரசானது சரியானதொரு பாடத்தை கற்கத்தவறியுள்ளது.

இந்நிலையில் தலை தூக்கி வரும் மத அடிப்படையிலான தீவிர போக்குடையவர்களை கட்டுப்படுத்த அரசு தவறுமாயின் சமூக நல்லிணக்கம் என்பது சாத்தியமற்றதாகப் போகும்.

குறிப்பாக பொதுபலசேனா அமைப்பானது ஒரு பௌத்த இயக்கமோ அல்லது அரசியல் ரீதியான இயக்கமோ அல்ல. அது ஒரு முற்று முழுதான தீவிர போக்குடைய ஒரு அமைபபாகும். இதனை நான் உறுதிபடத் தெரிவிக்கிறேன் எனத் தெரிவித்துள்ளார்.



அரசாங்கத்துடன் இணைந்து கொண்ட தயாசிறி ஜயசேகரவிற்கு, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்புரிமை பத்திரத்தை வழங்குவதைக் காணலாம்.

# முரண்பாடுகளைக் களைய ரணிலுடன் பேசத் தயார்

## கரு எம்.பி. அறிவிப்பு

(கொழும்பு)

ரணில் விக்ரமசிங்கவுடனான முரண்பாடுகளைக் களைவதறகு தயார் என கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

ஏதேனும் கருத்து முரண்பாடுகள் காணப்பட்டால் அவை தொடர்பில் பேசி பிரச்சினைகளுக்கு தீர்வுகாணமுடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியை மீளவும் ஆட்சிப்பீடம் ஏற்ற வேண்டும் என்பதே தமது பிரதான நோக்கம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கட்சியின் நன்மைக்காக இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக்கொள்வதில் எவ்வித சிக்கல்களும் தமக்குக்கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



வலுவான எதிர்க்கட்சியொன்று இல்லாமை காரணமாகவே அரசாங்கம் ஜனநாயக விரோத செயற்பாடுகளில் அதிகளவில் ஈடுபட்டு வருவதாக கரு ஜயசூரிய ஒப்புக்கொண்டுள்ளார்.

அரசாங்கத்தின் ஜனநாயக விரோத செயற்பாடுகளை முறியடிப்பதற்கான சந்தர்ப்பமாக எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலை பயன்படுத்திக் கொள்ளமுடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# தேர்தலில் நம்பிக்கை மக்களுக்கு கிடையாது

## என்கிறது கபே

(கொழும்பு)

தேர்தல்கள் தொடர்பில் மக்களுக்கு நம்பிக்கை கிடையாது என கபே எனப்படும் தேர்தல் கண்காணிப்பு அமைப்பு அறிவித்துள்ளது.

அதிகாரிகள் அளிக்கும் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமையே இதற்கான காரணம் எனச் சுட்டிக்காட்டியுள்ளது.

குறிப்பாக நாட்டின் அரசியல்வாதிகள் மீதும் அரசியல் முறைமை மீதும் மக்கள் அதிருப்தியடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

ஜனநாயக நாடொன்றில் இதனை ஆரோக்கியமான நிலைமையாக கருத முடியாது என சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த நிலைமையானது நாட்டின் வாக்களிப்பு வீதத்தை மிகவும் மோசமான முறையில் பாதிக்கக்கூடுமென தெரிவித்துள்ளது.


செய்யக்கூடிய காரியங்களின் அடிப்படையில் அரசியல்வாதிகள் தங்களது வாக்குறுதிகளை அளிக்க வேண்டியது அவசியமாகும் எனத் தெரிவித்துள்ளது.

மாறாக போலி வாக்குறுதிகளை அளிப்பதன் மூலம் மக்களின் அதிருப்தியை சம்பாதிக்க நேரிடும் எனவும், நாட்டின் ஜனநாயகப் பொறிமுறைமைக்கு குந்தகம் ஏற்படக்கூடுமெனவும் கபே எச்சரிக்கை விடுத்துள்ளது.

# அவுஸ்ரேலிய படகு விபத்தில் கர்ப்பிணி உட்பட 9 பேர் பலி

(கொழும்பு)

இந்தோனேசியாவின் ஜாவா தீவுக்கு அருகே அவுஸ்ரேலியாவுக்கு சட்டவிரோதமாக அகதிகளை ஏற்றிச்சென்ற படகு கடலில் மூழ்கியதில் 5 குழந்தைகள், ஒரு கர்ப்பிணிப் பெண் உள்ளிட்ட 9 அகதிகள் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



மேற்கு ஜாவாவில் உள்ள சிடான் நகருக்கு அண்மையில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை இந்தப்படகு கடலில் மூழ்கியது. அளவுக்கு அதிகமான பயணிகளை ஏற்றிச் சென்றதால், பயணத்தை ஆரம்பித்த 9 மணி நேரத்தில். இந்தப்படகு கடலில் மூழ்கத்தொடங்கியது.

இந்தப் படகில் பயணம் செய்த 204 பேரில், 189 பேர் மீட்கப்பட்டுள்ளனர். உயிரிழந்தவர்களில் ஒரு 18 மாத ஆண் குழந்தை, 2 வயது, 7 வயதுடைய இரு பெண் குழந்தைகள் உள்ளிட்ட நான்கு சிறுவர்களும் அடங்குகின்றனர்.

மேலும், உயிரிழந்தவர்களில் இரு பெண்கள் ஒரு குழந்தை உள்ளிட்ட மூவர் இலங்கையர்கள் எனத் தெரிவிக்கபபடுகிறது.

மேலும், இலங்கை, ஈரான், ஈராக் நாடுகளைச் சேர்ந்த மேலும் ஆறு அகதிகள் காணாமற் போயுள்ளனர்.

படகு நீரில் மூழ்கத் தொடங்கியதும், சில அகதிகள் உயிர் காப்பு படகில் ஏறித்தப்பினர். பலர் கடலில் குதித்து நீந்திய போது, மீனவர்களாலும், இந்தோனேசிய பாதுகாப்பு துறையினராலும் காப்பாற்றப்பட்டனர்.

அதேவேளை இந்தப் படகில் பயணம் செய்த 44 பேர் காணாமற் போயுள்ளதாகவும் அவர்களைத் தேடும் பணி தொடர்வதாகவும் மற்றொரு தகவல் தெரிவிக்கின்றது.

மீட்கப்பட்ட ஒருவர் தகவல் வெளியிடுகையில், உயிர்தப்பிய அகதிகள் அதிகாரிகளிடம் சிக்கிக் கொள்ளாமல் தப்பியிருக்கலாம் என்பதால், காணாமற்போனவர்களின் சரியான எண்ணிக்கை தெரியவில்லை என்று கூறியுள்ளார்.

உயிரிழந்த சிறுவர்கள் அனைவரும் இலங்கையைச் சேர்ந்தவர்கள் என்றும், ஈரான் பெண் ஒருவரும் மரணமானதாகவும், சாட்சிகள் தெரிவித்துள்ளன.

மீட்கப்பட்டவர்கள் குடிவரவு நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். இந்தப் படகில் பயணம் செய்தவர்களில் பெரும்பாலானவர்கள் இலங்கையைச் சேர்ந்தவர்கள் என்று தெரியவந்துள்ளது.

# மேனன் விரித்த வலையில் சிக்கிக் கொண்டுள்ளது அரசு

## குணதாச அமரசேகர சீற்றம்

(கொழும்பு)

இந்தியா விரித்த வலையில், அரசாங்கம் சிக்கிக்கொண்டு விட்டதாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் குற்றம் சாட்டியுள்ளது.

இது தொடர்பாக தேசப்பற்றுளள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர கருத்துத் தெரிவிக்கையில்,

வடமாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு முன்னர், காணி, பொலிஸ் அதிகாரங்களை இல்லாமல் செய்ய வேண்டும் என்று அரசாங்கத்திற்கு கோரிக்கை விடுத்த போதிலும், அரசாங்கம் அதற்குச் செவி சாய்ப்பதாகத் தெரியவில்லை.

மாறாக இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனன் விரித்த வலையில் அரசாங்கம் சிக்கிக்கொண்டுள்ளது. அடுத்த ஆண்டு இந்தியாவில் நாடாளுமன்றத்தேர்தல் நடக்கவுள்ளது.

அதுவரை 13 ஆவது திருத்தச் சட்டத்தில் இலங்கை அரசாங்கம் கை வைக்கக் கூடாது என்பதே சிவசங்கர் மேனன் விரித்த வலை.

அரசாங்கம் இதில் மீள முடியாமல் சிக்கிக்கொண்டுள்ளது. அரசாங்கம் நாட்டைக் குறித்துச் சிந்திப்பதில்லை. கொமன் வெல்த் மாநாட்டின் தலைமைப்பதவியை பெற்றுக்கொள்வதே அதற்கு முக்கியமாகவுள்ளது.


எனவே தான் 13 ஆவது திருத்தச்சட்டத்தின் காணி, பொலிஸ் அதிகாரங்களின் பயங்கரத்தை உதறித்தள்ளிவிட்டு, வடக்கில் தேர்தலை நடத்தப் போகிறது.

இந்தத் தேர்தலின் பின்னர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மீண்டும் தனித் தமிழீழத்துக்கான விஸ்வரூபத்தை எடுக்கும்.

அத்துடன் அரசாங்கத்திற்கு மேலும் மேலும் சர்வதேச நாடுகளின் அழுத்தங்கள் அதிகரிக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

# ஜே.வி.பி.யின் ஆட்சியின் கீழ் மாகாணசபை முறை ஒழிப்பு

## கூறுகிறார் சோமவன்ச



ஜே.வி.பி ஆட்சியின் கீழ் அனைத்து மக்களின் உரிமைகளும் உறுதிபபடுத்தப்படுவதுடன், மாகாணசபை முறைமையும் இல்லாதொழிக்கப் படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

1[illegible] ஆவது திருத்தச்சட்டம் பற்றிய விவாதங்களை முடிவுக்குக் கொண்டு வரவேண்டிய தருணம் உருவாகியுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதாரம், சமூக நிலைமை மற்றும் கலாசாரம் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு வழங்குவது தொடர்பில் ஜனாதிபதியும் அரசாங்கமும் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் நடத்தும்

# தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டுவிழா

### நாளை கோலாகல ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கமும் யாழ். மறை மாவட்டமும் இணைந்து நடத்தும் தமிழ்த்துாது தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டுப் பெருவிழா நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் கோலாகலமாக இடம்பெறவுள்ளது.

"நன்றாகத் தமிழ் செய்வோம்" என்ற தொனிப்பொருளுடன் முன்னெடுக்கப்படும் இவ்விழாவின் முதல் நாள் நிகழ்வு மாலை 6.30 மணி க்கு யாழ். பிரதான வீதியிலுள்ள திருமறைக் கலாமன்றத்தில் நூற்றாண்டு விழாக்குழு இணைச்செயலர் அருட்கலாநிதி அ.பி. ஜெயசேகரம் அடிகள் தலைமையில் இடம்பெறும். இதில் கவிஞர் சோ.பத்மநாதன் தலைமையில் கவியரங்கம், திருமறைக்கலாமன்றம் நடத்தும் தமிழ் ஆடல்கள் என்ற புதிய வகை அளிக்கை நிகழ்ச்சி எனப் பல நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக் கழகத்தில்ஆரம்பமாகும் காலை நிகழ்வில் யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தலைமையில் ஆய்வரங்கம் இடம் பெறும்.தொடர்ந்து விழாவையொட்டி மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் சமகாலத்தில் நடத்தப்பட்ட பேச்சு, கவிதை, கட்டுரைப் போட்டிகளுக்கான பரிசளிப்பு வைபவம் இடம்பெறும். தொடர்ந்து முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட விரிவுரை மண்டபங்களில் ஆய்வரங்கக் கட்டுரைகள் படிக்கப்படவுள்ளன. ஒரே நேரத்தில் இடம்பெறும் நான்கு அமர்வுகளில் 26 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

இவற்றிற்கு பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, முன்னாள் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன், கலாநிதி த.கலாமணி, கலாநிதி ஸ்ரீ.பிரசாந்தன் ஆகியோர் தலைமை தாங்கவுள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கு யாழ். பிரதான வீதி திருமறைக் கலாமன்றத்தில் இடம்பெறும் நிறைவு நிகழ்வு நூற்றாண்டு விழாக் குழுத் தலைவர் பேராசிரியர் தி.வேல் நம்பி தலைமையில் நடைபெறும். இதில் தமிழரின் எதிர்கால அடித்தளம் மொழியா? பண்பாடா? என்ற தலைப்பில் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் பட்டிமண்டபம் மற்றும் திருமறைக் கலாமன்றத்தின் 40 இற்கும் மேற்பட்ட கலைஞர்கள் பங்கு கொள்ளும் அற்றைத்திங்கள் என்ற நாடகம் என்பன மேடையேற்றப்படவுள்ளன.

விழாவையொட்டி கலாநிதி நீ.மரியசேவியரைப் பதிப்பாசிரியராகக் கொண்டு "தமிழ்த்தூது", அருட்பணி செ.அன்புராசாவை பதிப்பாசிரியராகக் கொண்டு 'நூற்றாண்டு விழாச் சிறப்பு மலர்", பேராசிரியர் கி.விசாகரூபன், பேராசிரியர் ஞா.பிலேந் திரன் ஆகியோரைப் பதிப்பாசிரியர்களாகக் கொண்டு 'ஆய்வரங்கக்கட்டுரை மலர்' என மூன்று நூல்கள் வெளியிடப்படவுள்ளன. (10,21,137)

## காவலாளி நியமிக்கப்படாமையால்

# பாதுகாப்பு குறித்து அச்சமடையும் மக்கள்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கிலுள்ள உடுத்துறை மகா வித்தியாலயத்திற்கு காவலாளி ஒருவர் நியமிக்கப்படாமையால் இப் பாடசாலையின் பாதுகாப்பு குறித்து ஐயம் கொள்வதாக வடமராட்சிகிழக்கு மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

வடமராட்சி கிழக்கில் நீண்ட கல்விப் பாரம்பரியத்தை கொண்ட இப்பாடசாலை 1000 பாடசாலைத்திட்டத்தில் உள்ளீர்க்கப்பட்டு சகல வளங்களும் வழங்கப்பட்டநிலையில் பாடசாலைக்கு காவலாளி ஒருவர் இதுவரை நியமிக்கப்பட வில்லை என மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் விடுமுறை ஆரம்பமாக உள்ள நிலையில் இப்பாடசாலை வளங்களின் பாதுகாப்புக் குறித்து தாம் அவதானம் செலுத்துவதாகவும் இதற்கு காவலாளி ஒருவர் அவசியம் நியமிக்கப்பட வேண்டும் எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே இவ் விடயத்தில் உரிய அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுப்பதுடன் விடுமுறைக்கு முன்னர் காவலாளியை நியமிக்குமாறு வடமராட்சிகிழக்கு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# பொதுச்சந்தை புனரமைக்கப்படுமா?

(அச்சுவேலி)

வளலாய் பொதுச்சந்தையானது கடந்த பல வருடங்களாகப் புனரமைப்பின்றிச் சேதங்களுடன் காணப்படுவதாக வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வோரால் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் வியாபாரத்தை மேற்கொள்வதில் தாம் பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்குவதாகவும் சந்தையின் கூரைப் பகுதியும் சேதமடைந்து காணப்படுவதாகவும் அதனால் மழை காலங்களில் வியாபாரத்தை மேற்கொள்வது சிரமமாக இருப்பதாகவும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

எனவே சந்தையினைப் புனரமைத்து வியாபாரத்தை சிறந்த முறையில் நடாத்துவதற்கு உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வியாபாரிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (85)


# பருத்தித்துறை பிரதேச செயலகத்தால் விசேட நடமாடும் சேவை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கிராம அலுவலர் பிரிவு மக்களுக்கு தேசிய அடையாள அட்டையை பெற்றுக் கொடுக்கும் நடமாடும் சேவையொன்று எதிர்வரும் 29 ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாக பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.டி.ஜெயசீலன் அறிவித்துள்ளார்.


இதன்படி ஜே/401,ஜே/417 ஆகிய கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட மக்களுக்கு 28ஆம் திகதி பிரதேச செயலகத்திலும் ஜே/393,ஜே/400 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட மக்களுக்கு 30ஆம் திகதி திக்கம் சனசமூக நிலைய மண்டபத்திலும்இந்த சேவை நடைபெறவுள்ளது. மேலும் ஜே/383 ,ஜே/392 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட மக்களுக்கு 31ஆம் திகதி வல்வெட்டித்துறை பழைய நகரசபை மேல் மண்டபத்திலும் காலை 9மணிமுதல் பிற்பகல் 4மணி வரை நடைபெறவுள்ளது.

இந்நடமாடும் சேவையினூடாக தேசிய அடையாள அட்டை தொலைந்த, பழுதான, இல்லாத மக்களுக்கு அவற்றை பெற்றுக் கொடுக்கும் செயற்பாடு முன்னெடுக்கப்படவுள்ளது. இச் சேவையை பெற்றுக்கொள்ளும் மக்கள் உரிய ஆவணங்களுடனும் புகைப்படத்துடனும் வருகை தருவதுடன் மேலதிக விபரங்களை அவ்வவ்பிரிவு கிராமசேவை அலுவலர்களிடம் பெற்றுக்கொள்ளலாம் என பிரதேசசெயலர் தெரிவித்துள்ளார். (01)



தாவடி அம்பலவாணர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் அண்மையில் நடைபெற்ற தேர் உற்சவத்தின்போது.... (137)

# ரம்ழான் நற்சிந்தனை



மூன்று மனிதர்களுடைய துஆ(பிரார்த்தனை) மறுக்கப்படுவதில்லை.

முதலாவது-நோன்பாளியின் துஆ அவர் நோன்பு திறக்கும் வரை

இரண்டாவது-நீதி செலுத்தும் அரசனின் துஆ

மூன்றாவது-அநீதி இழைக்கப்பட்டவனின் துஆ

அல்லாஹ்தஆலா அதனை மேகங்களுக்கு மேல் உயர்த்தி அதற்காக வானத்தின் கதவுகளை திறந்து வைக்கின்றான் கண்ணியத்தின் மீது ஆணையாக நிச்சமாக எனது உதவி கிடைக்கும் அது தாமதமாக ஆனாலும் சரி என அல்லாஹ் கூறுகின்றான்.

நூல்:- தர்.'.கீப்,அஹமது (105)

# முரசின் இன்றைய பலன்



(26.07.2013 -வெள்ளிக்கிழமை)

விஜய வருஷம் ஆடி மாதம் 10ஆம் திகதி.பூராட்டாதிநட்சத்திரம் பி.இ 04.03 வரை சதுர்த்திதிதி ,சித்தயோகம்,கரிநாள்

இராகுகாலம 10.32- .12.02வரை. சுபநேரம06.02- 07.32 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | பயணத்திற்கான ஏற்பாடு, விவாகமுயற்சி, கண்நோய்க்கு சத்திர சிகிச்சை, தீர்க்கமான முடிவெடுத்தல்,மங்களகாரிய நிகழ்வு. |
| ரிஷபம் | இழுபட்ட விவாகம் முற்றாதல், குழந்தைப்பேறு, சத்திரசிகிச்சை, பெருந்தன்மை, சொத்துப் பிரச்சினை சுமுகம்,சுவீப் அதிர்ஷ்டம். |
| மிதுனம் | மக்களின் உயர்ச்சி,பயணம் இடைநடுவில் விடல்,ஆலயதரிசனம்,கடன்கட்ட நண்பர் உதவி. |
| கடகம் | கவனக்குறைவால் நிறைகுறைவான பொருள் பெறல்,தாயாரின் தேகநல மேம்பாடு, விருந்தினர் வருகை,டெங்கு நோய்த்தாக்கம். |
| சிம்மம் | அரசு தனியார் துறையில் பதவி,பயணம் இலக்கை அடைய வைத்தல்,பணவரவு,நோய் கட்டுப்பாட்டில் வரல்,தவறியது கிடைத்தல். |
| கன்னி | இடமாற்றம் இரத்துச்செய்தல், பயண முயற்சி,திருமணம் கைகூடல்,வேலைப்பளுவால் அவதி,தாரத்தின் தேகசுகம் மேம்படைதல்,கௌரவம் பாதிப்பு. |
| துலாம் | சகோதர அழைப்பில் பயணம்,பிதாவின் உடல்நலம் திருப்தி,புதியன கொள்வனவு, பாதுகாப்பின்மையால் திருட்டு,கணக்கில் மோசடி. |
| விருச்சிகம் | பயணம் ஒத்திவைத்தல்,மனைவியுடன் கருத்து வேற்றுமை,காது நோய் வருத்தல் ,விபத்தினால் உறுப்பு பாதிப்பு,சுவீப் அதிர்ஷ்டம். |
| தனுசு | அதிகாரிகளின் பாராட்டு,திகதி தப்பிய பொருள் கிடைத்தல்,மாமன் உதவி, நித்திரைக்குழப்பம், தொலைந்தது பற்றி முறையிடல். |
| மகரம் | கவனக் குறைவால் திருட்டு, சத்திரசிகிச்சை, ஆவணம் தவறுதல், விதியை மீறியதால் தண்டம், பணவரவு. |
| கும்பம் | அரச பதவி கிடைத்தல், பிதாவின் உதவி, வங்கிக்கடன் பெறுதல்,சுபகாரியச் செலவு, நோய் மாறும் அறிகுறி,வாகனயோகம். |
| மீனம் | பிரயாணம் இடைத்தங்கலில் சேர்த்தல், சொத்துப்பிரச்சினை,சகோதர உதவி,நோய் கட்டுப்பாட்டில்,சுபகாரியம் ஒத்திவைப்பு. |

இந்தியா - சிம்பாப்வே
2ஆவது ஒரு நாள் போட்டி இன்று
மைதானம் : ஹராரே.
நேரம் : பிற்பகல் 12.30.

இலங்கை தென்னாபிரிக்கா
மூன்றாவது ஒரு நாள் போட்டி இன்று
மைதானம் : பல்லேகல – நேரம் : பிற்பகல் 2.30 மணி

# தொடர் பாகிஸ்தான் வசம்



(சென். லூயிஸ்)

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான ஐந்தாவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணி நான்கு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. இதன் மூலம் ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரை பாகிஸ்தான் அணி கைப்பற்றிக் கொண்டது.

மேற்கிந்தியத்தீவுகள், பாகிஸ்தான் அணிகளுக் கிடையிலான் ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன் தினம் மேற்கிந்தியத்தீவின் சென். லூசியாவில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி 50 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 242 ஓட்டங்களைப் பெற்றது. இதில் டி.ஜே. பிராவோ 48, சாமுவேல்ஸ் 45, சார்லஸ் 43, டரன் சமி ஆட்டமிழக்காது 29 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் யுனைட்கான் மூன்று, மொகமட் இர்பான், சயிட் அஜ்மல் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 243 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பாகிஸ்தான் அணி கப்டன் மிஸ்பா உல் ஹக் மற்றும் அசாட் ஷபீக் ஆகி-யோரின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் போராடி வெற்றிபெற்றது. இறுதியில் பாகிஸ்தான் அணி 49.5 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் கப்டன் மிஸ்பா உல் ஹக் 63, அசாட் ஷபீக் 64, உமர் அக்மல் 37 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பெஸ்ட் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இவ்வெற்றியின் மூலம் பாகிஸ்தான் அணி ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள்தொடரை 3-1 என்ற கணக்கில் கைப்பற்றிக்கொண்டது. மூன்றாவது போட்டி சமநிலையில் நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது.இப்போட்டியின் ஆட்டநாயகனாகவும், தொடர் நாயகனாகவும் மிஸ்பா தெரிவானார்.

# வீழ்ச்சிக்குக் காரணம் மிஸ்பா



பாகிஸ்தான் அணியின் சமீபத்திய வீழ்ச்சிக்கு கப்டன் மிஸ்பா உல் ஹக்கின், மோசமான திட்டமிடல் தான் காரணம் என அப்துல் ரசாக் தெரிவித்தார்.

இங்கிலாந்தில் நடந்த சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில், பாகிஸ்தான் அணி ஒரு வெற்றியும் பெறாமல் நாடு திரும்பியது. இது குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே ரசாக் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், கப்டன் மிஸ்பாவின் துடுப்பாட்டம் மிகவும் மந்தமாக உள்ளது. அதிகமான பந்துகளை வீணாக்குவதால், இவருடன் களத்தில் இருக்கும் அல்லது அடுத்து வரும் துடுப்பாட்ட வீரருக்கு கூடுதல் நெருக்கடி ஏற்படுகிறது. மற்றவீரர்களும் நிலையற்ற, துணிச்சலில்லாத ஆட்டத்தை வெளிப்படுத்துகின்றனர். இவர்கள் அதிகமான போராட்ட குணத்துடன் விளையாட முயற்சிக்க வேண்டும். இதுபோன்று நமது எண்ணத்தை மாற்றிக் கொண்டால், இப்போதுள்ள அணி சிறப்பானதாக இருக்கும். பாகிஸ்தான் அணிக்காக மீண்டும் விளையாடுவேன் என்ற நம்பிக்கை உள்ளது. ஏனெனில், இன்னும் இரண்டு ஆண்டு கிரிக்கெட் என்னிடம் மீதமுள்ளது. எனக்கான நேரம் மீண்டும் வரும் என உறுதியாக உள்ளேன் எனத் தெரிவித்தார்.

# பீற்றர்சனுக்குப் பதில்

(லண்டன்)

அவுஸ்ரேலிய அணிக்கெதிரான மூன்றாவது டெஸ்டில், காயத்தால் பாதிக்கப்பட்டுள்ள இங்கிலாந்து வீரர் கெவின் பீற்றர்சனுக்குப் பதிலாக ஜேம்ஸ் டெய்லர் களமிறங்க வாய்ப்பு உள்ளது.லோர்ட்ஸ் மைதானத்தில் நடந்த இரண்டாவது டெஸ்டின் போது, இங்கிலாந்து நட்சத்திர வீரர் கெவின் பீற்றர்சன், கெண்டைக்கால் பகுதியில் காயமடைந்தார். காயத்துக்கு சிகிச்சை மேற்கொண்டு வரும் இவர், மூன்றாவது டெஸ்டில் விளையாடுவது சந்தேகமாக உள்ளது.இதுகுறித்து இங்கிலாந்து அணியின் பயிற்சியாளர் ஆன்டி பிளவர் கூறுகையில், காயத்துக்கு சிகிச்சை மேற்கொண்டு வரும் பீற்றர்சன், மூன்றாவது டெஸ்டில் விளையாடுவது குறித்து பின்னர் முடிவு செய்யப்படும். பயிற்சிப் போட்டியில் விளையாட கிடைத்த வாய்பை ஜேம்ஸ் டெய்லர் சரியாக பயன்படுத்திக் கொள்ளும் பட்சத்தில், மீண்டும் டெஸ்ட் அணியில் இடம் பிடிக்கலாம். இவரை, பயிற்சிப் போட்டியில் விளையாட அனுமதித்த நாட்டிங்காம்ஷயர், சசக்ஸ் அணிகளுக்கு நன்றி என்றார்.

# குத்துச்சண்டை வீரர் மரணம்



அமெரிக்காவைச் சேர்ந்த குத்துச்சண்டை முன்னாள் சம்பியன் இமைல் கிரிப்பித் 75 வயதில் உயிரிழந்தார். 1960ஆம் ஆண்டுகளில் குத்துச்சண்டைப் போட்டிகளில் பெரும் புகழ்பெற்றவராக விளங்கியவர் இமைல் கிரிப்பித். 1962ஆம் ஆண்டில் அவர் உலக சம்பியன் பட்டமும் பெற்றார். இந்தப் போட்டியில் இவருடன் மோதிய, பென்னி பாரெட், கடும் காயம் காரணமாக இறந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. ஞாபக மறதி உள்ளிட்ட நோய்களால் பாதிக்கப்பட்டிருந்த கிரிப்பித், கடந்த சில நாட்களாக அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். இந் நிலையில், நேற்று முன்தினம் காலை சிகிச்சை பலனின்றி அவர் இறந்தார்.

# வெற்றிக்கான போராட்டம்



(ஹராரே)

சிம்பாப்வே அணிக்கு எதிரான ஒருநாள் தொடரை வெற்றியுடன் ஆரம்பித்திருப்பதில் மகிழ்ச்சி. இந்த உத் வேகத்துடன் தொடர்ந்து வெற்றியைத் தக்கவைக்கப் போராடுவோம் என இந்திய அணிக் கப்டன் ஹோலி தெரிவித்துள்ளார்.

முதலாவது போட்டியில் இந்திய வீரர்களின் செயற்பாடு அருமையாக இருந்தது. குறிப்பாக பந்து வீச் சாளர்கள் சிறப்பாகப் பந்துவீசினர். நீண்ட போராட்டத்துக்குப் பின், முதன் முறையாக அணியில் இடம் பிடித்த அம்பதி ராயுடு, கிடைத்த வாய்ப்பை சரியாக பயன்படுத்திக் கொண்டது பாராட்டுக்குரியது. அடுத்து வரும் போட்டிகளிலும் வெற்றியை தக்கவைத்துக் கொள்ள போராடுவோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, அறிமுகப் போட்டியில் அரைச்சதம் அடித்த அம்பதி ராயுடு வெற்றி குறித்து கருத்துத் தெரிவிக்கையில், நீண்ட நாட்களுக்கு பின், அணியில் முதன்முறையாக இடம் பிடித்தது மகிழ்ச்சி அளிக்கிறது. விளையாடும் 11 பேர் அணியில் இடம் கிடைத்ததை அறிந்த நான், போட்டிக்கு முதல் நாள் சரியாக இரவு தூங்கவில்லை. கிடைத்த வாய்ப்பை சரியாகப் பயன்படுத்திக் கொள்ள முடிவு செய்தேன். இதற்கேற்ப, கப்டன் விராத் ஹோலியின் ஒத்துழைப்பு முதல் போட்டியில் சாதிக்க உதவியது. சிறந்த ஒருநாள் போட்டி வீரரான இவருடன் இணைந்து ஆடியதை சிறந்த தருணமாக கருதுகிறேன் என்றார்.

# ரஷ்ய தங்க மங்கை ஓய்வு



(மொஸ்கோ)

ரஷ்ய கோலூன்றிப் பாய்தல் வீராங்கனை இசின்பயேவா மொஸ்கோவில் அடுத்த மாதம் நடக்கும் உலக தடகளத்துடன் ஓய்வு பெறுகிறார்.

கோலூன்றிப் பாய்தல் விளையாட்டின் ராணி என்று அழைக்கப்படுபவர் ரஷ்யாவின் யுலினா இசின்பயேவா. 31 வயதான இவர் ஏராளமான சாதனைகளுக்கு சொந்தக்காரர் ஆவார்.

2004 மற்றும் 2008ஆம் ஆண்டு ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வென்று அசத்திய இசின்பயேவா, பெண்கள் கோலூன்றிப் பாய்தலில் இதுவரை 28 முறை உலக சாதனை தூரத்தை மாற்றி அமைத்துள்ளார். 5 மீற்றர் உயரம் தாண்டிய முதல் வீராங்கனை என்ற சிறப்புக்குரிய இசின்பயேவவா அதிகபட்சமாக 5.06 மீற்றர் உயரம் தாண்டியுள்ளார். இது தான் இந்த நாள் வரைக்கும் உலக சாதனை இலக்காகும்.

நீண்ட காலமாக கோலூன் றிப் பாய்தலில் கோலாச்சி வந்த இசின்பயேவா சமீப காலமாக தடுமாறி வருகிறார். 2012ஆம் ஆண்டு லண்டன் ஒலிம்பிக்கில் அவரால் வெண்கலமே வெல்ல முடிந்தது. இதையடுத்து அவர் இந்த விளையாட்டில் இருந்து விடைபெற முடிவு செய்துள்ளார்.

இரண்டு முறை உலக சம்பியனான இசின்பயேவா மொஸ்கோவில் ஊடகவியலாளர்களுக்கு ஓய்வு குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில், உலக தடகள சம்பியன்ஷிப் போட்டி அடுத்த மாதம் (ஒகஸ்ட் 10 முதல் 18ஆம் திகதி வரை) எங்கள் நாட்டில் நடைபெறுகிறது. இந்தப் போட்டியுடன் எனது விளையாட்டு வாழ்க்கையை நிறைவு செய்து கொள்கிறேன். இங்கு தான் எனது முதல் பட்டத்தை வென்றேன். இங்கேயே எனது கடைசிப் போட்டியிலும் பங்கேற்க இருப்பது, பழைய நினைவுகளைக் கொண்டு வரும்.

இந்தப் போட்டியை வெற்றிகரமாக மகிழ்ச்சியுடன் முடிக்க ஆசைப்படுகிறேன். இதில் எனது மிகச்சிறந்த திறமையை வெளிப்படுத்தப் போராடுவேன். அது மட்டுமின்றி இங்கு ஏராளமான இரசிகர்கள் நேரில் வந்து என்னை உற்சாகப்படுத்துவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். எனவே நான் அபாரமான தி-றமையை காட்ட வேண்டியது முக்கியம். அதற்கு நான் தயாராக இருக்கிறேன் என்றார்.

# விளையாட்டு விழா

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஞான சம்பந்தர் கலைமன்ற முன்பள்ளியின் விளையாட்டு விழா இன்றும், நாளையும் மன்ற மைதானத்தில் நடைபெறவுள்ளது. கீழ்ப் பிரிவு சிறார்களுக்கான போட்டி இன்றைய தினம் மன்றத்தலைவர் சுந்தரமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது. இப்போட்டியின் பிரதம விருந்தினராக மன்ற உப தலைவர் க. பாலசுப்பிரமணியம் கலந்துகொள்ளவுள்ளார்.

மேற்பிரிவு சிறார்களுக்கான போட்டி நாளைய தினம் இடம்பெறவுள்ளது. மேற்பிரிவு போட்டிக்கான பிரதம விருந்தினராக வடமராட்சி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். தில்லைநாதன், சிறப்பு விருந்தினராக சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி தயாநிதி சத்தியலோகன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (01)

# வெள்ளையடிப்புச் செய்வோம்

(லண்டன்)

அவுஸ்ரேலிய அணிக்கெதிரான ஆஷஸ் தொடரை முழுமையாகக் கைப்பற்றி (வைட்வோஸ்) வெள்ளையடிப்புச் செய்வோம் என இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் அண்டர்சன் தெரிவித்தார். இங்கிலாந்து அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையில் வரலாற்றுச் சிறப்பு மிக்க தொடராக இடம்பெற்று வரும் ஆஷஸ் டெஸ்ட் தொடரில் இரண்டு போட்டிகள் நிறைவடைந்துள்ள நிலையில் மேற்படி கருத்தை அண்டர்சன் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், நிறைவடைந்த இரு போட்டிகளிலும் வெற்றிபெற்று தொடரில் முன்னிலை வகிப்பது மகிழ்ச்சி. தொடர்ந்து இடம்பெறவிருக்கும் மூன்று போட்டிகளிலும் வென்று அவுஸ்ரேலிய அணிக்கு வெள்ளையடிப்புச் செய்வதே எமது நோக்கம். அது சாத்தியம் என்று நம்புகின்றோம் எனவும் அவர் தெரிவித்தார்.

# சாவற்கட்டில் இன்று கால்பந்து இறுதி

(சாவக்காடு)

ஆனைக்கோட்டை சாவற்கடு மகாத்மா விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப் பட்ட மாபெரும் கால்பந்தாட்டத் தொட ரின் இறுதிப்போட்டி இன்றைய தினம் மகாத்மா விளையாட்டு அரங்கில் இடம் பெறவுள்ளது.

சாவற்கடு மகாத்தமா விளையாட்டுக் கழகத்தினால் நடாத்தப்பட்ட இப் போட் டித் தொடர் அணிக்கு ஏழு பேரைக் கொண்டதாக இடம்பெற்றது.

அதிகளவிலான அணிகள் பங்கு கொண்டபோதும் இதன் இறுதிப் போட்டிக்கு கலைஒளியும், பாரதி அணி யும் தகுதி பெற்றன. இறுதிப் போட்டி இன்றைய தினம் மாலை மகாத்மா விளையாட்டு அரங்கில் இடம்பெறவுள் ளது. இதேவேளை மூன்றாமிடத்திற்கான போட்டியில் சென். பீற்றர் அணியை எதிர்த்து ரேட்றேஞ்சர் அணி மோத வுள்ளது.

இப்போட்டி நிகழ்வில் கிராமப் பெரி- யோர், விளையாட்டு நலன்விரும்பிகள், ஆதரவாளர்கள் என அனைவரையும் கலந்து கொண்டு போட்டியைக் கண்டு களிக்குமாறு போட்டி அமைப்பாளர்கள் கேட்டுள்ளனர்.

# பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட விளையாட்டு முள்ளியவளை வித்தியானந்தாவில் 22 வீரர்கள் தகுதி



கராத்தேப் போட்டியில் பதக்கம் வென்றோர்

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட விளையாட்டுப்போட்டிக்கு முல் லைத்தீவு முள்ளியவளை வித்தியானந் தாக் கல்லூரியைச்சேர்ந்த 22 வீர, வீராங்கனைகள் தகுதி பெற்றுள்ளனர்.

வடக்குமாகாண பாடசாலைகளுக் கிடையிலான விளையாட்டுப் போட்டி அண்மையில் யாழ்ப்பாணத்தில் நிறை வடைந்தது. இதில் கிளிநொச்சி, முல் லைத்தீவு, வவுனியா, மன்னார், யாழ்ப் பாணம் ஆகிய மாவட்டங்களைச்சேர்ந்த பாடசாலை அணிகள் பங்குகொண்டன. இதில் மீள்குடியேற்றப்பட்ட முல்லைத் தீவு முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி அணி வீரர்கள் திறம்படச் செயற்பட்டு அனைவர் பாராட்டையும் பெற்றுக்கொண்டதுடன் தேசிய மட்டப் போட்டிக்கும் பலர் தகுதி பெற்றுள்ளனர்.

15 வயதுப் பிரிவு பெண்களுக்கான குழு கட்டாப்போட்டியில் மதங்கி, சஜோ ஜினி, வகீசா வெள்ளிப் பதக்கம்வென்ற துடன், 17 வயதுப் பிரிவு பெண்களுக்கான குழுக்காட்டாப் போட்டியில் தர்ஷா, டிலக்ஷனா, தாட்சாயினி ஆகியோர் வெண்கலப் பதக்கத்தையும், 15 வயதுப் பிரிவு பெண்களுக்கான 4X400 மீற்றர் ஓட்டத்தில் வகீசா, சஜோஜினி, ரெஸ் ரிகா, மோகனப்பிரியா, கேசங்கா ஆகி- யோர் மூன்றாமிடத்தையும், 17 வயதுப் பிரிவு பெண்களுக்கான 4X400 மீற்றர் போட்டியில் நான்காமிடத்தையும், 19 வயதுப்பிரிவு ஆண்களுக்கான முப் பாய்ச்சல் போட்டியில் கீர்த்திகாசன் நான்காமிடத்தையும், 19 வயதுப்பிரிவு ஆண்களுக்கான உயரம் பாய்தலில் அனோஜன் மூன்றாமிடத்தையும், 15வய துப் பிரிவு பெண்களுக்கான தடை தாண்டல் போட்டியில் கேசங்கா மூன்றா மிடத்தையும், 20 வயதுப் பிரிவு பெண் களுக்கான பாரம் தூக்குதல் போட்டியில் சரண்யா முதலாமிடத்தையும், 19 வய துப்பிரிவு பெண்களுக்கான பாரம் தூக் குதல் போட்டியில் திலக்ஷனா முதலாமிடத்தையும், 17 வயதுப் பிரிவு பெண்களுக்கான பாரம் தூக்குதல் போட்டியில் தர்சிகா முதலாமிடத்தையும், 15 வயதுப் பிரிவு பெண்களுக்கான பாரம் தூக்குதல் போட்டியில் சுதர்சனா மூன்றாமிடத்தையும் பிடித்து தேசிய மட்டப் போட்டிகளுக்குத் தகுதி பெற் றுள்ளனர்.

தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்ற மேற்படி முள்ளியவளை வித்தி யானந்தாக்கல்லூரி வீர,வீராங்கனை களுக்கு கோட்ட, வலயப் பாடசாலை சமூகம், கல்வி அதிகாரிகள், விளை யாட்டு நலன் விரும்பிகள் பாராட்டுத் தெரிவித்ததுடன் தேசிய மட்டப் போட்டி யில் அசத்தி கல்லூரிக்கும், மாவட்டத் திற்கும் பெருமை சேர்க்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர். (எஸ்.பி.)

# காரைநகர் பிரதேச மென்பந்து கிரிக்கெட் கிண்ணம் வென்றது கோவளம் அணி

(காரைநகர்)


காரைநகர் பிரதேசத்திற்குட்பட்ட மென் பந்து கிரிக்கெட் அணிகளுக்கிடையில் நடாத்தப்பட்ட மாபெரும் மென்பந்து கிரிக்கெட் போட்டியில் கோவளம் அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனைக்கு அமைவாக காரைநகர் பிரதேசத்திற்குட்பட்ட அணிகளுக்கிடை யில் பெருவிளையாட்டு மற்றும் பாரம் பரிய விளையாட்டுப் போட்டிகள் நடாத் தப்பட்டு வருகின்றன.

இதில் பிரதேச அணிகளுக்கிடை யிலான மென்பந்து கிரிக்கெட் போட்டி கடந்த 22ஆம் திகதி காரைநகர் சிவ காமி அம்பாள் விளையாட்டு அரங்கில் இடம்பெற்றது. இதில் 11இற்கும் மேற்பட்ட அணிகள் பங்குகொண்டபோதும், இப் போட்டித் தொடரின் இறுதிப் போட்டிக்கு காரைநகர் கோவளம் அணியும், கலா நிதி அணியும் தகுதி பெற்றன.

அணிக்கு ஆறு பேர் கொண்ட இப் போட்டித் தொடர் ஐந்து ஓவர்களாக இடம்பெற்றது. இதில் நாணயச் சுழற்சி யில் வெற்றிபெற்று முதலில் ஆடிய கோவளம் அணி 5 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 54 ஓட்டங்களைப்பெற்றது.

பதிலுக்கு 56 ஓட்டங்களைப் பெற் றால் வெற்றி என்ற நிலையில் கள



மிறங்கிய காரைநகர் கலாநிதி அணி 5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 42 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது. இப்போட்டியில் வெற்றியீட்டிய கோவளம் அணிக்கு பாரம் பரிய விளையாட்டு விழாவின் இறுதி நாள் பரிசளிப்பின்போது கிண் ணம் வழங்கப்படும் என போட்டி அமைப்பாளர்கள் தெரி வித்துள்ளனர். இப்போட்டி நிகழ்வை ஈ.பி.டி.பி.யின் காரைநகர் பிரதேச அமைப்பாளர் வீ. கண்ணன் கைலாகு கொடுத்து ஆரம்பித்து வைத்தார். இப் போட்டிகள் காரைநகர் பிரதேச சமுர்த்தி உத்தியோகத்தர் சி. கபி லன் தலைமையில் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மஞ்சி கரப்பந்து

## மட்டுவிலில் நாளை ஆரம்பம்

(மட்டுவில்)

மஞ்சி வெற்றிக் கிண்ணத்திற்கான கரப்பந் தாட்டத்தொடரின் தென்மராட்சிப் பிரதேச அணி களுக்கிடையிலான போட்டிகள் நாளைய தினம் மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக்கழக மைதா னத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் இப்போட்டியில் தென் மராட்சிப் பிரதேசத்திற்குட்பட்ட முன்னணி அணி கள் பல பங்குகொள்கின்றன.

இப்போட்டிகளில் பங்குகொள்ளவுள்ள அணி குறித்த நேரத்திற்கு வருகை தந்து போட்டியை சிறப்புற நடாத்த ஒத்துழைப்புத் தருமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ள துடன் போட்டி ஒழுங்கு பங்குபற்றும் அணி களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (118)

# வென்றது இலங்கை

பெண்கள் உலக ருவெண்ரி-20 தொட ருக்கான அணிகளைத் தெரிவதற்காக இடம்பெற்றுவரும் தகுதிகாண் போட்டி களில் இலங்கை அணி முதலாவது போட்டியில் வெற்றிபெற்றுள்ளது. கனடா அணிக்கெதிரான போட்டியில் இலங்கை அணி 9 விக்கெட்டுக்களால் மிக இலகுவாக வெற்றிபெற்றது.

அயர்லாந்து, டப்ளினில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய கனடா அணி 17.5 ஓவர்களில் சகல விக்கெட் டுக்களையும் இழந்து 44 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 45 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி இலக்குடன் கள மிறங்கிய இலங்கை அணி, 6.1 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. இப்போட்டியின் நாயகியாக இலங்கை யின் சண்டிமா குணரத்ன தெரிவானார்.



மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்ட மாபெரும் கரப்பந்தாட்டத்தொடரில் கிண்ணம் வென்ற ஆவரங்கால் மத்தி அணியைக்காணலாம். கடந்த 22ஆம் திகதி மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் அச்சுவேலி ஸ்ரார் அணியை வீழ்த்தி ஆவரங்கால் மத்தி அணி கிண்ணத்தைக் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது.

# தவறான தீர்மானங்களையே மேதாவித்தனமாக எண்ணும் தலைமைகள்!

(தோழர் மணியம் எழுதும் வதைமுகாம் அனுபவத் தொடரிலிருந்து...)

1977இல் பதவிக்கு வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் எடுத்த அமெரிக்க சார்பான நிலைப்பாடு தான், அன்றைய அமெரிக்க - சோவியத் பனிப்போர் காலத்தில் சோவியத் சார்பு நிலையை எடுத்திருந்த இந்திரா காந்தி தலைமையிலான இந்திய அரசாங்கம் ஜே.ஆரின் அரசுக்கெதிரான ஒரு தீவிரமான நிலைப்பாட்டை எடுக்கத் தூண்டியது என்பது இன்று அநேகமானோரால் ஏற்றுக்கொள்ளும் ஒரு உண்மையாகிவிட்டது.

ஆனால் அன்றைய நிலையில் ஜே.ஆர் ஒரு பக்கத்தில் அமெரிக்க சார்பு நிலையை எடுத்துக்கொண்டு, மறுபக்கத்தில் இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையை யுத்தமாக மாற்றி தமிழின அழிப்பில் ஈடுபட்டதால், அது இந்திரா காந்தி இலங்கையில் தமிழர் பிரச்சினையைப் பயன்படுத்தி தலையீடு செய்வதற்கு வாய்ப்பாகப் போய்விட்டது. இந்த உண்மையையும் இன்று பலர் (புலிகளை ஆதரிப்பவர்கள் உட்பட) ஏற்றுக் கொள்கின்றனர்.

இன்று எடுத்ததெற்கெல்லாம் இந்திய விரோத கூச்சல் போடுபவர்கள், அன்றைய காலகட்டத்தில் இந்திராவின் அரசாங்கம் உள் நோக்கத்துடன் இலங்கைப் பிரச்சினையைப் பயன்படுத்தியதைப் பார்க்கத் தவறிவிட்டனர். பொதுவாக தமிழ் தலைமைகளும் சரி, அவர்களால் வழி நடாத்தப்படும் தமிழ் “பெருங்குடி” (மேட்டுக் குழாமினர்) மக்களும் சரி, வரலாற்று நிகழ்வுகளைப் புரிந்து தம்மைச் சுதாகரித்துக் கொள்வதற்கு சுமார் 30 வருடங்களைக்கூட எடுத்திருக்கின்றனர் என்பதை, இன்று வரலாற்றைத் திரும்பிப் பார்க்கும் போது புரிந்து கொள்ள முடிகிறது. அவர்கள் அதைப் புரிந்து கொள்வதற்குள் வரலாறு இன்னொரு காலகட்டத்திற்குள் பிரவேசித்து விடும். இன்றும் அதுதான் நிகழ்ந்து வருகிறது.

இந்த இடத்தில் தமிழ் தலைமைகள் பற்றிய சுவாரசியமான விடயம் ஒன்றைக் கூற விரும்புகிறேன்.


1947இல் அமைந்த சுதந்திர இலங்கையின் முதலாவது அரசாங்கம், அப்போதைய ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் டி.எஸ்.சேனநாயக்க தலைமையில் அமைந்தது. அதில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஜீ.ஜீ.பொன்னம்பலம் மந்திரிப் பதவி ஏற்றார். (அப்பொழுது பின்னர் அதிலிருந்து பிரிந்து சென்று தமிழரசுக் கட்சியை உருவாக்கிய எஸ்.ஜே.வி.செல்வநாயகமும் அவரது சகாக்களும் தமிழ் காங்கிரஸில் தான் இருந்தனர்) டி.எஸ்ஸின் அரசாங்கம் அந்தத் தேர்தலில் மலையக மக்கள் தமது பகுதிகளில் ஐ.தே.கவுக்கு எதிரானவர்களுக்கு வாக்களித்து வெற்றிபெற வைத்துவிட்டார்கள் என்பதற்காக, அவர்களைப் பழி வாங்கும் நோக்குடன் இந்திய வம்சாவழி மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் பிரஜாவுரிமையையும், வாக்குரிமையையும் பறித்து அவர்களை நாடற்றவர்களாக்கியது.

ஐ.தே.க அரசின் இந்த நடவடிக்கையை அந்த மந்திரி சபையில் ஒரு உறுப்பினராக இருந்த ஜீ.ஜீ.பொன்னம்பலம் ஆதரித்து வாக்களித்து, அந்த மக்களுக்குத் துரோகமிழைத்ததின் மூலம், யாழ்ப்பாணத் தமிழ் தலைமை அழியாத வரலாற்றுக் கறையைப் பூசிக் கொண்டது. பொன்னம்பலத்தின் இந்தச் செய்கையை ஆட்சேபிப்பதாகக் கூறி, செல்வநாயகமும் அவரது சகாக்களும் தமிழ் காங்கிரஸிலிருந்து வெளியேறி தமிழரசுக் கட்சியை உருவாக்கினர். அதன் பின்னர் 30 வருடங்களுக்கும் மேலாக பொன்னம்பலமும் செல்வநாயகமும் கீரியும் பாம்புமாக செயல்பட்டு தமிழ் மக்களின் வாழ்க்கையில் மண் அள்ளிப் போட்ட கதை எல்லோரும் அறிந்த ஒன்றாகும்.

இப்படி ஏட்டிக்குப் போட்டியாக ஒருவரை ஒருவர் “துரோகி” என வசைபாடி அரசியல் செய்த இரு பகுதியினரும், பின்னர் 1965இல் டட்லி சேனநாயக்க தலைமையில் அமைந்த ஏழு கட்சி கூட்டரசில் இணைந்து கொண்டு அமைச்சர் பதவியும், துணை சபாநாயகர் பதவியும் பெற்றுக் கொண்டனர்.

இந்த நிலைமை குறித்து கரவெட்டியில் நடைபெற்ற தமிழ் காங்கிரஸ் பொதுக்கூட்டம் ஒன்றில் உரை நிகழ்த்திய ஜீ.ஜீ.பொன்னம்பலம், “அன்று நான் டி.எஸ்.சேனநாயக்கவுக்கு உடந்தையாக இருக்கிறேன் என என்னைத் தமிழினத் துரோகி எனத் தூற்றி என்னை விட்டு வெளியேறிய... (செல்வநாயகத்தின் காது கேளாமை குறித்து மட்டமாகவும் ஒருமையில் அவரை விளித்து) செல்வநாயகமும்... கூட்டாளிகளும் இப்பொழுது அவரது புதல்வர் டட்லியின் அரசில் வந்து ஒட்டிக் கொண்டிருக்கிறாங்கள். இந்தப் பொன்னன் செய்வதை விளங்கிக் கொள்ளவே இவங்களுக்கு 20 வருசம் தேவைப்படுது” என, தமிழரசுக் கட்சியினரைப் பற்றி மிகவும் இளக்காரமாகப் பேசினார்.









மத்தியவர்க்க அப்பாக்களுக்கே உள்ள குணமோ என்னவோ அல்லது ஏதாவது ஒரு கட்டத்தில் மனதின் ஒரு பகுதி இறுகிப் போனதனால் இருக்கலாம், என் அப்பா என்னிடம் வெளிப்படையாக அன்பு காட்டி பாராட்டிய தருணங்கள் மிக மிக குறைவு. அல்லது என் நினைவில் இருந்து அகன்று போயினவா? நிறைய பேருக்கு பெற்றோர் மீது குற்றச்சாட்டுகள் உள்ளதை கண்டிருக்கிறேன். எனக்கும் அப்பா மீது உண்டு. எவ்வளவோ.

சின்ன வயதில் நான் பள்ளியில் முதல் மதிப்பெண் வாங்கும் போதும் எப்படியாவது அதை மட்டம் தட்டி தான் பேசுவார். பிறகு கல்லூரியில் ஐந்து வருடங்களும் ஒவ்வொரு செமஸ்டரும் முதல் மதிப்பெண் வாங்கினேன். அவர் கண்டு கொள்ளவில்லை. முதுகலையில் தங்கப்பதக்கம் கிடைத்த போதும் அவர் பொருட்படுத்தவில்லை. எப்போதும் நான் எழுதியதை புறக்கணிப்பார் பரிகாசம் செய்வார். என்னுடைய முதல் நூலை கொண்டு வருவதில் நான் ரொம்ப ஆசை கொண்டிருந்ததற்கு காரணம் அப்போதாவது அவர் முன் என்னை பொருட்படுத்தத்தக்கவனாய் காட்ட வேண்டும் எனும் எண்ணம் தான். ஆனால் என் முதல் நூல் வரும் முன் இறந்து விட்டார். அதை நினைத்தால் கூட எனக்கு கோபம் தான் வந்தது.

இப்போது நினைக்க சிறுபிள்ளைத்தனமாக இருக்கிறது. ஏன் அவரது பாராட்டுக்காக அவ்வளவு ஏங்கினேன்? ஏதோ ஒரு விதத்தில் குறைபட்டவனாக என்னை எண்ணினேனா அல்லது அவரது அன்பின் போதாமையை உணர்ந்ததனால் ஈடு கட்ட ஏங்கினேனா?

எல்லா அப்பாக்களையும் போல் என் அப்பாவும் எனக்காக என்னன்னமோ பண்ணியிருக்கலாம். ஆனால் அவை எதுவுமே நினைவில் இல்லை. அப்பா குறித்து மனதில் உள்ளவை கணிசமாக அவரைப் பற்றி அம்மாவோ பாட்டியோ சொன்னவை. ஒன்று என்னை சிறு வயதில் அவர் தூக்கிப் போட்டு விளையாடும் போதும் டப்பென்று கீழே போட்டு விட்டதும் நான் தென்னை ஓலைகள் மீது விழுந்ததும். இன்னொன்று நான் சின்ன வயதில் ஒரு ஆயுர்வேத நிலையத்தில் காலில் போலியோவுக்காக தென்னமடல்களால் கட்டப்பட்டு கடும் வலியில் அழும் போது அங்கு அருகாமையில் உள்ள வாதாம் மரங்களில் இருந்து பருப்பு கேட்பேனாம். அப்பா ஏறி பறித்து தந்ததாய் ஒரு கதை சொன்னார்கள். ஆனால் அவர் நிஜத்தில் மரமேறி பார்த்ததில்லை.

அவருக்கு புற்றுநோய் முற்றியிருந்த நாட்கள். நான் ஊருக்கு போயிருந்தேன். அவருடன் நிறைய நேரம் செலவழித்தேன். மிக மிக தளர்ந்திருந்தார். எந்தளவுக்கு என்றால் அவருக்கு கிரிக்கெட் சுத்தமாய் பிடிக்காது. ஆனால் அதைக் கூட டி.வியில் ஓட மாற்ற ஆர்வமின்றி பார்த்துக் கொண்டிருந்தார். அந்த நேரத்தில் ஒருமுறை கூட என்னிடம் ஒன்றும் அன்பாக விசாரிக்கவில்லை என ரொம்ப வருத்தமாக இருந்தது. அதனாலே நான் இனி அங்கு இருக்க மாட்டேன் என அம்மாவிடம் கோபமாக சொல்லிவிட்டு கிளம்பினேன். அப்பா அப்போதும் ஒன்றும் சொல்லவில்லை. மாலை போகும் முன் என் கையை ஒருமுறை பற்றிக் கொண்டார். அவ்வளவு தான். பிறகு சில மணிநேரங்களில் போய் சேர்ந்து விட்டார். அப்போது நான் சென்னைக்கு பேருந்தில் வந்து கொண்டிருந்தேன்.

ஒரு நாள் டி.வியில் ஒரு படக்காட்சி பார்த்த போது சட்டென்று அதில் வருவது போல் அப்பா எனக்கு சிறுவயதில் பலமுறை சோறு ஊட்டினது நினைவு வந்தது. அந்த சோறின் வாசனை, அவரது உள்ளங்கையின் சுவை கூட மிக அணுக்கமாக மனதில் எழுந்தது. எனக்கு ஆச்சரியம் இது போல் எத்தனை அன்பான நினைவுகளை எங்கோ மீட்க முடியாதபடி புதைத்து வைத்திருக்கிறேன் என்று. எல்லோரிடமும் இப்படித் தான் இருக்கிறோம். கோபமும் வருத்தமும் ஒருவரது அன்பான செய்கைகளை முழுக்க மறக்க செய்கின்றன.

## பரீட்சை!



நகைச்சுவையோடு பேச்சாற்றலில் புகழ்பெற்று விளங்கியவர் இங்கிலாந்து பிரதமராக இருந்த வின்ஸ்டன் சேர்ச்சில். கல்வி பற்றியும் பரீட்சைகள் பற்றியும் அவர் சொன்னார்:

“எனக்குப் பன்னிரெண்டு வயதாகும்போது எனக்குச் சற்றும் பிடிக்காத பரீட்சைகளை எழுத நேர்ந்தது. அவை எனக்குப் பெரும் சோதனையாகவே முடிந்தது. ஏனென்றால் தேர்வாளர்கள் எந்தெந்தப் பாடங்களை பரிசோதிக்க விரும்பினார்களோ அவை எனக்குச் சற்றும் விருப்பமில்லாதவை. எனக்குப் பிடித்த கவிதை, கட்டுரை, வரலாறு பாடங்களை விட்டுவிட்டு கணக்கிலும் இலத்தீன் மொழியிலும் எனது அறிவை சோதிக்க விரும்பினர். எனக்கு என்ன தெரியுமோ அதை விட்டுவிட்டு எது தெரியாதோ அதைப் பற்றியே அதிகம் கேட்டார்கள். அதனால் அந்தப் பரீட்சைகள் எனது அறிவை சோதிப்பதைவிட்டு அறியாமையை சோதித்தன. விளைவு, அந்தப் பரீட்சைகளை நான் சரிவர எழுதாமலேயே போய்விட்டது!”

# மரியான்






- சுரேஷ்குமார் -

இது "மரியான்" பற்றிய படம். திடீரென விழித்து, தமிழனை சுட்டுட்டாங்க என தனுஷ் சிலிர்த்தெழவில்லை. குறைந்தபட்சமான இந்த எதார்த்தமே, தமிழ்ப் படங்களில் பார்ப்பது அபூர்வமாகி வருகிறது. ஒரே ஒரு வசனம் போதும் மக்களை முட்டாளாக்க என, தனுஷின் நரம்புகளை முறுக்கேற்றி யார் காதையும் பதம் பார்க்கவில்லை.

சூழலால் நீரோடி கிராமத்தில் இருந்து சூடான் நாட்டிற்கு வேலைக்கு செல்லும் மரியான், அந்நாட்டில் ஏற்படும் பிரச்சினையில் இருந்து தப்பினானா என்பதற்கு பதிலுடன் படம் நிறைவுறுகிறது.

அம்பிகாபதியில் அசத்திய தனுஷின் நடிப்பு கண்ணிலிருந்து மறையும் முன் மரியானில் மீண்டும் தனது நடிப்புத் திறமையை மேலும் அழுத்தமாகப் பதிக்கிறார். 2011 இல் வெளிவந்த மயக்கம் என்ன படத்திலிருந்தே பெரிதும் வியக்க வைக்கிறார். காதல், பிரிவு, வலி, உறுதி, எழுச்சி எனப் படத்தினை ஐந்தாகப் பிரித்துள்ள இயக்குநர் பரத்பாலாவின் எதிர்பார்ப்பை, தனது நடிப்பால் சிந்தாமல் சிதறாமல் பூர்த்தி செய்துளார் தனுஷ். 50 அடி ஆழக் கடலினுள் நடப்பது, நமீபியா பாலைவனங்களில் வெறும் காலுடன் நல்ல வெயிலில் நடப்பது என தனுஷை இயக்குநர் சக்கையாகப் பிழிந்துள்ளார்.

மீனவ கிராமத்திலேயே மிகுந்த அழகுடையவளான நாயகி தன்னைத் துரத்தினாலும் அவளிடமிருந்து விலகிச் செல்வதும் அவள் நன்மைக் காகவே தான் அவளை வெறுப்பதாகவும் தனுஷ் சொல்கிறார். முதல் பாதி முழுக்க இப்படியான காட்சிகளால் தனுஷின் மரியானை எல்லாரையும் முந்திச் செல்லும் சாகச நாயகனாக நிறுவிட இயக்குநர் முயன்றிருக்கிறார். இதற்கான தேவை என்ன? ஏன் நாம் எப்போதும் தலைமைப் பண்புகள் நிறைந்த வர்கள் மட்டுமே நாயகனாக இருக்க முடியும் என நம்புகி றோம்? இவை ஏதும் இல்லாமல் சாதாரண மனிதனால் தன் சாவோடு போராடி வெல்ல முடியாதா எனும் கேள்விகள் இங்கே தொக்கி நிற்கின்றன.

நாயகனையே சுற்றிச் சுற்றி வரும் வழக்கமான நாயகி என பார்வதியை சுலபமாக புறந்தள்ளி விட முடியாது. பனிமலராகவே திரையில் வலம் வருகிறார். முகபாவனைகளாலேயே கலக்குகிறார். தனுஷ்-பார்வதியின் நெருக்கமான காதல் காட்சிகள் முதல் ஊடல் காட்சிகள் வரை என சகலமும் மார்க் கோனிக்சின் ஒளிப்பதிவில் வெகு அற்புதமாக உள்ளது. பெல்ஜியம் காரரான அவர் கதையை உள்வாங்கி அழகான விஷுவலாக வெளிக்கொணர்ந்துள்ளார்.

ஆழி சூழ் உலகு, கொற்கை ஆகிய நாவல்களை எழுதிய ஜோ டி க்ருஸ் படத்திற்கு வசனம் எழுதியுள்ளார். இப்படத்திற்கு வசனமெழுத இவரை விட பொருத்தமானவர் வேறு எவருமில்லை என்றே சொல்ல வேண்டும். எப்படியோ தமிழ்த் திரையுலகிற்குள் இன்னுமொரு எழுத்தாளர் பிரவேசித்து இருப்பது ஆரோக்கியமான விஷயமே. அதே போல் கவிஞர் குட்டி ரேவதி, இந்தப் படத்தில் இரண்டு பாடல் எழுதியதோடு மட்டுமல்லாமல் சீனியர் அசோசியேட் இயக்குநராகவும் பணியாற்றியுள்ளார்.

படம் தரும் தாக்கத்தை உறுதிப்படுத்துவது ஏ.ஆர்.ரஹ்மானின் பின்னணி இசையே. யுவன்சங்கர் ராஜா ஒரு பாடல் பாடியிருக்கிறார்.

படம் முழுவதும் தனுஷ் வியாபித்து இருந்தாலும், கண்டிப்பாக இது இயக்குநரின் படமே. முதல் பாதியில் காதலும், இரண்டாம் பாதியில் போராட்டமும் என படம் இரண்டு வெவ்வேறு பாதையில் செல்கிறது. நீர்ப்பறவை போல் படம் நேரடியாக எதுவும் சொல்ல முற்பட வில்லை; எதையும் வலிந்து திணிக்கவு மில்லை. இது மரியானின் கதையை சொல்லும் படம். ஆக நீர்ப்பறவையை விட நேர்மையான படைப்பே!

---

# தாய்லாந்தின் "தண்ணீர் திருவிழா"

ஐரோப்பாவின் "அந்தப்புரம்" என அழைக்கப்படும் தாய்லாந்தில், மசாஜ் மட்டுமின்றி அந்நாட்டு பாரம்பரியத்தையும், கலாசாரத்தையும் வெளிப்படுத்தும் விதவிதமான வேடிக்கை திருவிழாக்களும் உண்டு.









அத்தகைய திருவிழாக்களில் ஒன்று "சோங்ரன்" (SONGKRAN). இது வட இந்தியாவின் ஹோலி பண்டிகையைப் போன்ற ஒரு வேடிக்கையான "தண்ணீர் திருவிழா".



ஆண்டுதோறும் ஏப்ரல் 13 முதல் 15 வரை 3 நாள்கள் கொண்டாடப்படும் இந்த திருவிழாவின்போது வெளியூர் களிலும், வெளிநாடுகளிலும் இருப்பவர்கள் சொந்த ஊருக்கு திரும்பி வந்து குடும்பத்தினருடன் கூடி மகிழ்கின்றனர். கோயில்களுக்குச் சென்று வழிபாடும் நடத்துகின்றனர்.

திருவிழாவில் முக்கியமானதும், வேடிக்கையானதும் "தண்ணீர் அடிக்கும்" கொண்டாட்டம்தான். தாய்லாந்து நாட்டு தெருக்களில் வயது வேறுபாடின்றி அனைவரும் கையில் கிடைத்த பாத்திரங்களுடன் கூடி ஒருவர் மீது ஒருவர் தண்ணீரை வாரி இறைத்தும், துப்பாக்கி மூலம் மற்றவர்கள் மீது தண்ணீரை பீய்ச்சி அடித்தும் மகிழ்கின்றனர். சாலைகளில் செல்லும் யாருமே தப்பிக்க முடியாது. உள்ளூர் மக்கள், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் என அனைவரும் தண்ணீர் அபிஷேகத்தை இரசிக்கின்றனர்.



அதுமட்டுமின்றி, "டின் சோர் பாங்" என்ற சுண்ணாம்புத் தூளை சந்தனம் போன்று தண்ணீரில் குழப்பி ஒருவருக்கொருவர் கன்னத்தில் பூசி வாழ்த்து தெரிவிக்கின்றனர். வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை வரவேற்கும் வகையில் அவர்களுக்கும் சுண்ணாம்பு பசையைக் கன்னத்தில் பூசி ஆரவாரம் செய்கின்றனர். தண்ணீர் அடிப்பதாலோ, இந்த சுண்ணாம்பு பசையை பூசுவதாலோயாரும் கோபப்படுவதில்லை. எல்லோரும் இரசித்து திருவிழாவை கொண்டாடு வது கண்கொள்ளாக் காட்சி.

தாய்லாந்தின் புத்தாண்டும் ஏப்ரலில்தான் தொடங்குகிறது. கோடைகாலமான இந்த நாள்களில் புத்தாண்டை வரவேற்கும் வகையில்தான் இந்த தண்ணீர் அடிக்கும் திருவிழா. தண்ணீரின் குளிர்ச்சியை அதிகரிக்க அதில் ஐஸ் கட்டிகளையும் சேர்த்துக் கொள்கின்றனர்.

தாய்லாந்து தலைநகர் பாங்கொக் நகர வீதிகளில் எங்கு பார்த்தாலும் "தண்ணீர் அடிக்கும்" கூட்டம்தான். சுமார் 5 கி.மீ. தூரத்திற்கு திரண்டிருக்கும் இளைஞர்கள் கூட்டத்தில் ஒருவர் சிக்கிக் கொண்டால் முழுவதும் நனைந்துதான் வெளியேறமுடியும். தண்ணீர் அடிப்பது மட்டுமல்ல. அந்தப் பகுதியில் காதைப் பிளக்கும் இசைக் கச்சேரி களுடன் நடனமாடி தூள் கிளப்புவர்.

சாலையோரங்களில் தண்ணீர், சுண்ணாம்புத் தூள், குளிர்பானங்கள், தண்ணீர்த் துப்பாக்கி, பியர் என வியாபாரமும் நடைபெறுகிறது. தெரு வோர விருந்துகளும் உண்டு. இளைஞர் களும், இளம் பெண்களும் தண்ணீரில் நனைந்து கொண்டே வியாபாரத்தையும் பார்த்துக் கொள்கின்றனர்.

புத்தாண்டை வரவேற்க ஏன் இப்படி தண்ணீரை பீய்ச்சி அடித்து மகிழ்கின்றனர்? தண்ணீரின் சுத்திகரிக்கும் தன்மை புனிதமாக கருதப்படுகிறது. ஒருவர் மீது தண்ணீரை பீய்ச்சி அடிப்பதால் அவருடைய வாழ்வில் கடந்த காலத்து துன்பங்களையும், துரதிர்ஷ்டங்களை கழுவி சுத்திகரித்துவிட்டு புத்தாண்டில் புதுவாழ்வையும், அதிர்ஷ்டத்தையும் வரவேற்க தயார்படுத்துவதன் அடையாளம்தான் இந்த தண்ணீர் அடிக்கும் பழக்கம் என்கின்றனர் தாய்லாந்து மக்கள்.

திருவிழாவின் முதல் நாளை தேசிய முதியோர் தினமாக அனுசரிக்கின்றனர். அந்த நாளில் பெற்றோர்களிடமும், பெரியோர்களிடமும் அவர்களது உள்ளங்கையில் வாசனைத் திரவியம் கலந்த தண்ணீரை ஊற்றி இளையவர்கள் ஆசி பெறுகின்றனர்.

இந்த தண்ணீர் திருவிழா மியான்மர், கம்போடியா, லாவோஸ் ஆகிய நாடு களிலும் கொண்டாடப்படுகிறது.

திருவிழாவையொட்டி மூன்று நாள்களும் அரசு விடுமுறை அறிவிக்கப்படுகிறது. அலுவலகங்கள், கடைகள், வர்த்தக நிறுவனங்கள் என அனைத்தும் மூடப்பட்டு விடுகின்றன. தண்ணீர் திருவிழாவை கொண்டாடும் இடங்களில் ஒரு சிறு அசம்பாவிதம் கூட நிகழுவதில்லை. பொலிஸ் பாதுகாப்பும் பெரிதாக இருப்பதில்லை.

புத்த துறவிகள், முதியவர்கள், கைக் குழந்தைகள் ஆகியோர் மீது தண்ணீர் அடிக்கக்கூடாது என்று கட்டுப்பாடு உண்டு. அதேபோன்று பாதுகாப்பு கருதி மோட்டார் சைக்கிளில் செல்வோர் மீதும் சாப்பிட்டுக் கொண்டிருப்பவர்கள் மீதும் தண்ணீர் அடிக்கக்கூடாது.




# சித்திரமேழிக்கிராமமும் சிறியதோர் பண்பாட்டியலும்

சிறியதோர் கிராமமும் சிறியதோர் பண்பாட்டியலையும் தன்னகத்தே கொண்ட சிறப்புமிகு பிரதேசமாக சித்திரமேழிக் கிராமம் விளங்குகின்றது. இளவாலை எனும் நன்நகரில் உள்ள ஓர் உட்கிராமமே இதுவாகும். இது தெல்லிப்பளை பிரதேச செயலகத் திற்கு உட்பட்ட ஓர் கிராமமாகும். வைரவர் எனும் கிராமிய தெய்வ வழிபாட்டு டாலயத்தை காக்கும் தெய்வமாகக்கொண்டு பெரும்பாலான சைவர்களை மாத்திரம் கொண்ட ஓர் கிராமமாக இது விளங்குகின்றது.

இந்த ஞானவைரவர் ஆலயம் அக்கிராம மக்களின் குலதெய்வமாகவும், காவல் தெய்வமாகவும் பூஜிக்கப்பட்டு வருகின்றது. வேளாண்மைத்தொழி



லைப்பிரதானதொழிலாகக்கொண்ட இக்கிராம மக்கள் படித்த பல்துறைக்கல்விமான்களை தன்னகத்தே கொண்டுள்ளது. புலவர் செல்லத்துரை போன்ற சைவப்பரம்பரை படித்தவர்கள் முதல் வைத்தியகலாநிதி பேரானந்தம் வரை பிறந்து வளர்ந்த பூமியிது. இந்தக் கிராமத்தை முரசு தேர்நதெடுத்தமைக்குக்காரணம் பல உண்டு சிறிய பரம்பரைக்கட்டமைப்பையும் சிறிய பிரதேசத்தையும் கொண்ட இக்கிராமம் பரந்துபட்ட அறிவியலாளர்களை உருவாக்கியுள்ளமை வியக்கத் தக்கது. ஆளணி விகிதாசாரசத்துடன் ஒப்பிடும் போது படித்தவர்களின் விகிதாசாரம் அதிகம் என்றே கூறவேண்டும்.




## ஊரும் மக்களும்

யாழ். குடாநாட்டின் வட பகுதியில் கீரிமலை புண்ணிய தீர்த்தத் தலத்திற்குத்தென் மேல் பகுதியில் சித்திரமேழி என்னும் பழம்பெரும் கிராமம் உள்ளது. இதன் வடபகுதியில் பாக்கு நீரிணைக்கடல் உள்ளது இங்குதான் சேந்தான்குளம் என்னும் கடற்கரையும் உள்ளது. கிழக்கும் தெற்கும் இக் கிராமத்தின் உறவு முறை ஊர்களான காடிவளை, துன்மலை ஆகியன உள்ளன.

மேற்குத்திசையில் இளவாலை நெல்வயல் இருக்கிறது. அந்தணரும் ஆனினமும் சிறக்க வாழ்ந்த இடம் இதுவாகும். இத்தகையசிறப்புகளுடன் இவ் ஊர் விளங்கியதால் தெய்வமணம் கமழும்தொல்பதியாம் சித்திரமேழி என்று பலரும் புகழ்ந்து பாராட்டி வந்துள்ளனர்.

இங்கு வாழ்பவர்களுக்கு உழவுத்தொழிலே இவர்களின் உயிர் நாடியாக* அமைந்திருந்தது சித்திர்வேலைப்பாடு கள் அமைந்த கலப்பைகளைக்கொண்டு இவ்வூர் மக்கள் உழவுத்தொழிலைச்செய்து வந்தனர் இதனாலேயேஇவர்களின் ஊர் சித்திரமேழி எனச் சிறப்பிக்கப்பட்டது. இவ் ஊர் மக்கள்சிதம்பரம் முதலான சிவதல யாத்திரை சென்று வருபவர்கள் அங்கிருந்து வரும் போது தமது உழவுத்தொழிலுக்கு ஏற்ற வடக்கன் மாடுகளைக்கொண்டு வருவது வழங்கம்



இவ்வாறு சென்று வருபவர்களில் முதலிக்குட்டி மரபில் வந்த கந்தப்பரும் ஒருவராவார். இவர் 16 ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் சிதம்பரம் சென்றிருந்தார். அங்கு சிவதல தரிசனங்களை நிறைவு செய்து கொண்டு திரிசூலம் ஒன்றை இங்கு எடுத்து வந்தார்.

சித்திரமேழி என்ற நிலப்பெயர் கொண்ட இடத்தில் கொன்றை மரத்தடியில் அதனை முறையாக வைத்து வைரவ வழிபாட்டினைஆரம்பித்தார். சிதம்பரத்தில் இருந்து கொண்டுவந்த வைரவர் என்பதால் அம்பலவாண வைரவர் என்று அழைக்கலாயினர்.

இளவாலைப்பகுதியில் உள்ள சைவ ஆலயங்களில் இது பழைமை வாய்ந்தது. இவ் ஆலயத்திற்குரிய நிலம், பரிகாரி வன்னியராலும் பூசாரி வம்சத்தினராலும் விநாயகர் வம்சத்தினராலும் வழங்கப்பட்டது. இங்குள்ள மக்கள் ஆசார அனுட்டான சீலர்கள். இவர்கள் காலை மாலை வேளைகளில் சுவாமி தரிசனம் செய்த பின்னரே தமது கடமைகளை மேற்கொள்வதுடன் உணவும் உட்கொள்வதை வழக்கமாகக்கொண்டிருந்தனர்.

## பூசைகளும் வழிபாடும்

இவ் ஆலய பூசைகளை உயர் சைவ பரம்பரையினரே முன்னின்றுநடத்தினர். ஆரம்ப காலங்களில் கந்தப்பரும் அவரின் மகன் வைரவநாதரும் அதன்பின் ஆறுமுகமும் பூசைகளை நடத்தி வந்தனர்.

ஆறுமுகத்தின் பிள்ளைகள் சின்னத்தம்பியும் முருகேசும் பூசையைச்செய்தனர். இவர்களை மக்கள் பக்தி சிரத்தையோடு பூசாரியார் என்று அழைத்தனர். பிற்காலத்தில் சிவஸ்ரீ செல்லையாக் குருக்கள் எனப்படும் மகா கணபதிக்குருக்களை மாதகலில் இருந்து அவரின்தாயாருடன் 1875 ஆம் ஆண்டு இங்கு அழைத்து வந்தனர்.

இக்குருக்கள் வேத விற்பன்னராக விளங்கினார். குருக்கள்மார் ஆலய விசேட பூசைகளைச் செய்துவர நித்திய பூசைகளைஆறுமுகம் சின்னத்தம்பியும் அவரது மகனும் செய்து வந்தனர். இவர்களைத்தொடர்ந்து சிவஸ்ரீ சோமசுந்தரக் குருக்களும் இராமலிங்க சர்மாவும் பூசை வழிபாடுகளை ஆற்றினர். இவ் ஆலயத்தில் சைவ புண்ணிய காலங்களில் சிறப்பாக விழா




எடுக்கப்பட்டுவருவது வழக்கமாகும்.

சிவஸ்ரீ இராமலிங்கக்குருக்களின் பின் அவரது பெறாமக்கள்கோவில் பூசைகளைச்செய்து வந்தனர். தொடர்ந்து கீரிமலை தேவஸ்தானத்தைச்சேர்ந்த சிவஸ்ரீ ந.இராமச்சந்திரக்குருக்கள் தனது சிறுவயது முதலே இவ் ஆலயத்தின் பூசைகளைப் பொறுப்பெற்று சிறப்பாகச்செய்து வந்தார். இவரின் பின் இவரின் மகன் சிவஸ்ரீ இ.பாலச்சந்திரக்குருக்கள் பூசையைப்பொறுப்பேற்று இன்றுவரை செய்து வருகிறார்.

# 844 மில்லியன் ரூபா செலவில் யாழில் குடிநீர் விநியோகத்திட்டம்

## – யாழ். அரச அதிபர் தகவல்



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கடந்த ஆண்டு குடிநீர் வழங்குவதற்காக 844 மில்லியன்ரூபா அரசாங்கத்தினால் செலவிடப்பட்டிருப்பதாக யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர்களுக்கான கருத்தரங்கில் கலந்து கொண்டு யாழ். மாவட்டத்தின் அபிவிருத்தி குறித்து உரையாற்றுகையிலேயே அரச அதிபர் இந்தத்தகவல்களைத் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், இந்த நிதியின் மூலமாக குடிநீர்ப்பிரச்சினையுள்ள இடங்கள்இனங்காணப்பட்டு அந்தப்பகுதிகளில் தண்ணீர்த் தாங்கிகள் அமைக்கப்பட்டிருப்பதாகவும் இந்தத் தண்ணீர்த் தாங்கி மூலமாக குடிநீர் தேவையான அயல் பகுதிகளுக்கும் விநியோகிக்க முடியும்.

இதனை விடுத்து 20 ஆயிரம் மில்லியன் ரூபா செலவில் இரணைமடுக்குளத்தில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு குடிநீர் கொண்டுவரும் திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பதுடம் 2014ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தில் உள்ள எண்பது வீதமான மக்கள் இதன்மூலம் குடிநீர்த்தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள முடியும். இதே வேளை தண்ணீர் மாசுபடுவதனைத்தடுப்பதற்கும் கடல் நீர் பயிர் செய் நிலங்களுக்குள் ஊடுரு வுவதனைத்தடுக்கவும் 34 உவர் நீர்த்தடுப்பணைகள் புனரமைக்கப்பட்டுள்ளன.

இவற்றில் வழுக்கையாறு, தொண்டமானாறு, அரியாலை, மண்டைதீவு போன்றவற்றின் உவர் நீர்த்தடுப்பணைகள் அடங்குவதாக அவர் தெரிவித்தார்.

இவற்றில் தொண்டமானாறு உவர் நீர்த்தடுப்பணை 74.35 மில்லியன் ரூபா செலவிலும், வழுக்கையாறு 112.43 மில்லியன் ரூபா செலவிலும் புனரமைக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

(பா)

# சிறுவர் பூங்கா திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கைதடி தென்கிழக்கு விநாயகர் சனசமூக நிலைய விநாயகர் முன்பள்ளியின் சிறுவர் பூங்கா திறப்பு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு விநாயகர் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

விநாயகர் சனசமூகநிலையத் தலைவர் செல்வன் செ. மயூரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின், சிறப்பு விருந்தினராக கொடிகாமம் பிரதேச சபை செயலாளர் செல்வி தி.தர்சினி, தென்மராட்சி கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.பாக்கியராஜா, சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி செல்வராணி ஜெகதீஸன், கைதடி விக்னேஸ்வர வித்தியாலய அதிபர் அ.சிவானந்தன், ஈ.பி.டி.ப. தென்மராட்சி அமைப்பாளர் சூ.அலெக்சாண்டர் சாள்ஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.





யாழ்.கொழும்புத்துறை இலந்தைக்குளம் பகுதியில் யாழ். மாநகர முதல்வரின் முயற்சியினால் கட்டப்பட்ட நீர்த்தாங்கி திறப்பு விழாவின்போது...

## வெள்ளி நற்சிந்தனை...



# தெய்வ அருள் பெற வேண்டும்

புலமை, அறிவுக்கூர்மை, செல்வம், அந்தஸ்து ஆகியவை ஒருவனுக்கு ஓரளவுக்கு மரியாதையைத் தேடித்தரும் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் மனித இதயங்களில் இடம் பெற இவை மட்டும்போதாது. உயரிய குணங்களும், பண்புள்ள நடத்தையும், கண்ணியமான போக்கும், கட்டுப்பாடான வாழ்க்கையும், அடக்க உணர்வும் கொண்ட உள்ளமும் இத்தகையசீரியகுணங்களும் இருந்தால் மட்டும்தான் ஒருவன் மக்களின் நெஞ்சங்களில் நிலையான இடம் பெற்று வாழ முடியும்.

சீரியகுணங்கள் வாய்க்கப்பெறவேண்டுமாயின் தெய்வத்திடம் அன்பு செலுத்த வேண்டும். இந்த அன்பு படிப்படியாக ஜீவராசிகள் அனைத்திடமும் பரவும் சிபிச்சக்கரவர்த்தியின் வரலாறு அன்பு செலுத்துவது எப்படி? என்ற வினாவுக்கு விடையாகிறது. எல்லா மதங்களிலும் சிறப்பாகப் போற்றப்படும் பெரியவர்கள் உயிர்களிடம் அன்பு கொண்ட கருணையுடையவர்கள் தாம்என்பதை வரலாறுகள் நமக்கு புகட்டுகின்றன.

இலக்கியங்கள் வாழ வழி சொல்பவையாகும். இராமாயணம் சீரிய குணங்களுக்கு இலக்கணமாக இராமனைக் காட்டுகிறது. எல்லா நல்ல குணங்களையும் அவன் பெற்றிருப்பதால் "குணவான" என்றுஅழைக்கப்பட்டான். சிறப்பான குணங்கள் உடைய எவரும் இறைவனின் அருளுக்குப் பாத்திரமாகாமல் இருந்ததில்லை.

மகாபாரதத்தில் அரக்குமாளிகை எரிக்கப்பட்ட போது அதிலிருந்து தப்பிய பாண்டவர்கள் ஒலு கிராமத்தில் போய்த் தங்கினார்கள். அந்தக்கிராமத்தை பகாசூரன் என்றஅரக்கன்நடுநடுங்கவைத்துக் கொண்டிருந்தான். ஆதலால் ஊர்மக்கள் அசுரனுடன் ஓர் ஒப்பந்தம் செய்திருந்தனர். அதன்படி ஒவ்வொரு நாளும் வீட்டிலிருந்து ஒரு வண்டில் அரிசி இரண்டு பசுமாடுகள்ஒருஆண்மகனும் உணவாக அனுப்பி வைக்கப்பட்டனர். குந்தியும் அவளுடையமைந்தனாகியபாண்டவர்களும் தங்கியிருந்த வீட்டுக்கு கெடு வந்த போது குந்தி பெருந்தன்மையுடன் பகாசூரனுக்கு உணவாகத் தன்னுடைய மகன் பீமசேனனை அனுப்பி வைக்க முன்வந்தாள். குந்தி, தங்களுக்கு இருப்பிடம் தந்து உதவிய குடும்பத்திற்காக தன் பிள்ளைகளை இழக்கத் துணிந்தாள். பீமன் பகாசூரனைக் கொன்று அந்தக் கிராமத்தையேகொடுமையிலிருந்து மீட்டான் என்பது கதை.

பிறரின் துன்பங் கண்டு இளகிடும் உள்ளம், தெய்வ அருளைப் பெற நினைப்பவர்களுக்கு கட்டாயம் இருக்கவேண்டும்.

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

# பதிவிறக்கப் பெட்டகம்

நாம் சாப்பிடும் உணவோ உடுத்துகிற உடையோ மற்றொரு பத்துப் பேரின் உணவையோ உடையையோ திருடிக் கொள்வதாகத்தான் இருக்கிறது. நம்முடைய எந்த ஒரு அசைவுமே நமக்குத் தெரியாமலேயே மற்றொரு பகுதி மக்களை பாதித்துக் கொண்டுதான் இருக்கிறது. நாம் சுரண்டிக் கொண்டிருக்கிறோம். நம் இருப்பு என்பது நிச்சயமாக மற்றொரு நூறு பேரை இல்லாமல்தான் செய்துகொண்டிருக்கிறது. அப்படி ஒரு உச்சகட்ட வன்முறைக்கான சாத்தியம் எப்படி வந்தது? நான் உயிர் வாழ்கிறேன் என்பதே மற்றொரு மனித உயிரைக் கொல்வதாக இருக்கிறது என்ற நிலையில் இந்த அமைப்புக்கு என்ன நியாயம் இருக்கிறது? **– பிரேம்**

அரசர் கால பௌதீக சிறைசாலைச்களிலிருந்து நவீன கால சிறைச்சாலைகள் மாறுபட்டு, கண்காணிப்பில் வைக்கின்ற சமூக ஒழுங்கமைப்பாக நிமிட நேர ஆசவாசத்தை வழங்காத அமைப்புகளாக மனதையும் எண்ணங்களையும் ஆத்மாவையும் கண்காணிப்பில் வைக்கின்ற சிறைச்சாலைகளாக ஒட்டு மொத்த நவீன சமூகங்களும் மாறியிருக்கின்றன. **– மிஷேல் ஃபூக்கோ**

நாங்கள் என்ன நினைக்கிறோமோ அதன் விளைவாகவே நாங்கள் இருக்கிறோம், ஒரு மனிதனை விட்டும் அவனது நிழல் நீங்காதது போல், ஒரு மனிதன் கெட்ட எண்ணத்துடன் பேசினால் அல்லது செயல்புரிந்தால், துன்பம் அவனைத் தொடர்கிறது. ஒரு மனிதன் தூய எண்ணத்துடன் பேசினால் அல்லது செயல்புரிந்தால் மகிழ்ச்சி அவனைத் தொடர்கிறது. **– கௌதம புத்தர்**

கத்தியின்றி ரத்தமின்றியும் ஏராளமான இன, மத, அரசியல் வன்முறைகள், கலவரங்கள் நிகழ்ந்தவாறே இருக்கின்றன. அப்பாவியும், அழகியதுமான சாமானிய மனித வாழ்வு இதிலெல்லாம் சிக்கி அல்லலுற்று அவதிக்கு ஆளாகியிருக்கிறது. **– விட்டல்ராவ்**

வீரம் என்ற குணத்திற்கு ஒரு முக்கிய இடமளிக்க வேண்டியது அவசியம்தான். ஆனால் மனிதன் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்று நினைப்பதற்கு அடுத்தபடியாகத்தான் வீரம் இருக்க வேண்டுமே தவிர, அதற்கும் மேலான ஒரு முக்கியத்துவம் வீரத்திற்கு அளிக்கக் கூடாது. **– 'பிளேக்' நாவலில் அல்பேர் காம்யு**

சமூகத்தினுடைய எல்லா நோய்களுக்கும் தீர்வு எல்லோரையும் படித்தவர்களாக மாற்றுவதுதான். படித்தவன்தான் எல்லோரையும் விட ஏமாற்றுக்காரனாக இருக்கிறான் என்றே வைத்துக்கொண்டாலும் கூட, இரண்டு எதிராளிகளும் படித்தவர்களாய் இருந்தால், ஒருத்தனை ஒருத்தன் ஏமாற்றிக் கொள்வதற்குப் பதிலாக ஒருத்தனிடமிருந்து ஒருத்தன் தற்காத்துக் கொள்ளவாவது கற்றுக் கொள்வான், இல்லையா? மனிதர்கள் அவரவர்களுடைய பொறுப்பை அவரவர்களே ஏற்க வேண்டும். தன்னுடைய நல்லது கெட்டதை மற்றொருவர்பொறுப்பில் விடுகின்ற பேதைமையைத் துடைத்தெறிய வேண்டும். 'ஐயா படித்தவர், எல்லாம் அவர் பார்த்துக் கொள்வார்' என்று தன் பொறுப்பைப் பிறன் கையில் ஒப்படைக்கிறவன் தன்னை அடகு வைக்கிறவன்; மீள வழியற்றுப் போகிறவன். அதனால், சிந்தனையாளர்கள் தங்களுடைய வகுப்பறை வாதப் பிரதிவாதங்களை நிறுத்தி வைத்துவிட்டு, நம்பி மோசம் போகிறவர்களை மீட்டெடுக்கிற களப்பணியை மேற்கொண்டால் எவ்வளவோ புண்ணியமாக இருக்கும். **– கவிதாசரண்**

தேசிய பாதுகாப்புதான் விடுதலையின் அடித்தளம் என்று சொல்லப்படுவது அபாயகரமான கருத்தியல். ஹிட்லர் முதல் பினோசெட் வரையானோர்களின் ஆட்சியில் தேசிய பாதுகாப்பு ஒரு அடித்தளமாகவே மதிக்கப்பட்டது. இதற்கு முரணாக உலகளாவிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்டதும் நிரூபிக்கப்பட்டதுமான விடுதலையின் அடித்தளம், ஜனநாயகம் மற்றும் சகல மக்களினதும் மாற்றமுடியாத சம உரிமைகளை ஏற்றுக்கொள்வதும்தான். தேசிய பாதுகாப்பு ஒரு அடித்தளம் அல்ல, ஆனால் அதை சுதந்திரத்தின் ஒரு பாதுகாப்புச் சுவர் என்று வேண்டுமாயின் விளக்கலாம். **– தயான் ஜயதிலக**

ஒவ்வொருவனுக்கும் ஒரு சாம்ராஜ்யம் பெரிதோ சிறிதோ இருக்கிறது. அதை அவன் விழிப்போடு கைவசம் வைத்துக் கொள்ளத் தவறும் ஒவ்வொரு கணத்திலும் அதன் மீது இருபது படையெடுப்புகள் நிகழ்கின்றன **– அசோகமித்திரன்**

ஜனநாயகம் என்பது தனிப்பட்ட ஒவ்வவொருவரும் மற்றவரை மதிக்க வேண்டும் என்பதே... தனிப்பட்ட நபரை தெய்வமாக்குவதல்ல. **– அல்பேட் ஐன்ஸ்டீன்**

# இளைஞர்களுக்கான தொழிற்பயிற்சி

## காரைநகரில் ஆரம்பித்து வைப்பு



(காரைநகர்)

காரைநகர் பகுதி இளைஞர் யுவதிகளுக்கான கணினி, தச்சு, பொறியியல், துறைகளிற்கான தொழிற்பயிற்சிநெறி நேற்று முன் தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வடமாகாண சபை மற்றும், வடமாகாண செஞ்சிலுவைச் சங்கம், தொழில்துறை திணைக்களம் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்த தொழிற் பயிற்சி நெறியினை வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி காரைநகர் தொழிற்பயிற்சி வளாகத்தில் நேற்று முன் தினம்ஆரம்பித்து வைத்தார்.

தொழிற்துறை திணைக் களத்தில் 740 இளைஞர்கள் தொழிற் பயிற்சிக்கு விண்ணப் பித்த நிலையில், 149 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

149 பேருக்கும் 6 மாத பயிற்சியுடன், 10 ஆயிரம் ரூபா வேதனமும் வழங்கப்பட வுள்ளன. இப்பயிற்சிக் கால த்தில் வழங்கப்படவுள்ள வேத னத்தில் இலங்கை செஞ் சிலுவைச் சங்கத்தின் அன்ப ளிப்பாக 7 ஆயிரம் ரூபா வும், வடமாகாணசபை 3 ஆயிரம் ரூபாவுடன், 10 ஆயிரம் ரூபா மாதாந்த வேதனம் வழங்கப் படவுள்ளது.

பயிற்சி நெறி முடிவில் தேசிய தொழிற்பயிற்சி அதிகார சபையினால் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.இந்நிகழ்வில், வடமாகாண பிரதம செயலாளர் ரமேஷ் விஜயலக்சுமி, வடமா காண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், வடமாகாண செஞ்சிலுவைச் மடுகல, செஞ் சிலுவை சங்கத்தின் யாழ். மாவ ட்ட தலைவர் கே. பால கிருஸ் ணன், உட்பட காரைநகர் பிர தேச செயலர் மற்றும் இளை ஞர்கள், யுவதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (25)

# ஏ9 வீதியில் உயிரிழந்தவரை அடையாளம்காண உதவுங்கள்

## புளியங்குளம் பொலிஸார் கோரிக்கை



வவுனியா, புளியங்குளம் பொலிஸ் நிலையத்திற்கு அருகில் ஏ - 9 வீதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கனரக வாகன விபத்தில் உயிரிழந்த வரை அடையாளம் காண உத வுமாறு பொலிஸார் கோரியு ள்ளனர்.

இது தொடர்பில் புளியங்குளம் பொலிஸ் நிலைய போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவு பொறுப்பதிகாரி ரி. எம். எம் . ஜமால் தெரிவிக்கையில்,

'சுமார் 50 வயது மதிக்கத்தக்க ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இவர் 5 அடி 8 அங்குல உயரம் உடையவர். இவரது சடலம் தற்போது வவுனியா பொது வைத்திய சாலையின் பிரேதஅறையில் வைக்கப்பட்டுள்ளது" என்றார்.

### பொலிஸ் மோப்ப நாய்களின்

# இனப்பெருக்க மத்திய நிலையம்

## நுவரெலியாவில் அமைக்க நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கையில் முதற் தடவை யாக பொலிஸ் மோப்ப நாய் களின் இனப்பெருக்க மத்திய நிலையம் ஒன்றை அமைக்க பொலீஸ் திணைக்களம் நடவ டிக்கை எடுத்துள்ளது.

பொலிஸ் சோதனை நட வடிக்கைகளின் போது பொலிஸ் ஈடுபடுத்தப்படும் இந்த உயர்ரக மோப்ப நாய்கள் இது வரை காலமும் வெளிநாடுகளிலிரு ந்தே இலங்கைக்கு கொண்டு வரப்பட்டன அதற்காக வருடாந்தம் கோடிக்கணக்கான ரூபாய் பணம் அதற்காக செலவிடப்புடுகிறது .ஜேர்மன் நெதர்லாந்து ஒல் லாந்து ஹங்கேரியா ஆகிய நாடுகளி லிருந்தே இலங்கைக்கு இந்த உயர்ரக பொலிஸ் மோப்ப நாய்கள் கொண்டு வரப்படு கின்றன.கடைசியாக 2011ஆம் ஆண்டில் நெதர்லாந் திலிருந்து நூறு நாய்கள் கொண்டு வரப்பட்டன. இதற் காக செலவிட்ட தொகை 700 இலட்சம் (ஏழு கோடி ரூபா) ரூபாவாகுமென பொலிஸ திணை க்களம் தெரிவிக்கின்றது.

இந்த நாய்களின் இனப் பெருக்க மத்திய நிலைய்ம் ஒன்றை இலங்கையில் அமை ப்பதன் மூலம் இத்தகைய பெரு மளவு பணத்தை மீதப்படுத்த முடியும் என்ற நோக்கத்திலேயே பொலிஸ் திணைக்களம் இந்த முடிவை எடுத்துள்ளது. நுவரெ லியாவில் இத்தகைய பொலிஸ் மோப்ப நாய்களுக்கேற்ற காலநிலை நிலவுவதால் நுவரெ லியாவிலேயே இந்த இனப் பெருக்க மத்திய நிலையத்தை அமைக்க தீர்மானிக்கப்பட்டு ள்ளது. நுவரெலியாவில் இந்த நாய்களின் இனப்பெருக்க மத் திய நிலையம் அமைக்கப்பட்ட பின் னர் ஒரு சோடிநாய்களின் மூலம் சுமார் 14முதல் 16வரை யிலான நாய்க்குட்டிகளை எதிர் பார்க்க முடியும் என பொலிஸ் திணைக்களம் நம்பிக்கை தெரி விக்கின்றது. இலங்கையில் பொலிஸ் மோப்ப நாய்களின் சேவைக்கு சுமார் 65வருடங் களாகும் இக்காலப்பகுதியில் பொலிஸ் நாய்கள் போதை பொருள் தேடுதல் நடவடிக்கை, வெடிமருந்து சோதனை, குற்ற வாளிகளின் தடயங்களை கண் டு பிடித்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளில் இந்த நாய் கள் பயன்படுத்தப்பட்டு வருகி ன்றமை குறிப்பிடத்தக்கது.

# வன்னியில் கள்ளநோட்டு மக்களே அவதானம்

வன்னிப்பகுதிகளில் தற் பொழுது கள்ள நோட்டுக் களின் பாவனை அதிகரித்து ள்ளது.

இந்நிலையில் கிளிநொச்சி வேராவில் பகுதியில் கடந்த சனிக்கிழமை இரவு கள்ள நோட்டு வைத்திருந்த நபரொரு வரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். கிளிநொச்சி யிலிருந்து விசுவமடு வரையான பகுதியிலேயே கள்ள நோட்டு க்களின் பாவனை அதிகளவில் காணப்படுவதாகப் பொலிஸா ருக்குத் தகவல் கிடைத்துள்ள தாகவும் இதனையடுத்து மக்களை விழிப்புடன் இருக்கு மாறு பொலிஸார் அறிவித்து ள்ளனர்.

# போக்குவரத்துப் பொலிஸாரின் கண்காணிப்பு தீவிரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர் மற்றும் பிரதான வீதிகளில் போக்குவரத்துப் பொலிஸாரின் கண்காணிப்பு நடவடிக்கை கடந்த சில நாட்களாக தீவிரப்படுத்த ப்பட்டுள்ளது.

யாழ்.நகரின் பிரதான வீதி களில் வாகனத்தரிப்பிடங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களிலும் வியாபாரநிலையங்களுக்கு முன் பாகவும் தரித்து நின்ற மற்றும் பயணிகளை ஏற்றியிறக்கிய பல பயணிகள் பஸ்வண்டியின் போக்கு வரத்து பொலிஸாரிடம் பிடிபட்டு குற்றப்பணம் அறவிடப்பட்ட தாகவும் தெரிவிக்கப்படுகின்றது இதேவேளை பிரதான சந்திகள் பிரதான வீதிகளில் போக்கு வரத்துப் பொலிஸார் வீதிமுறை களை மீறிப்பயணம் செய்யும் வாகனங்கள் மோட்டார் சைக்கிள் என்பவற்றையும் பரிசோதிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டதனை யும் அவதானிக்கமுடிந்தது.

யாழ்.நகரில் அதிகரித்த வாகனப் போக்குவரத்துக் கார ணமாக வீதிவிபத்துக்களைத் தவிர்க்கும் முகமாகவும் போக் குவரத்து விதிமுறைகளை சரியான முறையில் நடை முறை ப்படுத்தும் முகமாகவுமே இவ் வாறு போக்குவரத்துப் பொலி ஸாரின் நடவடிக்கை தீவிரப் படுத்தப்பட்டிருப்பதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

### 103 பவுண் கொள்ளைச்சம்பவம்

# யாழ்.மாநகர உறுப்பினருக்கு பிணை

(யாழ்ப்பாணம்)

103 பவுண் நகை கொள் ளைச் சம்பவத்துடன் தொடர் புடையவர்கள் என்ற சந்தேக த்தின் பேரில் கைது செய்யப் பட்டு விளக்கமறியலில் வைக்க ப்பட்டிருந்த யாழ். மாநகரசபை உறுப்பினர் நேற்று பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இவருடன் மற்றுமொரு சந் தேகநபரும் ஆட்பிணையில் செல்ல யாழ். நீதிவான் நீதி மன் றம் அனுமதித்துள்ளது. அண் மையில், கொக்குவில் பகுதி வீடொன்றில் 103 பவுண் நகை கொள்ளையடித்த குற்றச் சாட்டில் கடந்த 9ஆம் திகதி யாழ். மாநகர சபை உறுப்பினர் சுதர்சிங் விஜயகாந் உட்பட மூவர் கோப்பாய் பொலி ஸாரினால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்க ப்பட்டனர்.

மேற்படி, வழக்கினை நேற்று யாழ். நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி பொ.சிவகுமார், 25 இலட்சம் ரூபா பெறுமதியான மூன்று ஆட் பிணையில் செல்ல அனுமதித்ததுடன் கடவுச் சீட்டினை மன்றில் சமர்ப்பிக்கு மாறும் உத்தரவிட்டார். அத்துடன் ஒவ்வொரு வாரமும் கோப்பாய் பொலிஸ் நிலைய த்திற்கு சென்று கையொ ப்பமிடுமாறும் உத்தரவிட்டு ள்ளார்.ஏனைய இரு சந்தேக நபர்களையும் எதிர்வரும் 08ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கமாறு நீதவான் உத்தர விட்டார். (25)



யா.சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் ஆரம்பப்பிரிவுமாணவர்களின் 'சிகரம2' கண்காட்சி அண்மையில் நடைபெற்றது. இதில் பிரதமவிருந்தினராக சேவைக்காலஆசிரிய ஆலோசகர்,ஆரம்பப்பிரிவு க.சிவகுமார் கலந்து சிறப்பித்தார். அத்துடன் பாடசாலை ஆசிரியர்,மாணவர்கள்,அயற்பாடசாலை ஆசிரியர்கள்,மாணவர்கள் பெற்றோர்கள் ஆகியோர் கண்காட்சியைப் பார்த்து பயனடைந்தனர். (54)


# பேஸ்புக்கில் ஆசிரியர்களின் முகங்களைமாற்றி பதிவேற்றம் செய்த மாணவன் மீது விசாரணை


பேஸ்புக்கில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் முகங் களை மாற்றி அவர்களின் படங் களை பதிவேற்றம் செய்த மாணவனுக்கு எதிராக விசாரணை நடைபெற்று வருவதாக அந்த பாட சாலையின் நிர்வாகம் அறி வித்துள்ளது.

இந்நிலையில், அதிபர் தன் னை தாக்கியதாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் மாணவர் ஒருவர் முறைபாடு செய்துள்ளார். அத்துடன் அந்த மாணவன் வைத்தியசாலையில் அனுமதிக்க ப்பட்டுள்ளார்.தென்மராட்சி வலய பாடசாலை ஒன்றில் உயர்தரத் தில் கல்வி பயிலும் மாணவன் ஒருவனே இவ்வாறான நடவடிக் கையில் ஈடுபட்டுள்ளதாக தெரி விக்கப்படுகின்றது.


இந்த விடயத்தினை அறிந்து கொண்ட ஆசிரியர்கள் மாண வ னை அழைத்து இவ்வாறு தவறு செய்யக் கூடாது என கண்டித்துள்ளனர்.

இதனையடுத்தே அந்த பாடசாலை நிர்வாகத்திற்கு எதி ராக மாணவன் முறைப்பாடு செய்துள்ளதாகவும் மாணவனை எந்தவொரு ஆசிரியரும் தாக்க வில்லை என்றும் தெரிவி க்கப்படுகின்றது. (25)

6.  தரப்பட்ட உருவில் ஆணியறையப்பட்ட இடைவெளியின் நீளம் 1cm எனக் கொள்க இப்பலகையில் 6 சதுரசென்றிமீற்றரை நிழற்றிக்காட்டுக.




7. இப்பென்சிலின் நீளத்தை ஒத்த இரு பென்சில்களின் நீளத்தை cmல் தருக. ..............................

8. 

இப்பாத்திரத்திலுள்ள தேங்காய் எண்ணெய் 11 சிறிய போத்தல்களில் ஊற்றப்பட்டது. ஒரு சிறிய போத்தல் கொள்ளும் தேங்காய் எண்ணெய்யின் விலை ரூபா 35 எனின் 500ml தேங்காய் எண்ணெய்யின் விலை யாது?


..............................

9. ஒரு மூடையில் 10kg 750g அரிசி இருந்தது மறுமூடையில் 5kg 250g அரிசி இருந்தது எனின் இரு மூடைகளிலுமுள்ள அரிசியின் மொத்த நிறை யாது?

..............................

10. ஒருவர் அம்பாந்தோட்டையிலிருந்து கொழும்பு வரை செல்வதற்கான தூரம் 238km ஆகும். காலி வரைக்குமாக 122km சென்றார். எனின் இன்னும் அவர் செல்லவேண்டிய தூரத்தை கிலோமீற்றரில் தருக?

..............................

11.  இச்செவ்வக உருவில் காணப்படும் சமச்சீர் அச்சுகளை குறித்துக்காட்டுக.

12. ரூபாய் 1000 தாள்காசின் முன்புறத்தில் எந்தப் பிராணியின் உருவம் உள்ளது? ..............................

13. ஒரு தோடம்பழத்தின் விலையானது ரூபா 15 ஒரு பெட்டியில் 15 தோடம்பழங்கள் இருந்தது எனின் அத்தோடம்பழ பெட்டியின் விலை யாது?

..............................

14.

| | |
|---|---|
| 3 | 5 |
| 6 | 7 |

தரப்பட்ட எண்களை கொண்டு, இடப்பெறுமானம் பத்தின் இடத்திற்கு மிகக்குறைந்த பெறுமதியுடைய எண் வருமாறு நான்கிலக்க எண்ணை உருவாக்குக.

..............................

15. அடைப்பினை நிரப்புக. 1920-☐=1900

**(13) பின்வரும் தலைப்புக்கு பொருத்தமான ஆறு வாக்கியங்கள் எழுதுக.**

ஒவ்வொரு வாக்கியத்திலும் நான்கு சொற்கள் இடம்பெறவேண்டும். இலக்கணரீதியிலான தொடர்பு சரியாக அமைய வேண்டும்.

"நாளைக்கு எனது பத்தாவது பிறந்த நாள் கொண்டாட்டம்"

1. ..............................
2. ..............................
3. ..............................
4. ..............................
5. ..............................
6. ..............................



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013

# கல்வி முரசு

1.30 மணி



**(01) பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.**

1. துள்ளித் துள்ளி ஓடுது பார்
வெள்ளை முயல் அம்மா - அதை
மெல்ல ஓடிப்பிடித்திடவே
மிகவும் ஆசை அம்மா!

2. பளிங்குக் கண்ணை சுழந்து நானும்
பாரக்க ஆசை அம்மா! இது
ஒளிந்து கொள்ளைப் புதரை நோக்கி
ஓடப்பார்க்குதம்மா!

3. பஞ்சு போன்ற உடலைத் தடவிப்
பார்க்க ஆசை அம்மா - நான்
கொஞ்சி பேசிக் கூடி ஆடிக்
குதிக்க வேண்டும் அம்மா!

01. பாடலில் உள்ள உவமைத் தொடரைக் குறிப்பிடுக? ..............................

02. பாடலில் வந்துள்ள பெயர்அடைமொழியைக் குறிப்பிடுக? ..............................

03. ஆசை எனும் சொல்லின் ஒத்த சொல்லைத் தருக? ..............................

04. எதனுடைய உடலை தடவிப்பார்க்க ஆசை என பாடல் குறிப்பிடுகின்றது? ..............................

05. பாடலில் இடம் பெற்றுள்ள இணைமொழியைத் தருக? ..............................

06. பாடலில் உள்ள பெண்பால் உயர்திணை பெயர்ச் சொல்லைக் குறிப்பிடுக? ..............................

**(02) பொருத்தமான நிறுத்தற்குறியை இடுக.**

1. சீ இந்தப்பழம் புளிக்கும்

2. அம்மா நேற்று வந்தவர் யார்

**(03) சரியான கருத்தைத்தரும் சொல்லை கோடிடுக.**

| | | |
|---|---|---|
| 1. வறட்சி, | வரட்சி, | வறட்ச்சி |
| 2. நூதணசாலை, | நூதனசாலை, | நூதனசாளை |
| 3. சாரணீயம், | சாரனீயம், | சாறணீயம் |
| 4. நாகரீகம், | நாகறீகம், | நாகரிகம் |

**(04) சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியமாக்குக.**

1. சில நாட்களே / புத்தாண்டு / இன்னும் / கொண்டாட்டங்களுக்கு / உள்ளன.

..............................

2. உலகில் / நடிக்கும் / உள்ளனர் / தீயவர்களும் / போல / நல்லவர்

..............................

**(05) பழமொழிகளின் கருத்தை எழுதுக.**

1. எறும்பூரக் கற்குழியும் ..............................

2. மின்னுவதெல்லாம் பொன்னல்ல ..............................

**(06) கருத்தினை ஆங்கிலத்தில் எழுதுக.**

1. மாதம் .................... 2. நாள் ....................

3. கிழமை .................... 4. வருடம் ....................

**(07) கருத்தினை தமிழில் எழுதுக.**

1. Mango .................... 2. City ....................

3. Village .................... 4. Red ....................

**(08) சிங்களக் கருத்தினை தமிழில் எழுதுக.**

1. தம்பி ஓடுகிறான் .................... 2. கேம உயன்ன ....................

**(09) பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (✔) எனவும் பிழையாயின் (✘) எனவும் அடையாளப்படுத்துக.**

1. ஒலிம்பிக் கொடியின் கறுப்பு நிறம் ஆசியா கண்டத்தை குறிக்கின்றது. ( )
2. வண்டுக்குத் தேனை உறிஞ்சுவதற்கான வாயுறுப்பு இல்லை ( )
3. குமிழிகள் மூலம் இனம் பெருகும் தாவரங்களில் அன்னாசிப்பழமும் ஒன்றாகும். ( )
4. வளியின் அமுக்கத்தை குறைந்தளவில் பிரயோகிப்பதன் மூலம் வாசிக்கக்கூடிய இசைக்கருவி சங்கு ஆகும். ( )
5. உடலின் சமநிலையைப் பேணுவதற்கு இலகுவாய் நிற்றல் பெரிதும் உதவும் ( )

**(10) மிகச்சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1. பின்வரும் வித்துக்களில் எது நல்லெண்ணெய் தயாரிக்க உதவுவது?
   1. வேப்பம் வித்து 2. ஆமணக்கு 3. எள்ளு 4. குரக்கன்


2. நீலம் சிவப்பு ஆகிய நிறங்கள் சம அளவில் கலக்கும் போது கிடைக்கும் நிறம் எது?
   1. பச்சை 2. ஊதா 3. செம்மஞ்சள் 4. கறுப்பு

3. தணக்கு காற்றினால் பரவும் வித்தாகும் இது பரவுவதற்கு காரணமாக அமைவது
   1. விலங்குகளின் உடலில் ஒட்டும் தன்மை உடையதால்
   2. சிறகமைப்பை கொண்டதால்
   3. நீண்ட நார் அமைப்பைக் கொண்டதால்
   4. பூச்சிகளை ஒத்த வடிவமுடையதாய் இருத்தலால்


4. விஷம் நிரம்பிய கொடுக்கை கொண்டுள்ளது
   1. பாம்பு 2. எறும்பு 3. தேள் 4. தெள்ளு

5. தோலுடன் சேர்த்து அவித்த பின்னர் தோல் உரிக்கப்படும் கிழங்கு அல்லாதது.
   1. கரட் 2. வற்றாளை 3. மரவள்ளி 4. இராசவள்ளி

6. சேலைக்கரையைத் தைக்கப் பொருத்தமான தையல் முறை



7. இரு மின்சுற்றுகளிலும் ஒளிரக்கூடியது.




   1. A மாத்திரம் 2. B மாத்திரம் 3. A.B ஆகிய இரண்டும் ஒளிராது 4. A.B ஆகிய இரண்டும் ஒளிரும்.

8. கம்பளையில் உள்ள சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த வணக்கஸ்தலம் எது?
   1. கல்விகாரை 2. கடலாதெனிய விகாரை 3. கங்காராம விகாரை 4. தம்புள்ள விகாரை



9. ஆங்கிலேயரால் மலாககாவிற்கு நாடு கடத்தப்பட்டவருமான தேசிய தலைவர்.
   1. கப்பிட்டிப் பொல திஸாவை 2. வண. எஸ். மகிந்த 3. அநகரிக தர்மபால 4. கொங்காலகொட பண்டா

10. கத்தரி, தக்காளி, வெண்டி போன்ற பயிர்களுக்குத் தீங்கு விளைவிக்கும் பூச்சி
    1. தண்டுகோதி 2. வெண்முட்டுப் பூச்சி 3. மீளி முட்டைப் பூச்சி 4. அவுக்கலபோறா வண்டு


11. விற்றமின் D குறைபாட்டினால் ஏற்படும் நோய் ஒன்று
    1. என்புருக்கி 2. மாலைக்கண் 3. ஆஸ்மா 4. மரஸ்மஸ்

12. 18 வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொரு இலங்கை வாசியிடமும் கட்டாயம் இருக்க வேண்டியது.
    1. தொழில் விபர அட்டை 2. ஆள்அடையாள அட்டை 3. பிறப்புச்சான்றிதழ் 4. நன்னடத்தைச் சான்றிதழ்


13. கிரக மண்டலத்தில் மிகவும் பெரிய கோள்
    1. புளுட்டோ 2. ஜீபிடர் 3. புதன் 4. செவ்வாய்

14. நீருடன் நன்கு கலக்கக்கூடிய திரவம்
    1. மண்ணெண்ணெய் 2. தேங்காய் எண்ணெய் 3. பெற்றோல் 4. உப்பு

15. சூரிய நமஸ்காரப் பயிற்சியின் இரண்டாம் கட்டம்




**(11) இலங்கையின் புறவுருப்படத்தில் காட்டப்படும் நதியின் பெயர்களை தெரிவு செய்க.** (15 புள்ளிகள்)





A ....................
B ....................
C ....................
D ....................
E ....................
F ....................

| |
|---|
| களனிகங்கை |
| மகாவலி |
| களுகங்கை |
| ஜின்கங்கை |
| மாணிக்ககங்கை |
| கலாஓயா |

**(12) கணித வினாக்களுக்கு விடை தருக.** (06 புள்ளிகள்)

1. ஏறுவரிசையில் எழுதுக. $\frac{3}{4}, \frac{7}{16}, \frac{1}{8}, \frac{1}{4}$ ..........., ..........., ..........., ...........

2. ஒரு காணியின் $\frac{6}{10}$ பங்கில் கத்தரியும் $\frac{2}{5}$ பங்கில் மிளகாயும் பயிரிடப்பட்டன. மிளகாய் பயிரிடப்பட்டதிலும் பார்க்க கத்தரிபயிரிடப்பட்ட காணியின் பங்கு எவ்வளவு அதிகமானது?
   ....................

3.  இவ்வுருவில் 0.4 பங்கை நிழற்றிக்காட்டுக.

4. 545 தேங்காய்கள் பருமனின் அடிப்படையில் 5 குவியல்களாக வகைப்படுத்தப்பட்டன எனின் ஒரு குவியலில் வகைப்படுத்தப்படும் தேங்காய்களின் எண்ணிக்கை யாது?
   ....................

5. முற்பகல் 10.30 ற்கு புறப்பட்ட கொழும்பு - கண்டி புகையிரதமானது அது வழமையாக வரும் நேரத்தை விட ½ மணித்தியாலம் காலந்தாழ்த்தியே வந்தது. அது வழமையாக வரும் நேரமானது பி.ப. 2.00 எனின் தற்போது புகையிரதம் வந்து சேர்ந்த நேரம் யாது?
   ....................

# சுயதொழிலில் ஈடுபட்டுவருவோரை ஓய்வூதியத்தில் இணைக்கும் நடமாடும் சேவை

(கிளிநொச்சி)

இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையினால் கிளிநொச்சி மாவட்டத்தில் திட்ட நடைமுறைப்படுத்தலில் ஈடுபட்டோரைக் கௌரவிக்கும் நிகழ்வும், சுய தொழிலில் ஈடுபட்டு வருவோர்களை ஓய்வூதியத்திட்டத்தில் இணைந்துக் கொள்வதற்கான நடமாடும் சேவை ஒன்றும் எதிர்வரும் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பளை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

பளை பிரதேச செயலர் சி.சத தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் இலங்கை சமூக பாதுகாப்புச்சபையின் தலைவர் திருமதி. சுமுணா ஆரியரட்ண பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ள உள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வதுடன், கௌரவ விருந்தினர்களாக கரைச்சி பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன், பூநகரி பிரதேச செயலர் கே.எஸ்.வசந்தகுமார், கண்டாவளை பிரதேச செயலர். த.முகுந்தன் ஆகியோர் கலந்துகொள்ள உள்ளனர்.

இத் திட்டத்தில் சிறப்பான அடைவுமட்டத்தை அடைந்த பிரதேச செயலர்கள், சமூகசேவைகள் அதிகாரிகள், கிராம அலுவலர்கள் ஆகியோர் கௌரவிக்கப்பட உள்ளனர். பளை பிரதேச செயலர் பிரிவில் 216 பேரும், பூநகரி பிரதேச செயலர் பிரிவில் 40 பேரும, கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் 32 பேரும் இதுவரை இணைந்துள்ளனர். (90)


வாழ்க வளமுடன்

தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

பெயர் : எஸ். கபிலாசினி

முகவரி : சமளங்குளம், வவுனியா.

அகவை 10 இல்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்





## வவுனியா மாணவனுக்கு சாரணர் பேடன்பவல் விருது



இலங்கை சாரண தலைமைக் காரியலயத்தினால் வழங்கப்படும் திரிசாரண பிரிவின் உயர் விருதான பேடன் பவல் விருதினை வவுனியா விபுலானந்தாக் கல்லூரியின் பழைய மாணவனும் களனி பல்கலைக கழகத்தின் விஞ்ஞான பீட மாணவனுமாகிய சுந்தரலிங்கம் காண்டீபன் பெற்றுக்கொண்டுள்ளார். 2005 ஆம் ஆண்டு நேபாளத்தில் நடைபெற்ற சாரண சார்க் நட்புறவு பாசறையிலும் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்திச் சென்றதுடன் 2007 ஆம் ஆண்டு சாரணர் உயர் விருதான ஜனாதிபதி விருதினை இவர் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இவர் விபுலானந்தக் கல்லூரியின் உதவி சாரண தலைவராகவும், வவுனியா மாவட்ட ஜனாதிபதி சாரணர் மன்றத்தின் தலைவ ராகவும், திரிசாரண உதவி மாவட்ட ஆணையாளராகவும் கடமை யாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# முதல் முறையாக அடையாள அட்டைக்கு 47 வயது கோண்டாவில் வாசி விண்ணப்பம்



(யாழ்ப்பாணம்)

47 வயதான தமிழர் முதற்தடவையாக தேசிய அடையாள அட்டையைப் பெற விண்ணப்பித்துள்ளதாக கஃபே அமைப்பு தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் - நல்லூர் - கோண்டாவில், ஸ்ரேசன் வீதியில் வசிப்பவர் சிவபாத சுப்ரமணியம். இவர் தனது 47 ஆவது வயதில் முதற்தடவையாக தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்துள்ளார்.

கடந்த 23 ஆம் திகதி யாழ். நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்ட தேசிய அடையாள அட்டை பெற்றுக்கொடுக்கும் நடமாடும் சேவையில் சிவபாத சுப்ரமணியம் இந்த விண்ணபத்தை கையளித்துள்ளார்.

கஃபே இயக்கம், மனித உரிமைகளுக்கான கேந்திரம் மற்றும் ஆட்பதிவுத் திணைக்களம் என்பன இணைந்து அடையாள அட்டை மற்றும் வேறு அடையாள ஆவணங்களை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் இந்த நடமாடும் சேவையை ஏற்பாடு செய்திருந்தன.

இந்தநிலையில் பல வருடங்களாக தன்னால் எதிர்பார்க்கப்பட்ட சேவை ஒன்றை செய்து கொள்ள முடிந்ததையிட்டு மகிழ்ச்சி அடைவதாக அடையாள அட்டைக்கு விண்ணப்பித்த சிவபாத சுப்ரமணியம் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார்.

கஃபே இயக்கம், மனித உரிமைகளுக்கான கேந்திரம் மற்றும் ஆட்பதிவுத் திணைக்களம் என்பன செய்த விளம்பரத்தின் மூலம் நடமாடும் சேவை குறித்து அறிந்து கொண்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாளாந்தம் 500 ரூபாவிற்கு கூலி வேலை செய்யும் தன்னால் சாதாரண நடைமுறையில் தேசிய அடையாள அட்டை பெற முடியாது போனதாகவும் ஆனால இந்த நடமாடும் சேவைக்கு வந்து இலவசமாக புகைப்படம் எடுத்து தேவையான ஆவணங்களை வழங்கி ஒரே நாளில் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்க முடிந்ததையிட்டு மகிழ்ச்சி அடைவதாகவும் அவர் கூறியுள்ளார்.

தன்னிடம் தற்காலிக அடையாள அட்டையே உள்ளதாகவும் அதனைப் பயன்படுத்தி கடந்த தேர்தலில் வாக்களிக்க முடியாது போனதாகவும் சிவபாத சுப்ரமணியம் இங்கு மேலும் தெரிவித்துள்ளார்.

# பாடசாலை மாணவர்களுக்கு சைவசமய விழுமியச் செயன்முறை

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் சைவசமயம் கற்கும் மாணவர்களிற்கு, சைவ சமய விழுமியச்செய்முறைப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. இந்த வேலைத்திட்டம், 2 ஆம் தவணை ஆரம்பத்திலிருந்து பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதுடன் இந்தச் செய்முறைப் பயிற்சி தொடர்பில் முன்னர் பாடசாலைகளில் தரம் 6 - 13 வரையான வகுப்பு மாணவர்களிற்குச் சைவ சமயம் கற்பிக்கும் ஆசிரியர்களிற்குக் கருத்தரங்கும், பயிற்சியும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதனடிப்படையிலேயே ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களிற்கு விநாயகரைக் கும்பிடுதல், பஞ்சாங்க, அட்டாங்க, திரியாங்க நமஸ்கார முறைகள், ஆலயம் செல்லும் முறை, கும்பம் வைக்கும் முறை, விபூதி வாங்கும், தரிசிக்கும் முறைகள் முதலான சைவ சமய விழுமியங்கள் தொடர்பில் செய்முறைப் பயிற்சிகளை வழங்கி வருகின்றன.

சைவச் சிறார்கள் வீட்டிலும், ஆலயத்திலும் தயக்கமின்றி சரியான முறையில் வழிபாட்டில் ஈடுபடுவதற்கு இந்தப்பயிற்சிகள் உதவியாக அமையும் எனப் பாடசாலை அதிபர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் சமய பாடத்தைப் பரீட்சைக்கு மட்டும் வகுப்பறைக்குள் கற்றுவந்த மாணவர்களிற்கு இத்தகைய பயிற்சிகள், அவர்களைச் சமய வாழ்வில் முழுமையாக மனத்திருப்தியுடன் ஈடுபடச் செய்யப்பேருதவியாக அமையும் எனவும் அதிபர்கள் தெரிவிக்கின்றனர்.

இத்தகைய பயிற்சிப் பணிகளை ஆலயங்களிலும் முன்னெடுத்துவரின் அது சைவப்பிள்ளைகளை சமய வாழ்வில் முழுமையாக ஈடுபடுத்த மேலும் உதவியாக அமையும் எனத்தெரிவிக்கப்படுகிறது. (06)

# ஆசிரிய கலாசாலை பயிற்சி விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)


நாடளாவிய ரீதியில் உள்ள எட்டு ஆசிரிய கலாசாலைகளுக்கும் இரண்டு வருட பயிற்சிகளுக்கு ஆசிரியர்களை இணைத்துக்கொள்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இவ்விண்ணப்பங்களை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதிக்குள் அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் சேவையிலுள்ள பட்டதாரிகள் அல்லாத ஆசிரியர் பயிற்சியை இதுவரை பெற்றுக் கொள்ளாத ஆசிரியர்கள், ஆசிரிய உதவியாளர்கள் ஆகியோர் இப் பயிற்சிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்கள் கல்வியமைச்சின் ஆசிரியர் கலாசாலை பிரிவிற்கு அனுப்பி வைக்கப்படவேண்டும். கோப்பாய், மட்டக்களப்பு, அட்டாளைச்சேனை, மகரகம, பேராதனை, பலப்பிட்டி, உணவட்டுட உள்ளிட்ட ஆசிரியர் கலாசாலைகளிலும் இரண்டு வருட ஆசிரிய பயிற்சிகளுக்கு ஆங்கிலம் தமிழ், சிங்களம், உட்படப் பல்வேறு பாடத்துறைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.


மேலதிக விபரங்களை யூலை 5 ஆம் திகதி வர்த்தமானியில் பார்வையிட முடியும்.





கிளிநொச்சி சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையம் பூநகரி விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்தில் வைத்து பாதிக்கப்பட்ட வறிய மாணவர்களுக்கான காலணிகளை அண்மையில் வழங்கியபோது... (90)

# மோசமான ரயில் விபத்து
# ஸ்பெயினில் ௬0 பேர் பலி




ஸ்பெயினில் இடம்பெற்ற மிக மோசமான ரயில் விபத்தில் அறுபது பேர் கொல்லப்பட்டுள்ளனர். ஸ்பெயினின் வடமேற்குப் பகுதியான காலிசிக்காவின் சன்டியாகோ டி கொம்பொஸ்டிலா என்னும் நகரிற்கு அருகாமையில் விபத்து இடம் பெற்றுள்ளது.

உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் உயர்வடையக் கூடுமென அச்சம் வெளியிடப் பட்டுள்ளது. கடந்த நான்கு தசாப்தங்களில் இடம்பெற்ற மிக மோசமான ரயில் விபத்தாக இது கருதப்படுகின்றது. மீட்புப்பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாகத்தெரி விக்கப் படுகிறது.

ரயில் வளைவுப் பாதையில் பயணித்த போது தடம்புரண்டு முழுவதும் கட்டுப்பாட்டை இழந்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் ரயிலின் பதின்மூன்று பெட்டிகளும் பாதையைவிட்டு விலகி ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டதாக நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர். உயிரிழப்பு விபரங்களை உறுதிப்படுத்திய அந்நாட்டு அரசாங்கம் விபத்துக்கான காரணங்கள் பற்றி விசாரணை நடத்தப்பட்டு வருவதாகத்தெரிவித்துள்ளது,

உலகச் செய்திகள்

# இரண்டாவது அணு உலைக்கு எரிபொருள் நிரப்பும் பணி நிறைவு



கூடங்குளம் 2ஆவது அணுஉலையில் மாதிரி எரிபொருள் நிரப்பும் பணி முடிவடைந்துள்ளது. விரைவில் வெப்பநீர் சோதனை ஓட்டம் தொடங்கப்படும் என அணுமின் நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன. கூடங்குளத்தில் 1000 மெகாவாட் மின்உற்பத்தித் திறனுள்ள 2அணு உலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் முதல் அணு உலையில் கடந்த 13ஆம் திகதி இரவு முதல் மின்உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது. இந்நிலையில், 2ஆவது அணுஉலையில் மாதிரி எரிபொருள் நிரப்பும் பணி நடைபெற்று வந்தது. இந்தப் பணி இப்போது நிறைவு பெற்றுள்ளது. முதல் அணுஉலையில் உள்ளது போன்றே 2ஆவது அணுஉலையிலும் 163 எரிபொருள் கற்றைகள் உள்ளன. இவை அனைத்திலும் மாதிரி எரிபொருள் நிரப்பப்பட்டு வெப்பநீர் சோதனை ஓட்டத்துக்கு தயார் நிலையில் உள்ளது.


# கடும் துப்பாக்கிச் சூடு; மெக்சிக்கோவில் 22பேர் பலி



மெக்சிக்கோவில் இடம் பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் 22 பேர் கொல்லப்பட்டனர். சம்பவத்தில் மேலும் பலர் காயமடைந்துள்ளதாக மெக்சிக்கோ தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனிடையே, பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி சூட்டு சம்பவத்தின் போது, இரண்டு காவற்துறை அதிகாரிகள் கொல்லப்பட்டனர்.

மோதல் இடம் பெற்ற பிரதேசத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தாக்குதல் சம்பவத்தில் 20 ஆயுததாரிகளும் கொல்லப்பட்டுள்ளனர். 2006ஆம் ஆண்டு முதல் இடம்பெற்று வரும் மோதல்களில் 60000 பேர் வரையில் கொல்லப்பட்டுள்ளனர்.

# மோடியின் விசா கோரிக்கை; பரிசீலிக்கிறது அமெரிக்கா



(வாஷிங்டன்)

குஜராத் முதல்வர் நரேந்திர மோடி விசா கோரி விண்ணப்பித்தால் பரிசீலிப்போம் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது. மோடிக்கு அமெரிக்கா செல்வதற்கு விசா வழங்கக்கூடாது என்று பலர் போர்க்கொடி உயர்த்தியுள்ளனர். இதுதொடர்பாக அமெரிக்க அதிபர் ஒபாமாவுக்கும் புகார் மனு போயுள்ளது. இந்தநிலையில் மோடி விசா கோரி விண்ணப்பித்தால் பரிசீலணை செய்வோம் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது. அமெரிக்க நாட்டு குடியேற்ற சட்டம் மற்றும் கொள்கையின் அடிப்படையில் விசா விண்ணப்பம் பரிசீலணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று அமெரிக்க அரசு தெரிவித்துள்ளது. இதுகுறித்து அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் ஜென் ஸாகி பேசுகையில், குஜராத் முதல்வர் மோடி அமெரிக்கா வர விசா கோரி விண்ணப்பித்தால் அமெரிக்க குடியேற்ற சட்டம் மற்றும் அரசின் கொள்கைக்கு உட்பட்டு முடிவெடுக்கப்படும், பரிசீலிக்கப்படும். அமெரிக்க அரசின் கொள்கையானது இந்த விஷயத்தில் மாற்றப்படவில்லை. இதுகுறித்து விரிவாக வெளிப் படையாக விவாதிக்க முடியாது என்றார் அவர். குஜராத் கலவரத்தை மேற்கோள் காட்டி அமெரிக்க அரசு, மோடிக்கு தொடர்ந்து விசா தர மறுத்து வருவது குறிப்பிடத்தக்கது

# மதிய உணவுத்திட்டத்தில் பங்கேற்க பிஹார் ஆசிரியர்கள் மறுப்பு



இந்தியாவின் பிஹார் மாநிலத்தில் பள்ளியில் மதிய உணவு உண்ட பிள்ளைகள் 23 பேர் சென்ற வாரம் பலியான நிலையில், அரசாங்க இலவச மதிய உணவுத் திட்டத்தில் பங்கேற்க அம் மாநிலத்தின் இலட்சக்கணக்கான ஆசிரியர்கள் மறுத்துள்ளனர்.


இத்திட்டத்தில் ஊழல் புரையோடிப்போயுள்ளது என்றும், போதுமான உதவி இன்றியும், தரம் குறைவான உணவுப் பொருட்களைக் கொண்டும் இது நடத்தப்படுகிறது என்றும் ஆசிரியர்கள் சங்கம் குற்றம்சாட்டுகிறது.

இப்படியான திட்டத்தில் தவறேதும் நடந்தால் அதற்கான பழியை ஆசிரியர்கள் சுமக்க நேரிடுகிறது என அச்சங்கம் கூறுகிறது. இலவச மதிய உணவுத் திட்டத்தை நடத்த தனியொரு கட்டமைப்பை ஏற்படுத்துமாறு ஆசிரியர்கள் அரசாங்கத்தினரை கோரியுள்ளனர்.

சென்ற வாரம் நடந்த சம்பவம் நடந்த இடத்தில் பரிமாறப்பட்ட உணவில் பூச்சிக்கொல்லி மருந்து பயன்படுத்தப்பட்டதாக ஆய்வுகள் காட்டியுள்ளன.,

இதேவேளை சாப்ராவில் பதுங்கியிருந்த பாடசாலைஅதிபர் மீனா தேவியை பொலிஸார் நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளனர்

# எகிப்துக்கு போர் விமானங்கள்; நிறுத்தி வைத்தது அமெரிக்கா



அமெரிக்க அரசு எகிப்து நாட்டிற்கு கூடுதலாக வழங்க இருந்த நான்கு "எப்-16" ரக போர் விமானங்களைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளதாக நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

கடந்த 3ஆம் திகதி எகிப்து அதிபர் முகமது மோர்சி, இராணுவத்தால் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். அதுமுதல் இராணுவத்தினருக்கும், மோர்சி ஆதரவாளர்களுக்கும் தொடர்ந்து மோதல்கள் ஏற்பட்டு வருகின்றன. நாடு முழுவதும் கலவரமும், அமைதியின்மையும் பரவியுள்ள இந்த நிலையில், எகிப்துக்கு கூடுதல் போர் விமானங்களை அளிப்பது தகுந்த செயலாக இருக்காது என்று பெண்டகன் தகவல் அதிகாரி ஜார்ஜ் லிட்டில் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

அமெரிக்கா- எகிப்து குறித்த பாதுகாப்பு உறவு இதனால் பாதிக்கப்படாது என்றும், பிராந்திய ஸ்திரத்தன்மை தொடர்ந்து பாதுகாக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். அமெரிக்காவின் பாதுகாப்புச் செயலர் சுக் ஹேகல், நேற்று முன்தினம் எகிப்தின் இராணுவத் தலைவர் அப்டெல் பெட்டா அல் சிசியிடம் தொலைபேசி மூலம் இந்தத்தக வலைத்தெரிவித்து விட்டதாகவும் அவர் கூறினார்.

அதிபர் பராக் ஒபாமா போர் விமானங்கள் வழங்குவதை ஒத்திப்போட்டதற்கான காரணங்களைக் குறித்து லிட்டில் விளக்கவில்லை. இந்த முடிவை எடுக்க வேண்டியது முக்கியம் என்று கருதிய அமெரிக்க தலைமை, எகிப்து நாடு விரைவில் ஜனநாயக வழியில் ஆட்சி அமைக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

# பெயர் சூட்டப்பட்டது புதிய வாரிசுக்கு



இளவரசர் வில்லியம் - கேட் தம்பதியருக்குப் பிறந்த குழந்தைக்கு, ஜோர்ஜ் அலெக்ஸாண்டர் லூயிஸ் என்று பெயரிடப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பை கென்சிங்டன் அரண்மனை வெளியிட்டது. பிரிட்டனில் இருக்கும் பந்தயம் கட்டும் நிறுவனங்களில் பெரும்பாலானவை , இந்தக் குழந்தைக்கு ஜார்ஜ் என்றே பெயரிடப்படும் என்று கணித்திருந்தன.

கேட்-வில்லியம் தம்பதியரும் அவர்களின் குழந்தையும், பார்க்க்ஷையரில் இருக்கும் கேட்டின் பெற்றோர் வீட்டில் இருக்கிறார்கள்.

# உரிமைகளை வென்றெடுக்கவே எமது அரசியல் பயணம் தொடர்கிறது



(யாழ்ப்பாணம்)

எமது மக்களின் வாழ்வாதாரம் உள்ளிட்ட அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்காகவே நாம் அரசியல் பயணத்தில் தொடர்ந்தும் பயணிக்கின்றோம். ஆனால், சில கட்சிகள் தமது சுயலாபத்திற்காகவே அரசியலில் அங்கம் வகிக்கின்றனர் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் நேற்று முன்தினம் உடற்கல்வி டிப்ளோமாதாரிகளுடனான சந்திப்பின் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மாகாண சபையை நாம் வென்றெடுக்கும் பட்சத்தில், எமது மக்களின் வாழ்வாதாரம் மட்டுமல்லாது, அரசியல் உரிமைகளையும் வென்றெடுக்க முடியும் என்கின்ற நம்பிக்கையிலேயே நாம் தொடர்ந்தும் அரசியல் பயணத்தில் பயணித்து வருகின்றோம்.

ஆனால், சுயலாபத்தைக் கருத்திற்கொண்டே ஏனைய கட்சிகள் அரசியலில் ஈடுபட்டு வருவதுடன், தேர்தலிலும் போட்டியிடுகின்றன.

இந்நிலையில், மக்களுக்குச் சேவையாற்றும் உண்மையான பிரதிநிதிகளை மக்கள் தெரிவு செய்வதின் ஊடாகவே அவர்களது வாழ்வாதாரமும், அரசியல் உரிமைகளையும் வென்றெடுக்க முடியும் என்றும் சுட்டிக்காட்டினார்.

இதனிடையே, மீன்பிடியியல் விஞ்ஞான டிப்ளோமா பட்டதாரிகளும் தெல்லிப்பழை, பருத்தித்துறை, சாவகச்சேரி மற்றும் யாழ்ப்பாணம் வைத்தியசாலைகளின் உளநலப் பிரிவினரும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்து தமது நியமனம் தொடர்பில் கலந்துரையாடியுள்ளனர்.

# உலக சுகாதார நிறுவனம் பாடநூல்கள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

உலக சுகாதார நிறுவனம் யாழ். நூல் நிலையத்திற்கு சுமார் 200 சுகாதார பாடநூல்களையும் நூல்நிலையத்திற்கான ஒரு தொகுதி உபகரணங்களையும் நேற்று யாழ். நூல்நிலையத்தின் நடைபெற்ற நிகழ்வொன்றில் வைத்து வழங்கியுள்ளது.

நேற்று முற்பகல் 10.00 மணிக்கு யாழ். நூல்நிலைய கேட்போர்கூடத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியிடம் உலக சுகாதார நிறுவனத்தின் (WHO) இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி டாக்டர் மேத்தா நூல்களை கையளித்ததுடன் இந்த நூல்கள் கையளிக்கப்பட்ட யாழ். பொது நூலகப் பகுதியை ஆளுநர் நாடா வெட்டி திறந்துவைத்தார். தொடர்ந்து நூலகத்தின் பகுதிகளை அவர்கள் பார்வையிட்டனர்.

யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். மாநகர சபை ஆணையாளர் பிரணவநாதன், ஆளுநரின் செயலர் இ.இளங்கோவன், யாழ். நூலக பிரதம நூலகர் மற்றும் நூலகப் பணியாளர்கள் கலந்துகொண்டனர். (பா)

# அந்தச் சடலம் யாருடையது?

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு கடற்கரையோரமாக கரையொதுங்கிய ஆண் ஒருவரது சடலம் நேற்று நெடுந்தீவு பொலிஸாரினால் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சுமார் 45 முதல் 50 வயது மதிக்கத்தக்க இந்தச் சடலம் அடையாளம் காணப்படாத நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையின் சவச்சாலையில் வைக்கப்பட்டிருப்பதாக வைத்தியசாலையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நெடுந்தீவு கடற்கரையோரமாக இந்தச் சடலம் கரையொதுங்கியிருந்த நிலையிலேயே நெடுந்தீவு பொலிஸாரினால் மீட்கப்பட்டு நேற்று மு.ப. 9.20 மணியளவில் அடையாளம் காணப்படாத யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (பா)

## நல்லிணக்க..

இந்த மதிப்பீடு மேற்கொள்ளப்படவுள்ளது என்று வர்சி குறிப்பிட்டுள்ளார்.

போருக்குப் பின் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் முன்னேற்றங்கள் குறைந்தே உள்ளன. பொதுநலவாய நாடுகளின் 2012 ஆம் ஆண்டின் நாடுகள் தொடர்பான பிந்திய தகவலிலும் இலங்கையின் கருத்துச் சுதந்திரம் மற்றும் மனித உரிமை மேம்பாடுகளில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

இந்தநிலையில் எதிர்வரும் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டுக்கு முன்னர் நல்லிணக்கம், மனித உரிமைகள் மற்றும் வடமாகாண தேர்தல் என்பவற்றில் முன்னேற்றங்கள் காணப்பட வேண்டும் என்பதையே பிரித்தானியா விரும்புவதாக வர்சி தெரிவித்துள்ளார்.

## வேலியே பயிரை...

பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்துகொண்டு முழு நேர சட்டத்தரணியாக யாழ். நீதிமன்றிலும் தொழிற்பட்டுவருபவர் என ஏற்கனவே பரவலாக குற்றஞ்சாட்டப்பட்டு வருபவராவர்.

போக்குவரத்து விதிகளைமீறி ஓட்டுனர்கள் கைத்தொலைபேசி பாவனைசெய்வதால் பல அப்பாவி உயிர்கள் பலியாகிவரும் சூழ் நிலையில் இது மிகவும் பாரதூரமான விடயமென கருத்துத் தெரிவித்த யாழ். சட்டத்தரணிகள் சங்க உறுப்பினர் ஒருவர், வாகன ஓட்டுனர்கள் பொதுமக்களுக்குப் பொறுப்பாக நடந்துகொள்வது அவசியம் எனத் தெரிவித்தார்.

சட்டத்தரணி குருபரன் யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் குமாரவடிவேலின் புத்திரர் என்பதுடன் இந்துக் கோவில் ஒன்றின் தர்மகர்த்தா சபை உறுப்பினர் எனவும் அறியப்படுகிறது.

## கிராமிய...

உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் ஆகியோரின் 2013 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியிலிருந்து வலி.தென்மேற்கு பிரதேசத்தில் 7 இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்திலுள்ள பொது அமைப்புக்கள், விளையாட்டுக் கழகங்கள் போன்றவற்றின் தேவைகளுக்காக இப்பணம் செலவிடப்படவுள்ளது.

அவற்றின் விபரம் வருமாறு,

பெரியவிளான் அந்தோனியார் விளையாட்டுக் கழக மைதான புனரமைப்பிற்கு ஒரு இலட்சம் ரூபாவும், இளவாலை யங்கென்றீஸ் விளையாட்டுக்கழகத்திற்கு விளையாட்டு உபகரண கொள்வனவிற்கு 25 ஆயிரம் ரூபாவும், காக்கைதீவு ஆதவன் விளையாட்டுக்கழகத்திற்கு விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவிற்கு 25 ஆயிரம் ரூபாவும், சாந்தை விநாயகர் முன்பள்ளி மைதான புனரமைப்பு, மின்சார இணைப்புக்கு 50 ஆயிரம் ரூபாவும், மாதகல் உதயதாரகை சனசமூக நிலைய முன்பள்ளிக்கு கட்டடம் அமைத்தலுக்கு 75 ஆயிரம் ரூபாவும், சண்டிலிப்பாய் சிவசக்தி சனசமூக நிலைய தளபாடக் கொள்வனவு, மலசலகூட புனரமைப்பிற்கு 25 ஆயிரம் ரூபாவும், சண்டிலிப்பாய் நவசக்தி சனசமூக நிலைய கட்டடத் திருத்தப் பணிகளுக்கு 75 ஆயிரம் ரூபாவும், சண்டிலிப்பாய் சூரியோதயா சனசமூக நிலையத்திற்கான மின் இணைப்புக்கு 25 ஆயிரம் ரூபாவும், சுதுமலை யுவசக்தி சனசமூக நிலைய கூரைப் புனரமைப்பிற்கு 75 ஆயிரம் ரூபாவும், மானிப்பாய் ஞானவைரவர் சனசமூகநிலைய நிலம் இழுத்தல் பணிக்கு 25 ஆயிரம் ரூபாவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் சண்டிலிப்பாய் மணிமோகன் சனசமூக நிலைய புனரமைப்பிற்கும், நவாலி வடக்கு முதியோர் பராமரிப்பு நிலையத்திற்கு உபகரணங்கள் கொள்வனவிற்கும் தலா 50 ஆயிரம் ரூபாவும், ஆனைக்கோட்டை மூத்த பிரஜைகள் சமூகசேவை நிலைய கட்டட புனரமைப்பிற்கு 50 ஆயிரம் ரூபாவும், ஆனைக்கோட்டை உயரப்புலம் குணபாலன் வித்தியாலயத்திற்கு கணனி கொள்வனவுக்கு 50 ஆயிரம் ரூபாவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# வடக்கில் ஈரோஸ் திங்கள் மனுத்தாக்கல்

(கொழும்பு)

ஈரோஸ் என்று அழைக்கப்படும் ஈழவர் ஜனநாயக முன்னணி வடமாகாண தேர்தலுக்காக எதிர்வரும் திங்கட்கிழமை வேட்புமனுத்தாக்கல் செய்யவுள்ளதாக கட்சியின் செயலாளர் இரா.பிரபாகரன் தெரிவித்தார்.

வடக்கு மற்றும் மத்திய மாகாண சபைத் தேர்தல்களில் ஈரோஸ் ஏர் சின்னத்தில் போட்டியிடவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## இருபது...

பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை 2012 ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தில் கல்விக்கென 916.31 மில்லியன் ரூபா அரசாங்கத்தினால் செலவு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவித்த அவர், குறிப்பாக வடமாகாணம் கல்வித்தரத்தில் உயர்ச்சி பெற்றுவருவதாகவும் தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர்களுக்கான கருத்தரங்கில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இந்த விபரங்களைத் தெரிவித்துள்ளார். (பா)

## தொழிற்கட்சி...

மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

பி.ஜி.தயானந்தாவை முதன்மை வேட்பாளராகக் கொண்டு வேட்புமனுத்தாக்கல் நேற்று இடம்பெற்றது.

வேட்புமனுக்கள் எதிர்வரும் ஆகஸ்ட் முதலாம் திகதி நண்பகல் 12.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகள் தவிர்ந்த ஏனைய சுயேட்சைக் குழுக்கள் தமது கட்டுப்பணத்தை இம்மாதம் 31 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் செலுத்த வேண்டும் என தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை மன்னார் மற்றும் வவுனியா மாவட்டத்தில் மக்கள் நல முன்னணியும் நேற்று வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளது. (இ)

# கடுகதி வேகத்தில் புகையிரதப் பாதை

### யாழ். அரச அதிபர் தகவல்

பளை தொடக்கம் காங்கேசன்துறை வரையான புகையிரதப்பாதை புனரமைப்புப் பணிகள் துரிதகதியில் இடம்பெற்று வருவதாக யாழ். அரச அதிபர் தெரிவித்தார்.

56 கிலோமீற்றர் நீளம் கொண்ட இப்பாதையின் பணிகளில் துப்புரவு, பாலங்கள், கடவைகளின் அளவைகள், தண்டவாளங்கள் ஓட்டுதல், தண்டவாளங்களை அமைப்பதற்கான நில வேலைகள் கொடிகாமத்திலிருந்து சாவகச்சேரி வரை முடிவடைந்துள்ளதாக அரச அதிபர் தெரிவித்தார்.

இப்பணிகளுக்கென 149 மில்லியன் டொலர் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், 2014 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இப்பணிகள் நிறைவடையும் என அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்தி தொடர்பான ஊடகவியலாளர்களுக்கான அறிவூட்டல் செயலமர்விலேயே அவர் இவற்றைத் தெரிவித்தார். (இ,பா)

## முல்லை மக்களின்...

ஆகிய கிராமங்களில் வாழும் மக்களது வயற் காணிகள் வெலிஓயா பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்வாங்கப்பட்டுள்ள நிலையில், இவ்விடயம் குறித்து முல்லைத்தீவு மாவட்டத்திற்கு அமைச்சர் விஜயம் மேற்கொண்டபோது மக்கள் எடுத்துரைத்தனர்.

இதற்கமைவாக, மேற்படி விடயம் தொடர்பாக அமைச்சர் துறைசார்ந்தோரிடம் கேட்டறிந்து கொண்டதுடன், மீளக்குடியேறியுள்ள குறித்த கிராமங்களைச் சேர்ந்த மக்களது அடிப்படை வசதிகளான வீட்டுவசதி, சமுர்த்தித் திட்டம் உள்ளிட்ட ஏனைய விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தினார்.

இதனிடையே, ஓட்டுசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலையின் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடனும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துரையாடி, நிலைமைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார். இதன்போது முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளர் ஜெயராஜ் (கிருபன்), கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலர் குருபரன் ஆகியோர் உடனிருந்தனர்.

## வேட்பாளர்...

என்பவற்றை நேற்று இராஜினாமாச் செய்துள்ளார் என்று இணையத்தளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மற்றொரு அங்கத்தவரான குலநாயகமும் இராஜினாமாச் செய்ய முடிவு செய்திருப்பதாகவும் கூறப்படுகின்றது. மாவை சேனாதிராசாவின் வலது, இடது கரங்களான இத்தரப்புக்களது இராஜினாமாவை மாவை ஏற்றுக்கொள்வாரா என்பது இதுவரை தெளிவாகவில்லை.

இதனிடையே முன்னாள் ஊடகவியலாளர் ஒருவருக்கு ஆசனத்தை ஒதுக்க கட்சியின் தலைவர் சம்பந்தன் தொடர்ந்தும் அழுத்தங்களை பிரயோகித்து வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளது.

எனினும் எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை கூட்டமைப்பின் வேட்பு மனுக்களை வடக்கின் ஐந்து மாவட்டங்களிலும் தாக்கல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கென இரா.சம்பந்தன் யாழ்ப்பாணத்திற்கு செல்லவுள்ளதாகவும் முதலமைச்சர் வேட்பாளர் விக்கினேஸ்வரனும் யாழ்ப்பாணம் செல்லவுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இரா.சம்பந்தன் சில நாட்களிற்கு வடக்கில் தங்கி நின்று பிரசாரங்களில் ஈடுபட திட்டமிட்டுள்ளதாகவும் அறிய முடிகின்றது.

# மீனவர்கள் மீது தாக்குதல்

(வடமராட்சி)

மயிலிட்டி கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மீனவர்கள் மீது நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில் வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியைச் சேர்ந்த நான்கு மீனவர்கள் இரண்டு படகுகளில் இப்பகுதிக்கு மீன் பிடிக்கு சென்றுள்ளனர்.

இவ்விடத்துக்கு வந்த கடற்படையினர் இவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. மூன்று பிள்ளைகளின் தந்தையான தங்கவேல் குகதாஸ் (வயது-35) மற்றும் நாகமணி திலகேந்திரன் (வயது-36) கிருஸ்ணபிள்ளை சூரிய குமார் (வயது-38) ஆகியோரே தாக்கப்பட்டுள்ளனர்.


இந்தச் சம்பவம் தொடர்பாக கடற்தொழிலாளர் சங்கத்தின் உயரதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (116)

# சுதந்திரக் கட்சியில் இணைந்தார் எஹியா

சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் வட மேல் மாகாண சபை உறுப்பினரான எஹியா ஆப்தீன் சிறீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்துகொண்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றின்போது பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பீல் ராஜபக்'விடமிருந்து சிறீலங்கா சுதந்திர கட்சியின் அங்கத்துவத்தை பெற்றுள்ளார்.

## மரண அறிவித்தல்



### பிரமநாயகம் குமரேசன் (தோழர் சுதன்)

தோழர் சுதன் என் அழைக்கப்படும் பிரமநாயகம் குமரேசன் நேற்று (25.07.2013) அதிகாலை தனது 55 ஆவது வயதில் காலமாகிவிட்டார்.

ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கத்தை கட்டியமைத்ததிலும் அதன் வளர்ச்சியிலும் ஆரம்பம் முதல் 1986 நடுப்பகுதி வரை அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர்.


பின்னர் தமிழ்நாடு திருநெல்வேலியில் குடும்பத்தினருடன் வசித்து வந்த இவர் சில நாட்களாக நோய் வாய்ப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தோழர் சுதன் 1986 நடுப்பகுதியில் அவரது திருமணத்தின் பின்னர் தமிழ்நாட்டில் வசித்து வந்தார்.

இவ்வறிவித்தலை அவரது உற்றார் உறவினர்கள் மற்றும் தோழர்கள் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

தகவல்
(இ) குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



### திருமதி இந்திராணி திருநாவுக்கரசு

இல 60,சேர் பொன் இராமநாதன் வீதி, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் 95 புதுசெட்டி தெரு கொழும்பை வதி விடமாகவும் கொண்ட திருமதி.இந்திராணி திருநாவுக்கரசு 25.07.2013 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை இராசம்மா ஆகியோரின் அன்பு மகளும். காலஞ்சென்றவர்களான அப்புத்துரை அன்னம்மா ஆகியோரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற திருநாவுக்கரசின் (மீன்பிடி இலாகா பரிசோதகர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற றோசம்மா, இராசமலர் மற்றும் இராசலிங்கம் ஆகியோரின் சகோதரியும் சந்திரமோகன (கனடா), சுமதி (கொழும்பு), காலஞ்சென்ற சுயந்தி (இலங்கை வங்கி, திருநெல்வேலி) வாசுகி (கனடா), குகன் (அவுஸ்ரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயும், ஜெயா, காலஞ்சென்ற முருகதாஸ், கனேசமூர்த்தி (இலங்கை வங்கி,யாழ்ப்பாணம்) செல்வநாயகம், விஜயந்தி ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 28.07.2013 ஞாயிற்றுக் கிழமை மு.ப10.00 மணிக்கு 95,புதுசெட்டி தெரு கொழும்பு 13 இல் நடைபெற்று தகனக்கிரியைக்காக கனத்தை இந்து மயானத்துக்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளவும்.

95,புதுசெட்டித் தெரு
கொழும்பு-13


தகவல்
குடும்பத்தினர்

# வாக்களிக்கத் தகுதியா? தகவல் அறிய வாய்ப்பு

(கொழும்பு)

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் வாக்களிப்பதற்கு தங்களது பெயர் வாக்காளர் பட்டியலில் உள்ளதா என அரச தகவல் மத்திய நிலையத்திற்கு (1919) அழைப்பை ஏற்படுத்தி உறுதி செய்துகொள்ள முடியும்.

வடக்கு வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களில் உள்ள வாக்காளர்கள் இவ்வாறு தகவல் அறிந்துகொள்ள முடியும் என இலங்கை தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப நிறுவனம் தெரிவித்துள்ளது.



அரச தகவல் மத்திய நிலையதத்திற்கு (1919) அழைத்து வதியும் மாவட்டம், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முழு பெயரை தெரிவித்து தேர்தல் தொகுதி இலக்கம் மற்றும் பதிவு இலக்கம் என்பவற்றை அறிந்து கொள்ள முடியும்.

இலங்கை தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப நிறுவனம் மற்றும் தேர்தல் திணைக்களம் என்பன இணைந்து இத்திட்டத்தை முன்னெடுத்துள்ளன.

# புதிய நுளம்பு இனம் கண்டுபிடிப்பு

பொரளை வைத்திய பரிசோதனை நிலையம் இலங்கையில் புதிய நுளம்பு வர்க்கமொன்றை கண்டுபிடித்துள்ளது. நாட்டின் பல பகுதிகளிலும் நுளம்பு குறித்து மேற்கொண்ட பரிசோதனையில் இந்த புதிய நுளம்பு வர்க்கம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொரளை வைத்திய பரிசோதனை நிலையத்தின் பணிப்பாளர் அனில் சமரநாயக்க தெரிவித்தார்.

டெங்கு நுளம்புகள் பரவிக் கிடக்கும் இடங்களில் இந்த புதிய நுளம்பு வர்க்கம் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த புதிய நுளம்பு வர்க்கம் டெங்கு நுளம்பு முட்டைகளை உண்பதாக முதல்கட்ட பரிசோதனையில் கண்டறியப்பட்டுள்ளதென அவர் குறிப்பிட்டார்.

டெங்கு நுளம்பை போல் காணப்படும் இப்புதிய நுளம்பு மனித இரத்தம் உறுஞ்சுகிறதா என இதுவரை கண்டுபிடிக்கப் படவில்லை.

சுமார் 124 ஆண்டுகளுக்குப் பின் இலங்கையில் புதிய நுளம்பு வர்க்கமொன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

மேலும் இலங்கையில் இது வரை 17 வர்க்க நுளம்புகள் கண்டுபிடிக் கப்பட்டுள்ளதாக பொரளை வைத்திய பரிசோதனை நிலையத்தின் பணிப்பாளர் அனில் சமரநாயக்க தெரிவித்தார்.

# ரணிலுக்கு அழைப்பாணை



பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க மற்றும் கட்சியின் செயற்குழு உறுப்பினர்களுக்கு மேன் முறையீட்டு நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது.

செப்ரெம்பர் 16 ஆம் திகதி திங்கட்கிழமை நீதிமன்றில் ஆஜராகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மாகாண சபை உறுப்பினர்களான மைத்திரி குணரத்ன மற்றும் ஷிரால் லக்திலக ஆகியோர் தாக்கல் செய்த மனுவை விசாரித்த மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்த அழைப் பாணையை நேற்று விடுத்துள்ளது.


உள்நாட்டு ,வெளிநாட்டு வேலைவாய்புக்களை வழங்கும்

சிகரம் தொழில் வங்கி

- உலகம் முழுதும் சுற்றியபடி பல இலட்சங்களைச் சம்பாதிக்கும் கப்பல் வேலைவாய்ப்புக்கள்
- UK, Australia, New Zealand, Singapore, Malaysia, China 3ஸ்டார் 5 ஸ்டார் ஹொட்டேல்களில் கௌரவமான வேலைவாய்ப்பு
- 1 இலட்சத்துக்கு மேல் சம்பாதிக்கும் உத்தரவாதம்
- தொழில் உத்தரவாதமான சர்வதேச பல்கலைக்கழகக் கற்கைநெறிகள்

உள்நாட்டில் உங்களுக்கான வேலைவாய்ப்பினை பெற சிகரம் தொழில் வங்கி (Job Bank)

விசேட கருத்தரங்கும், அனுமதிபெற்ற மாணவர்களுக்கான விசா வழங்கலும்

பதிவுகளுக்கு மூந்துங்கள் !

காலம்: 27-07-2013 சனி காலை 9 மணி

இடம்: சிகரம் விரிவுரை மண்டபம்

முற்பதிவுகளுக்கு 0773 616 798

சிகரம் கல்வி - தொழில் வழிகாட்டி

153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (DAMROவுக்கு முன்னால்)

தொ.பே.: 021 222 00 11

மி.அ.:edusikaram@gmail.com web:www.sikaram.lk


# செயலகத்தில் பாதுகாப்பு அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணசபை. தேர்தலுக்கான வேட்புமனுத்தாக்கல் நேற்று ஆரம்பமானதைத் தொடர்ந்து யாழ். செயலகத்தின் சூழல் பகுதிகளில் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை 9.00 மணிக்கு யாழ். செயலகம் அமைந்துள்ள பகுதியில் பொலிஸார் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டிருந்தனர்.

கச்சேரி நல்லூர் வீதி, ஏ9 வீதிகளில் வீதித்தடைகள் வைக்கப்பட்டிருந்ததுடன் பெருமளவிலான பொலிஸாரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

மாவட்ட செயலகத்தினுள் நுழையும் பிரதான பாதை தற்காலிகமாக பொதுமக்களின் பாவனைக்கு தடை விதிக்கப பட்டுள்ளது.

வேட்புமனுத் தாக்கல் செய்வோர் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்ததுடன் விசேட பொலிஸ் அலுவலகமும அறிவித்தல் பலகையும் வைக்கப்பட்டிருந்தது. (இ)

# அரசு பக்கம் தாவல்




பண்டுவஸ்நுவர பிரதேச சபையின் சமன்சிறி பீரிஸ் உள்ளிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் ஆறு உறுப்பினர்கள் அரசாங்கத்திற்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ளனர்.

ஜனக்க திலக்சிறி, நிமல் தயானந்த, ஹேமந்த பல்லேவந்த, தர்சன சம்பத் சூரசிங்ஹ, மனோ குமாரசிங்க ஆகியோர் அரசாங்கத்துடன் இணைவதற்கு தீர்மானித்துள்ளனர்.

அரசாங்கத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் உறுப்பினர்கள் நேற்று ஏற்பாடு செய்திருந்த ஊடகச் சந்திப்பில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

பண்டுவஸ்நுவர பிரதேச சபையில் அங்கம் வகிக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் 8 உறுப்பினர்களில் ஆறு பேரே இவ்வாறு அரசாங்கத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். (ச)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 யூலை 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.